கல்கி



KALKI டிஸம்பர் 16 1951

4 அணா

கல்கி பொருளடக்கம்

மலர் 11 இதழ் 20 | 1951 டிசம்பர் 16 | கர ஆ கார்த்திகை 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 20

மக்கள் சபைக்குத் தக்கவர் இவர்!

இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னால்,—1923-ம் ஆண்டில்,—தற்சமயம் பாகிஸ்தானில் சேர்ந்துள்ள நாபா சமஸ்தானத்திலுள்ள ஜைதோ பட்டணத்தின் வீதிகளில், இரண்டு இந்தியர்களின் கரங்களை இரும்புச் சங்கிலியினால் சேர்த்துப் பிணித்துப் போலீஸார் நடத்தி அழைத்துக் கொண்டு போனார்கள். நாபாவில் அச்சமயம் அகாலி சீக்கியரின் சத்தியாக்கிரஹம் நடந்து கொண்டிருந்தது. போலீஸார் சத்தியாக்கிரஹிகளைப் பயங்கரமாகக் கொடுமைப் படுத்துவதாய்ச் செய்திகள் வந்தன. அதன் உண்மையை ஆராயப்போன இடத்திலேதான் அந்த இரு இந்தியத் தலைவர்களுக்கும் கையில் இரும்புச் சங்கிலி பூணும் பேறு கிடைத்தது. அந்த இரு தேச பக்த வீரர்களில் ஒருவர்தான் பண்டித ஜவாஹர்லால் நேரு; இன்னொருவர் ஸ்ரீ கே. சந்தானம், எம். ஏ., பி. எல்.

தற்போது ஸ்ரீ கே. சந்தானம் இந்திய அரசாங்கத்தின் உதவி ரயில்வே மந்திரி பதவி வகிக்கிறார். இந்திய சர்க்கார் மந்திரிகளில் தமிழ் நாட்டிலிருந்து தேர்தலில் போட்டியிடுகிறவர் இவர் ஒருவர்தான். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கு இவர் போட்டியிடுகிறார்.

தஞ்சை ஜில்லா அறிவாளிகளுக்கும் அரசியல் நிபுணர்களுக்கும் வெகு காலமாகப் பிரசித்தி பெற்றது. இன்று அந்தப் பரம்பரையில் தலைசிறந்த பிரதிநிதியாக விளங்குகிறவர் ஸ்ரீ கே. சந்தானம். தஞ்சை ஜில்லா தேச விடுதலைப் போரில் எப்போதும் முன்னணியில் நின்று வந்திருக்கிறது. தஞ்சை ஜில்லா அளித்த சுதந்திர வீரர்களில் தலைசிறந்த ஒருவர் ஸ்ரீ கே. சந்தானம். 1920-ம் வருஷத்தில் வக்கீல் தொழிலைவிட்டுக் காந்தி மகாத்மாவின் சத்தியாக்கிரஹ சைனியத்தில் சேர்ந்தார். அன்று முதல் ஒவ்வொரு சத்தியாக்கிரஹப் போரிலும் ஈடுபட்டுச் சிறைவாசம் முதலிய கஷ்டங்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நேருஜி சர்க்காரில் உதவி ரயில்வே மந்திரியானார். இந்த மூன்று ஆண்டுகளுக்குள் ரயில்வே நிர்வாகம் பழைய வாசனையே தெரியாதபடி உருமாறி மகத்தான அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இந்த முன்னேற்றத்துக் கெல்லாம் காரணமானவர் உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ கே. சந்தானம் என்பதைப் பண்டித ஜவாஹர்லால் நேருவும் கனம் கோபாலசாமி ஐயங்காரும் மகிழ்ச்சியுடன் பலமுறை வெளியிட்டிருக்கிறார்கள்.

நூறு வருஷமாக ஊழல் மலிந்து துருப்பிடித்திருந்த ஒரு பெரிய ஸ்தாபனத்தில் சீர்திருத்தம் செய்வதென்பது இலேசான காரியமன்று. முயற்சி தொடங்கும்போது சில தகராறுகள் ஏற்படத்தான் செய்யும். முதல் ஆறு மாதத்தில் ஏற்பட்ட இத் தகராறுகளைப் பார்த்துவிட்டுச் சில மேதாவிகள் "ரயில் நிர்வாகம் குட்டிச் சுவராகிறது!" என்று புலம்பினார்கள். அடுத்த இரண்டரை ஆண்டு காலத்தில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகள் அவர்களை வாயடைத்துப் போகும்படி செய்து விட்டன.

சுதந்திர இந்தியாவில் குழப்பத்தை உண்டாக்கி நேரு சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்வதற்குக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ரயில்வே இலாகாவையே பெரிதும் நம்பியிருந்தார்கள். ரயில்வேத் தொழிலாளிகளை வசப்படுத்திக் கொண்டு, அடிக்கடி ரயில் வேலை நிறுத்தங்களை உண்டாக்கி, உணவுப் பொருள் போக்குவரத்தைத் தடைசெய்து, பஞ்சத்தைப் பெருக்கி, கலவரங்களை வளர்த்து, கோடிக்கணக்கான மக்களைச் சாக அடித்து, இந்தியா தேசத்தைப் படுகுழியில் தள்ளிவிட்டு,—பிறகு தோழர் ஸ்டாலின் உதவியினால் நாட்டைக் கைதூக்கி விட்டுக் காப்பாற்றிக் கம்யூனிஸ்ட் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு ரயில்வேக்களையே பெரிதும் நம்பியிருந்தார்கள் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள். அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்

விட்டது. தேசத்தைச் சர்வ நாசமாக்கக்கூடிய அத்தகைய பயங்கரமான நோக்கத்துக்கு ரயில்வேத் தொழிலாளர் இணங்கி வரவில்லை. இதற்கு முக்கியமான காரணம் உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ கே. சந்தானம் அவர்களின் மதி நுட்பமும் அவர் தொழிலாளர் விஷயத்தில் கடைப்பிடித்த தர்ம நியாயமான சமரசக் கொள்கையுமே ஆகும்.

இதனாலேதான் ஸ்ரீ கே. சந்தானம் அவர்களைக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தங்கள் முதல் எதிரியாகக் கருதி அவர் தேர்தலுக்கு நிற்கும் தொகுதியில் தங்கள் பலம் முழுவதையும் திரட்டி உபயோகித்து வருகிறார்கள். அவருக்குப் போட்டி அபேட்சகரை நிறுத்தியிருப்பதோடு, அவர் பார்லிமெண்டுக்கு நிற்கும் பகுதியில் உள்ள ஒவ்வொரு மாகாண சட்டசபைத் தொகுதிக்கும் கம்யூனிஸ்ட் அபேட்சகர்களைப் போட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ கே. சந்தானத்தின் ரயில்வே இலாகா நிர்வாகம் எவ்வளவு திறமை வாய்ந்தது என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் நாம் தேடிப் பார்க்கலாம்; சல்லடை போட்டுச் சலித்துப் பார்க்கலாம்.

அறிவாற்றலிலும் நிர்வாகத் திறமையிலும் மாசு மறுவற்ற தியாக சீலத்திலும் நீடித்த தேசத் தொண்டிலும் ஸ்ரீ கே. சந்தானம் அவர்களைக் காட்டிலும் அதிக தகுதி வாய்ந்த ஒருவரை இந்தியாவின் பார்லிமெண்ட் சபைக்கு நாம் பொறுக்கி அனுப்ப முடியாது.

அத்தகையவர் அவருடைய அருமைத் தலைவர் ராஜாஜியைப்போல் அரசியல் துறவு பூண நினையாமல் இந்தியப் பார்லிமெண்டுக்கு நிற்க முன் வந்தது தமிழ் நாட்டின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். அந்த அதிர்ஷ்டத்தை அறிவிற் சிறந்தவர்களான தஞ்சை ஜில்லா வாசிகள் நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

* * *

சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் அடுத்த ஐந்து வருஷம் மிக முக்கியமானது. வருகிற ஐந்து வருஷ காலத்தில் இந்திய நாட்டின் அயல் நாட்டுக் கொள்கை பூரண பலன் அளித்து உலக வல்லரசுகளுக்கு முன்னே இந்தியா ஒப்பற்ற ஸ்தானத்தை அடைய வேண்டும். உள் நாட்டில் மக்களின் சுபிட்சத்துக்கான திட்டங்கள் சிறந்த முறையில் நிறைவேறி பஞ்சமும் பிணியும் வறுமையும் ஏற்றத் தாழ்வுகளும் பழைய கனவுகள் ஆகிவிட வேண்டும். இந்த இரண்டு நோக்கமும் நிறைவேறுவது பண்டித ஜவாஹர்லால் நேருவின் வீரத் தோள்களுக்கு நாம் அளிக்கும் பலத்தையே பொறுத்திருக்கிறது. இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்குச் சிறந்த அறிவாளிகளும் திறமைசாலிகளும் நேர்மையாளர்களும் நேருஜியுடன் பரிபூரணமாக ஒத்துழைக்கக் கூடியவர்களும் அனுப்பப்பட வேண்டும்.

தமிழ் நாட்டிலிருந்து மக்கள் சபைக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களாகப் பொறுக்கி எடுக்கப் பட்டிருக்கிறவர்கள் மிகப் பெரும்பாலும் மேற்கூறிய குணதிசயங்களைப் படைத்தவர்களாயிருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும் என்பது அரசியல் துறையில் ஒப்புக்கொள்ள முடியாத காரியம். ஆகையால் இன்னும் சில அபேட்சகர்களையும் கவனிக்கலாம்.

சென்னைமா நகரின் அபேட்சகராக ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியைக் காங்கிரஸ் நிறுத்தியிருக்கிறது. சுதந்திர இந்தியாவின் அரசியலுக்குச் சிறந்த முறையில் அடிப்படை அமைத்த தலைமைச் சிற்பிகளில் டி. டி. கே. ஒருவர். அரசியல் நிர்ணய சபை விவாதங்களின் போது டி. டி. கே. யின் புகழ் சிகரத்தை அடைந்தது. சிக்கலான எந்த அரசியல் பிரச்னைகளைத் தீர்க்கும் விஷயத்திலும் நேருஜி முதலிய வட நாட்டுத் தலைவர்கள் டி. டி. கே. யின் ஆலோசனையை விரும்பி ஏற்கிறார்கள். பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீ முத்கல் என்னும் பார்லிமெண்ட் அங்கத்தினர் மீது புகார் எழுந்த போது விசாரணைக் கமிட்டியின் தலைவராக ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நியமிக்கப்பட்டார் என்றால், இதைக் காட்டிலும் புது டில்லியில் அவருடைய மதிப்பு எவ்வளவு என்பதைக் காட்டுவதற்கு வேறு என்ன வேண்டும்!

சென்னை நகருக்கு ஒரு காலத்தில் இந்திய சட்டசபையில் தீரர் சத்தியமூர்த்தி பிரதிநிதியாக இருந்தார். அவரால் சென்னையின் புகழ் அகில இந்தியாவிலும் உயர்ந்து விளங்கியது. அது போலவே ஸ்ரீ டி. டி. கே. சென்னையின் புகழை நிலைநாட்டக் கூடிய பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் விளங்குவார் என்று உறுதியாகச் சொல்லலாம்.

தீரர் சத்தியமூர்த்தியின் பெயரைக்கேட்டதும் அவருடைய வாக்கு வன்மையும் சிம்ம கர்ஜனைப் பிரசங்கங்களும் நேயர்களின் நினைவுக்கு வரும். "அத்தகைய பிரசங்கங்களை இனிக் கேட்கப் போகிறோமா!" என்ற ஏக்கமும் உண்டாகும். அந்த ஏக்கத்தைத் தீர்க்கக் கூடிய மனிதர் ஒருவர் தமிழ் நாட்டில் இப்போது இருக்கிறார் என்றால், அவர் ஸ்ரீ டி. செங்கல்வராயன் அவர்கள் தான். தீரர் சத்தியமூர்த்தியின் முதன்மையான சீடர் அவர். வாக்குவன்மையிலும் விவாதத் திறமையிலும் எதிரிகளுக்குச் சுடச்சுடப் பதில் கொடுக்கும் ஆற்றலிலும் சலியா உழைப்பிலும் தீரர் சத்தியமூர்த்திக்குத் தகுதியான சீடர் அவரைப் போல் வேறு யாரும் இல்லை. ஸ்ரீ செங்கல்வராயன் இந்தியப் பார்லிமெண்டுக்குப் போனால் அங்கே வேறு சில பிரதிநிதிகளைப் போல் தூங்கி வழிவார் என்ற பயம் வேண்டியதில்லை. தூங்குகிறவர்களையும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்து உட்காரச் செய்வார். அத்தகையவர் செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார். அவரால் காஞ்சிபுரம் பெருமையடையப் போகிறது என்பது மிகையாகாது.

இன்னொரு விசேஷம் என்னவென்றால், பழைய இந்திய சட்டசபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் மாமலை போல் விளங்கிய ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாருடன் தீரர் சத்தியமூர்த்தி போட்டியிட்டு மாபெரும் வெற்றியடைந்தார். இன்று ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரின் புதல்வர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி ஸ்ரீ செங்கல்வராயனுடன் போட்டியிடுகிறார். முடிவு என்ன ஆகும் என்று நம்பிக்கையுடன் நாம் எதிர்பார்க்கலாம்.


அகில இந்தியாவிலும் அதற்கு அப்பாலும் பிரசித்தி பெற்ற மற்றொரு தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர் சேலம் ஜில்லா திருச்செங்கோட்டுப் பகுதியிலிருந்து மக்கள் சபைக்கு நிற்கிறார். அவர்தான் டாக்டர் சுப்பராயன். அரசியல் நிர்வாகத் துறையில் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு உள்ளது போன்ற நீண்ட அநுபவம் தமிழ் நாட்டில் தற்சமயம் வேறு யாருக்கும் இல்லை. இந்தோனேஷியாவுக்கு அவர் இந்தியாவின் தூதராகச் சென்றிருந்ததும் இரு நாடுகளுக்கும்

"இமயத்தில் நாம்!"



ஹிமாசலப் பிரதேச சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் காங்கிரசுக்கு மிகப் பெரும்பான்மையான ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன.

உங்களுக்கு யார் வேண்டும்?



ஏற்பட்ட நிலேக உடன்படிக்கையில் நம் சார்பாக கையொப்ப மிட்டதும் நேயர்களுக்கு நினைவிருக்கும். இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்குச் சென்ற அரசாங்கத் தூதர்களில் வெற்றிச் சிறப்புடன் திரும்பி வந்தவர் டாக்டர் சுப்பராயன்.

சேலம் ஜில்லா திருச்செங்கோட்டுப் பகுதி பல விதத்திலும புகழுடைந்தது. அங்கேதான் ராஜாஜி காந்தி ஆசிரமத்தை ஸ்தாபித்துப் பல ஆண்டுகள் வசித்து மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்களை எப்படிச் செயலில் நடத்துவது என்று செய்து காட்டினர். இதனல் காந்தி மகான் அங்கே வந்து சில நாள் தங்கியிருக்கும் பாக்கியத்தைத் திருச்செங்கோடு அடைந்தது. இப்போது டாக்டர் சுப்பராயன் அவர்களைப் பார்லிமெண்டுக்குப் பிரதிநிதியாக அனுப்புவதன் மூலம் திருச்செங்கோடு மேலும் சிறப்பு அடையப் போகிறது.

சேலம் ஜில்லாவின் மற்றொரு பகுதியான கிருஷ்ணகிரியிலிருந்து ராஜாஜியின் புதல்வர் ஸ்ரீ சி. ஆர். நரசிம்மன் மக்கள் சபைக்கு நிற்கிறர். ஸ்ரீ நரசிம்மனின் சின்னஞ்சிறு வயதில் அவருடைய தந்தை தியாக வாழ்க்கையை மேற்கொண்டார். அது முதல் ஸ்ரீ நரசிம்மன் தந்தையின் மகத்தான தேசத் தொண்டுகளில் எல்லாம் உடனிருந்து உதவி வந்திருக்கிறர். காந்தி ஆசிரமத்தில் கதர்த் தொண்டு புரிந்தார்; உப்பு சத்தியாக்கிரஹத்தில் சிறை புகுந்தார். அதன் பிறகு தந்தை அரசியல் துறையிலிருந்து அஞ்ஞாதவாசம் செய்த போதும் சரி, சென்னேப் பிரதம மந்திரியாக இருந்த போதும் சரி, இந்தியா சுதந்திரமடைந்த பிறகு ராஜாஜி பெரிய பெரிய பதவிகளே வகித்த போதும் சரி, இடைவிடாமல் தந்தையின் அருகில் இருந்து சம்பளமில்லாத காரியதரிசியாகச் சோர்வின்றி வேலே செய்து வந்திருக்கிறர். இந்தக் காலங்களில் ஸ்ரீ சி. ஆர். நரசிம்மன் அடைந்துள்ள அரசியல் அநுபவமும் நிர்வாகத் திறமையும் தேசத்துக்குப் பயன்படப் போகிறது என்பதை எண்ணும் போது நமக்குக் குதூகலம் உண்டாகிறது. சேலம் ஜில்லா வாசிகள் இரட்டிப்பு அதிர்ஷ்டசாலிகள் என்பதில் ஐயம் இல்லே.

செந்தமிழ் நாடு பல துறைகளில் பிற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக இருப்பது போல் பெண்களுக்கு உயர்வு தருவதிலும் முன்னல் நின்று வருகிறது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று பாடியவர் மகாகவி பாரதியார் அல்லவா! அந்த மகா கவி வாக்கை நிறைவேற்றி வைத்து வருகிறவர்களில் ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் ஒருவர். இந்திடப் பார்லிமெண்டில் அங்கத்தினராயிருந்து அவர் செய்திருக்கும் தொண்டு இந்தியப் பெண் குலத்துக்கே பெருமை தந்திருக்கிறது. இந்தப் பொதுத் தேர்தலில் ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் திண்டுக்கல் தொகுதியில் நிற்கிறர். தமிழ் நாட்டிலேயே அதிகமான போகசாலிகள் திண்டுக்கல் தொகுதி வாக்காளர்தான் என்று சொல்ல வேண்டும். ஜனவரி மாதக் கடைசியில்,

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!"

என்ற பாரதியாரின் கீதம் அப்பகுதியில் வானளாவி ஒலிக்கும் என்று எதிர்பார்க்கிறேம்.

இன்னும் கொஞ்சம் தெற்கே சென்று பார்த்தால், ராமநாதபுரம் ஜில்லா ஸ்ரீ வில்லிபுத்தூர் தொகுதியிலிருந்து தமிழ் நாட்டுக் காங்கரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ நாடார் பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நிற்கிறர். அரசியல் உலகத்தில்

ஸ்ரீ காமராஜின் திறமை எவ்வளவு அபாரமானது என்பதை நெடுகிலும் பார்த்து வந்திருக்கிறோம். இந்தப் பொதுத் தேர்தலில் அத்திறமை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. மற்றும் பல மாகாணங்களில் இந்தப் பொதுத் தேர்தல் காரணமாகக் காங்கிரஸ் வாதிகளுக்குள் பெரிய சிறிய பிளவுகள் பற்பல ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். உத்தரப் பிரதேசம், வங்காளம், ஆந்திரம் முதலிய மாகாணங்களில் நேற்றுவரை காங்கிரஸ்வாதிகளாயிருந்தவர்கள் பிரிந்து சென்று சம பலத்துடன் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்க்கும் அலங்கோலத்தைப் பார்க்கிறோம். ஆனால் தமிழ் நாட்டில் அத்தகைய பெரும் பிளவு ஏற்படாமல் ஸ்ரீ காமராஜ் சமாளித்துக் கொண்டிருக்கிறார். சமரச மனப்பான்மையுடன் வேற்றுமைகளைச் சரிப்படுத்திக் கொண்டு போக அவர் பெரு முயற்சி செய்ததினாலேயே இந்த நல்ல நிலைமை இன்று இங்கே காணப்படுகிறது. இந்தியாவிலேயே காங்கிரஸுக்குப் பெருமிதமான வெற்றி தமிழ் நாட்டிலேதான் ஏற்படப் போகிறது என்று எதிர்பார்க்கவும் இடமிருக்கிறது. இதற்குப் பெரிதும் காரண புருஷரான ஸ்ரீ காமராஜ் இந்தியப் பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நிற்கிறார். அவருடைய அரசியல் நிபுணத்துவம் தமிழ் நாட்டுக்கு மன்றி இனி இந்தியா தேசத்துக்கே பயன்படக் கூடும் என்பது மகிழ்ச்சி தரும் விஷயம்.

மற்றும் செங்கற்பட்டில் ஸ்ரீ ஓ. வி. அளகேசன், வேலூரில் ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரி, தர்மபுரியில் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் (சுப்ரி), திருப்பூரில் ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம், திருச்சியில் ஸ்ரீ என். ஹாலாஸ்யம், பெரிய குளத்தில் ஸ்ரீ சக்தி வடிவேல் கவுண்டர், — இப்படி தேசத்தொண்டில் நீடித்து நிலைத்து நின்று வரும் அறிவாளிகளும் திறமையாளர்களும் காங்கிரஸ் அபேட்சகர்களாக நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

மொத்தமாகப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலிருந்து இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் அபேட்சகர்கள் பலவகையிலும் சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் தமிழ் மக்களின் நலத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கக் கூடியவர்கள், தமிழ் நாட்டுக்குச் சலிப்பின்றித் தொண்டு செய்யக் கூடியவர்கள்; தமிழகத்தின் பெருமையை நிலை நாட்டக் கூடியவர்கள். மற்றக் கட்சி அபேட்சகர்களும் சுயேச்சையாக நிற்பவர்களும் எந்த விதத்திலும் காங்கிரஸ் அபேட்சகர்களுடன் ஒப்பிடக் கூடியவர்கள் அல்ல.

ஆகையால் தமிழ்ப் பெருமக்கள் இந்தியப் பார்லிமெண்டின் மக்கள் சபைக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே பெருமிதமான வோட்டுக்களை அளித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

“நரிகள் துரத்துகின்றன !”

ஐக்கிய நாடுகள் சபை என்ற உலக மகா அரங்க மேடையில் பேசுவதற்குச் சிறிய நாடுகளுக்குச் சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. ஏனெனில் அந்தச் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் வல்லரசுகளின் வாய்ப்பேச்சு ஓய்ந்தால்தானே !

அமெரிக்கப் பிரதிநிதி பேசினால், அதைப் பிரிட்டிஷ் பிரதிநிதி ஆதரிப்பார். அந்த இருவர் கூற்றையும் ருஷ்யப் பிரதிநிதி வன்மையாகக் கண்டிப்பார். மேற்படி சபையின் கூட்டங்களில் இதே வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இந்த வழக்கத்துக்கு விரோதமாகச் சில தினங்களுக்கு முன் ஒரு சம்பவம் நிகழ்ந்தது !

ஐ. நா. சபையின் கூட்டம் இந்தத் தடவை பாரிஸ் நகரில் நடந்து வருகிறது. ''உலக சமாதானத்துக்குப் போர்த் தளவாடங்களைக் குறைக்க வேண்டியது அவசியம்'' என்பதை அந்தக் கூட்டத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ், ருஷ்யப் பிரதிநிதிகள் வற்புறுத்தி வருகிறார்கள்.

அவ்வாறு வற்புறுத்துவதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்ட அமெரிக்க உள் நாட்டு மந்திரி டீன் அக்கிஸன், பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரி அந்தோனி ஈடன் முதலிய பிரதிநிதிகள் சமீபத்தில் ரோம் நகரில் நடைபெற்ற வல்லரசுப் பிரதிநிதிகளின் மகாநாட்டுக்குச் சென்று விட்டார்கள். அங்கு அவர்கள் ''உலக சமாதானத்துக்குப் போர்த் தளவாடங்களைப் பெருக்க வேண்டியது அவசியம்'' என்பதை வற்புறுத்தினார்கள் !

அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ரோம் மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோதுதான், உலக மகா சபையில் சிறிய நாடுகளுக்குத் தங்களுடைய குறைகளைச் சொல்லிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. கிடைப்பதற்கரிய அந்தச் சந்தர்ப்பத்தைச் சிறிய நாடுகளின் பிரதிநிதிகள் நழுவ விடவில்லை. நீண்ட காலமாகத் தங்களுக்கு இருந்த ஆத்திரம் தீர அந்தச் சபையில் பேசித் தீர்த்து விட்டார்கள்.

யெமன் நாட்டை அடுத்துள்ள ஏடன் பிரதேசத்தில் இருந்துவரும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று யெமன் நாட்டுப் பிரதிநிதி அடித்துப் பேசினார். கிரீஸ் தேசத்தை அடுத்துள்ள சைப்ரஸ் தீவு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருப்பதைக் கிரீஸ் பிரதிநிதி காரசாரமாகக் கண்டித்தார். சூயஸ் கால்வாயிலிருந்தும் சூடான் பிரதேசத்திலிருந்தும் பிரிட்டிஷார் வெளியேறி விடவேண்டும் என்று எகிப்துப் பிரதிநிதி இறுதி எச்சரிக்கை விடுத்தார். மற்றும் பல சிறிய நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளைச் சேர்ந்த பிரதேசங்களில் வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தும் அநீதியைச் சுட்டிக் காட்டின.

எதிர்பாராத விதமாகச் சிறிய நாடுகள் அவ்வாறு சீறுவதைக் கண்டதும் பிரஞ்சுப் பிரதிநிதிகள் அந்தச் சபையிலிருந்து வெளியேறினர். ''நம்மை இந்த நரிகள் இப்படித் துரத்துகின்றனவே !'' என்று பிரிட்டிஷ் பிரதிநிதி அங்கலாய்த்தார்.

மற்ற சிறிய நாடுகளின் பிரதிநிதிகளைப்போல் எகிப்துப் பிரதிநிதி வாய்க் கண்டனத்துடன் நிற்கவில்லை. பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் ஏற்பட்டுள்ள தகராறு இப்போது முற்றிவிட்டது.

எகிப்து சர்க்காரில் வேலை பார்க்கும் சகல பிரிட்டிஷ் அதிகாரிகளையும் விலக்கிவிட எகிப்து சர்க்கார் தீர்மானித்து விட்டனர். பிரிட்டனுடன் ராஜரீகத் தொடர்பைக் கத்தரித்துக் கொண்டு விடவும் எகிப்து சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். போருக்குப் பூர்வாங்கமான இந்தக் காரியங்கள் எல்லாம் எதில் வந்து முடியுமோ ! முன்பு பிரிட்டிஷ் சிங்கம் சிறிய நாடுகளான நரிகளைத் துரத்தியது. இப்போது அந்த நரிகள் சிங்கத்தைத் துரத்துகின்றன. சிங்கத்துக்கு ஒரு காலம் வந்தாலும் நரிக்கு ஒரு காலம் வரும் அல்லவா !

அத்தியாயம் 50

"ஆபத்துதவிகள்"



இளவரசரைப் படகிலே பார்த்ததும் பார்த்திபேந்திரனுக்கு உண்டான ஆச்சரியம் சொல்லத் தரமன்று. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து தரிசனம் தந்ததுமல்லாமல் "வேண்டிய வரங்களைக் கேள்" என்று சொன்னது போலல்லவா இருக்கிறது?—எனினும், இப்படி அவர் தனியாகப் படகில் வருவதன் காரணம் என்ன? பழுவேட்டரையர்களின் கப்பல்கள் என்ன ஆயின?......தன்னுடைய கப்பல் இது என்று தெரியாமல், ஒருவேளை இதுதான் அவரைச் சிறைப்படுத்த வந்த கப்பல் என்று எண்ணிக் கொண்டு வருகிறாரோ?

அப்படியெல்லாம் தவறான எண்ணத்துடன் வரவில்லையென்று விரைவிலேயே தெரிந்துபோயிற்று. படகிலிருந்து கப்பலில் இளவரசர் ஏறியதும் பார்த்திபேந்திரன் கேட்கும் வரையில் காத்திராமல் நடந்த சம்பவங்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டார். "அராபியர் வசப் பட்ட கப்பலில் வந்தியத்தேவன் இருக்கிறான். அவனை எப்படியாவது தப்புவித்தாக வேண்டும்" என்றார்.

இளவரசர் கூறிய செய்திகள் பார்த்திபேந்திரனுக்கு மிக்க குதூகலத்தை உண்டாக்கின.

"எல்லாம் நன்றாகத்தான் முடிந்திருக்கின்றன. அந்த முரட்டுப் பிள்ளை இவ்வளவு பதட்டமாகக் காரியம் செய்யாதிருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும். ஆயினும் அவனை அயல் நாட்டாரிடம் காட்டிக் கொடுத்து விடக்கூடாது. அந்தக் கப்பல் வெகுதூரம் போயிருக்க முடியாது. எப்படியும் துரத்திப் பிடித்து விடலாம்" என்றான்.

பிறகு கலபதியைக் கூப்பிட்டு விவரத்தைக் கூறினான்.

"அதைப்பற்றி என்ன கவலை? காற்று இப்படியே அநுகூலமாக அடித்துக் கொண்டிருந்தால் சாயங்காலத்துக்குள் பிடித்து விடலாம்! நம்மைத் தப்பி அந்தக் கப்பல் எங்கே போய்விடப் போகிறது? கோடிக்கரை சென்று பிறகு கடற்கரையோரமாகத் தானே போக வேண்டும்?" என்றான் கலபதி.

ஆனால் வாயுபகவானுடைய திருவுள்ளம் வேறுவிதமாயிருந்தது. வரவரக் காற்றின் வேகம் குறைந்து வந்தது. உச்சிவேளை ஆனதும் காற்று அடியோடு நின்று விட்டது. கடல் அலை என்பதே இன்றி அமைதியடைந்திருந்தது. சொல்ல முடியாத புழுக்கம் சூழ்ந்தது. சூரிய பகவான் வானத்தில் ஜோதிப் பிழம்பாக விளங்கிக் கடல்மீது தீயைப் பொழிந்தார். கடல் நீர் தொட்டுப் பார்த்தால் சுட்டிராதுதான். ஆயினும் கடலைப் பார்க்கும்போது தண்ணீர்க் கடலாகத் தோன்றவில்லை; நன்றாகக் காய்ச்சிக் கொதித்துப் புகை எழும்பும் எண்ணெய்க் கடல் போலத் தோன்றியது. சூரிய கிரணங்கள் நேரே பிரதிபலித்த இடங்களில் உருக்கிய அக்கினிக் கடலாகவும் காணப்பட்டது.

கப்பல் அசையவில்லை. பாய் மரங்களிலிருந்து எல்லாப் பாய்களும் நன்றாக விரிக்கப்பட்டிருந்தன. பயன் என்ன? அலை ஓசை நின்றதுபோல் பாய் மரங்கள் சடசடவென்று அடித்துக் கொள்ளும் ஓசையும் நின்று விட்டது. பாய் மரங்களும் தூண்களும் குறுக்கு விட்டங்களும் அசையும்போது ஏற்படும் கறமுற சத்தமும் இல்லை. கப்பல் கடலைக் கிழித்துச் செல்லும் ஓசையும் இல்லை. உண்மையில் அந்த நிச்சப்தம் சகிக்க முடியாத வேதனையை அளித்தது.



அத்துடன் இளவரசரின் உள்ளத்தில் வந்தியத்தேவனைப்பற்றியவேதனையும் மிகுந்தது.

"இப்படிக் காற்று நின்று கப்பலும் அடியோடு நின்று விட்டதே! இப்படியே எத்தனை நேரம் இருக்கும்? காற்று எப்போது மறுபடி வரும்? அந்தக் கப்பல் தப்பித்துக் கொண்டு போய் விடாதா?" என்றுகவலையுடன்கேட்டார்.

பார்த்திபேந்திரன் நாவாயின் நாயகனை நோக்கினான்.

அப்போது கலபதி "அதிக நேரம் இப்படியே காற்று அடியோடு ஓய்ந்து இருக்க முடியாது. சுழிக் காற்று எங்கேயோ உருவாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் அது வந்து நம்மைத் தாக்கினாலும் தாக்கும்; அல்லது நம்மை ஒதுக்கி விட்டு விட்டு அப்பால் போனாலும் போய்விடும். நம்மைச் சுழிக் காற்றுத் தாக்கினாலும் தாக்காவிட்டாலும் கடல் சீக்கிரத்தில் கொந்தளிக்கப் போவது நிச்சயம். இப்போது இவ்வளவு அமைதி குடிகொண்டிருக்கிறதல்லவா? இன்று இரவுக்குள் மலை போன்ற அலைகள் எழுந்து மோதுவதைப் பார்ப்போம். மலைகளையும் பார்ப்போம்; அதல பாதாளத்தையும் பார்ப்போம்!" என்றான்.

"சுழிக்காற்று கப்பலைத் தாக்கினால் அபாயந்தான் அல்லவா?"

"சாதாரண அபாயமா? கடவுள் காப்பாற்றினால்தான் உண்டு!"

"அப்படியானால் அந்தக் கப்பலை நாம் பிடிப்பது துர்லபம்."

"இளவரசே! கடலும் காற்றும் பட்சபாதம் காட்டுவதில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை தான் அந்தக் லுக்கும் ஏற்பட்டிருக்கும். தற்சமயம் அதுவும் அசையாமல் தான் நிற்கும்..."

"ஒரு வேளை கரை யோரம் சென்றிருந்தால்........." என்று இளவரசர் கேட்டார்.

"கரை யோரம் போயிருந்தால் அதில் உள்ளவர்கள் இறங்கிக் கரை சேர்ந்து தப்பிக்கலாம்! ஆனால் கப்பல் போனதுதான்!" என்று சொன்னான் கலபதி.

"எவ்வளவு பெரிய அபாயமாயிருந்தாலும் நமக்கு வேண்டியவர்கள் நம் பக்கத்திலிருந்தால் கவலையில்லை!" என்றார் இளவரசர். அவருடைய மனக்கண் முன்னால் வந்தியத் தேவனுடைய குதூகலம் ததும்பும் முகமும் பூங்குழலியின் மிரண்ட பார்வையுடைய முகமும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. அவர்கள் இச்சமயம் எங்கே இருப்பார்கள்? என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என்ன எண்ணிக் கொண்டிருப்பார்கள்?

* * *

உண்மையிலேயே அபாயம் சூழ்ந்த நிலையில் நாம் விட்டுவிட்டு வந்த வந்தியத் தேவனிடம் இப்போது நாம் செல்வோம்.

இளவரசரைச் சிறைப் பிடித்துக் கொண்டு போவதற்காக வந்த பெரிய மரக்கலத்தின் அடித் தட்டில், தட்டு முட்டு சாமான்களும் மரக் கட்டைகளும் மூட்டை முடிச்சுகளும் போட்டிருந்த இருண்ட அறையில், அவன் ஒரு கட்டையுடன் சேர்த்துக் கட்டப்பட்டுக் கிடந்தான். வெகு நேரம் வரையில் அவன் பிரமை பிடித்தவன் போலிருந்தான். அவசர புத்தியினால் இத்தகைய இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டோமே என்ற எண்ணம் அவனை வதைத்தது. இது என்ன கப்பல், யாருடைய கப்பல், இதில் சில முரட்டு அராபியர்களும் மந்திரவாதி ரவிதாஸனும் சேர்ந்திருப்பது எப்படி, இந்தக் கப்பல் எங்கே போகிறது, தன்னை என்னதான் செய்வார்கள் என்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் தன் வருங்காலத்தைப் பற்றிக் கண்டு வந்த கனவெல்லாம் உண்மையில் கனவு தான் போலும்! இதைவிடப் பெரிய கஷ்டங்களிலிருந்தெல்லாம் தான் தப்பித்திருக்கும் போது இதிலிருந்து தப்பிக்கவும் ஒரு வழி கிடைக்காமலா போகும் என்ற சபல

மும் சில சமயம் ஏற்பட்டது. பார்க்கலாம்; உடம்பில் உயிர் இருக்கும் வரையில், அறிவும் ஆலோசனைத் திறனும் இருக்கும் வரையில், அடியோடு நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

இந்த ஆசை தோன்றிய பிறகு சுற்று முற்றும் பார்த்தான். இருட்டில் முதலில் கண் தெரியவில்லை. வரவரத் தெரியலாயிற்று. அவனுக்குச் சமீபத்திலேயே பல வகை ஆயுதங்கள் குவிந்து கிடப்பதைக் கண்டான். அவனுடைய உடம்பை இறுக்கிக் கட்டியிருந்ததே தவிரக் கைகள் இறுக்கிக் கட்டப்படவில்லை. கைக் கட்டைத் தளர்த்திக் கொண்டு ஒரு கையை நீட்டி அங்கே கிடந்த கத்திகளில் ஒன்றை எடுக்கலாம்; உடம்பையும் கால்களையும் பிணைத்திருந்த கயிறுகளை அறுத்து விடலாம். ஆனால் பிறகு என்ன செய்வது? இந்த அறைக் கதவோ சாத்தப் பட்டிருக்கிறது. இதிலிருந்து வெளியில் போவது எப்படி? போன பிறகு அவ்வளவு அராபியர்களுடனும் மந்திரவாதியுடனும் அவன் தோழனுடனும் சேர்ந்தாற் போல் சண்டை போட முடியுமா?—அப்படிச் சண்டை போட்டு எல்லாரையும் கொன்று விட்டாலும் அப்புறம் என்ன பண்ணுவது? கப்பலைத் தன்னந் தனியாகத் தன்னால் செலுத்த முடியுமா? கப்பலைப் பற்றிய சமாசாரம் ஒன்றுமே தனக்குத் தெரியாதே!

ஆம்; மறுபடியும் அவசரப்படக் கூடாது; பொறுத்திருந்து பார்க்க வேண்டும். தன்னை உடனே கொல்ல முயலாமல் அவர்கள் கட்டிப் போட்டிருப்பதே கொஞ்சம் நம்பிக்கைக்கு இடமளிக்கிறதல்லவா? என்னதான் செய்யப் போகிறார்கள், பார்க்கலாமே?

ஆனால் நேரமாக ஆக, வந்தியத்தேவனுடைய பொறுமை பெரிதும் சோதனைக்காளாயிற்று. அடுப்புக்குள் போட்டு அவனை வேக வைப்பதுபோல் அந்த அறை அவ்வளவு புழுக்கமா யிருந்தது. உடம்பில் வியர்வை வியர்த்துக் கொட்டியது. கடற் பிரயாணம் இவ்வளவு வெதுப்புவதா யிருக்கும் என்று அவன் கனவிலும் எண்ணியதில்லை. பூங்குழலியுடன் அன்றிரவு படகில் சென்றதை நினைத்துக் கொண்டான். அப்போது எப்படிக் குளிர் காற்று வீசிற்று? உடம்புக்கு எவ்வளவு இதமா யிருந்தது? அதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்? கண்ணும்புக் காளவாயில் போடுவது என்பார்களே, அது போல அல்லவா இருக்கிறது?

திடீரென்று ஏதோ ஒரு மாறுதலை அவன் உணர்ந்தான். ஆம்; கப்பலின் ஆட்டம் நின்றுவிட்டது. கப்பல் நகராமல் நின்ற நிலையில் நிற்பதாகத் தோன்றியது. புழுக்கம் இன்னும் அதிகமாயிற்று. தாகம் மிகுந்து நாவும் தொண்டையும் வறண்டன. ஏது? இனி வெகு நேரம் பொறுக்க முடியாது. கத்தியை எட்டி எடுத்து, கட்டுக்களை அறுத்துக் கொண்டு, புறப்பட்டுப் போய்ப் பார்க்க வேண்டியதுதான். கப்பலில் எங்கேயாவது குடி தண்ணீர் வைத்திராமலா இருப்பார்கள்?

வந்தியத்தேவன் சுற்று முற்றும் பார்த்தான். ஒரு மூலையில் சில தேங்காய்கள் கிடந்தன. ஆகா! வெண்ணெய் இருக்க நெய்க்கு அழுவானேன்? அந்தத் தேங்காய்களைக் கொண்டு பசி, தாகம் இரண்டையும் தீர்த்துக் கொள்ளலாமே?

கையின் கட்டுக்களை வந்தியத்தேவன் நன்றாய்த் தளர்த்தி விட்டுக் கொண்டான். கத்தியை எட்டி எடுக்கக் கையை நீட்டியும் விட்டான்.

அச்சமயம் காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறக்கும் சத்தமும் கேட்டது. நீட்டிய கையை மடக்கிக் கொண்டான்.

முன்னொரு தடவை வந்து விட்டுப் போன மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் உள்ளே வந்தார்கள். இருவரும் வந்தியத்தேவனுக்கு இரு புறத்திலும் நின்று கொண்டார்கள்.

"கப்பல் பிரயாணம் எப்படி, அப்பா! சுகமா யிருக்கிறதா?" என்று ரவிதாஸன் கேட்டான்.

வந்தியத்தேவன் "தாகம் கொல்லுகிறது; கொஞ்சம் தண்ணீர்!" என்று பேச முடியாமல் பேசினான்.

"ஆ! எங்களுக்கும் தாகந்தான். அந்தப் பாவிகள் கப்பலில் தண்ணீர் வைக்கவில்லையே?" என்றான் ரவிதாஸன்.

"காளிக்கு எல்லாரையும்விட அதிக தாகமா யிருக்கிறது. இரத்த தாகம்!" என்றான் இன்னொருவன்.

வந்தியத்தேவன் திரும்பி அவனை உற்றுப் பார்த்தான்.

"என்னை ஞாபகமில்லையா, தம்பி! மறந்து விட்டாயா? கடம்பூர் அரண்மனையில் குரவைக் கூத்துக்குப் பிறகு தேவராளன் வந்து வெறியாட்டம் ஆடினானே? 'காளித்தாய் பலி கேட்கிறான்; ஆயிரம் வருஷத்து அரச குல இரத்தம் கேட்கிறான்' என்று ஆவேசம் வந்து சொன்னானே?......"

"ஆ! இப்போது ஞாபகம் வருகிறது! நீதான் அந்தத் தேவராளன்!" என்று வந்தியத்தேவன் முணு முணுத்தான்.

"ஆமாம்; நான்தான்! ஆயிரம் வருஷத்து அரசகுமாரனைக் காளிக்குப் பலி கொடுக்கலாம் என்றுதான் இலங்கைக்கு வந்தோம். அது சாத்தியப்படவில்லை. அந்த வீர வைஷ்ணவனை வைகுண்டத்துக்கு அனுப்பப் பார்த்தோம். அதுவும் முடியவில்லை. நீயாவது வலுவில் வந்து சேர்ந்தாயே? மிக்க சந்தோஷம். இப்போதைக்குக் குறுநில மன்னர் குலத்து இரத்தத்தோடு காளி திருப்தி அடைய வேண்டியதுதான்!" என்றான் தேவராளன்.

"அப்படியானால் ஏன் தாமதிக்கிறீர்கள்?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"வீர வாலிபனாகிய உன்னைக் கண்ட இடத்தில் பலி கொடுத்து விடலாமா! கரை சேர்ந்த பிறகு எல்லாரப் பூசாரிகளையும் அழைத்து உற்சவம் கொண்டாடியல்லவா பலி கொடுக்க வேண்டும்? முக்கியமாகப் பூசாரிணி வரவேண்டுமே?"

"பூசாரிணி யார்?"

"யார் என்று உனக்குத் தெரியாதா? பழுவூர் இளைய ராணிதான்!"

வந்தியத் தேவன் சிறிது யோசித்து விட்டு, "உங்களுக்கு உண்மையில் அத்தகைய எண்ணம் இருந்தால் உடனே கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். இல்லாவிடில் இங்கேயே தாகத்தினால் செத்துப் போவேன்!" என்றான்.

"தண்ணீர் இல்லையே, தம்பி!"

"நீதான் மந்திரவாதியாயிற்றே?"

"நன்றாகச் சொன்னாய்! மந்திரம் போட்டிருக்கிறேன், பார்! இப்போது கப்பல் அசையாமல் நிற்கிறது தெரிகிறதல்லவா? இரவுக்குள் சுழற் காற்று அடிக்கப் போகிறது. மழையும் வரும்!"

"மழை வந்தால் எனக்கு என்ன பயன்? நீங்கள் மேல் தட்டில் இருப்பீர்கள்! நான் இங்கே......"

"நீயும் மேல் தட்டுக்கு வரலாம். நாக்கை நீட்டி நீர் அருந்தித் தாகத்தைப் போக்கிக் கொள்ளலாம். நாங்கள் சொல்கிறபடி கேட்பதாயிருந்தால்......"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"அந்த அராபியப் பிசாசுகளைச் சமுத்திரராஜனுக்குப் பலி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்."

"ஏன்?"

"அவர்கள் கலிங்க நாட்டுக்கு இந்தக் கப்பலைக் கொண்டு போக வேண்டும் என்கிறார்கள். நாங்கள் கோடிக்கரையிலாவது நாகப்பட்டினத்திலாவது இறங்க வேண்டும் என்கிறோம்......"

"அவர்கள் ஆறு பேர், அதோடு பெரும் முரடர்களாயிருக்கிறார்களே?"

"அவர்களில் மூன்று பேர் தூங்குகிறார்கள்; மற்ற மூன்று பேர் உறங்கி வழிகிறார்கள். நாம் மூன்று பேரும் தூங்குகிற மூன்று பேரையும் முதலில் வேலை தீர்த்துவிட்டால், அப்புறம் மூன்று பேருக்கு மூன்று பேர் சமாளிக்கலாமே?"

வந்தியத் தேவன் சும்மாயிருந்தான்.

"என்ன, தம்பி, சொல்கிறாய்? எங்கள் யோசனைக்குச் சம்மதித்தால் உன் கட்டை அவிழ்த்து விடுகிறோம்."

இளவரசரின் முகம் வந்தியத்தேவன் மனக் கண் முன்னால் வந்து நின்றது. ஆம்; அவர் இதை ஒப்புக் கொள்ள மாட்டார். தூங்குகிறவர்களைக் கொல்வதற்கு ஒருநாளும் உடன்பட மாட்டார்.

"என்னால் முடியாது; தூங்குகிறவர்களைத் தாக்கிக் கொல்வது நீசத்தனம்."

"முட்டாளே! சோழநாட்டு மாலுமிகள் தூங்கிக் கொண்டிருந்தபோதுதான் இந்த அராபியர்கள் அவர்களைத் தாக்கிக் கொன்றார்கள்."

"மற்றவர்கள் இழிவான செயல் புரிந்தால் நானும் அவ்வாறு ஏன் செய்ய வேண்டும்?"

"சரி; உன் இஷ்டம்!" என்றான் ரவிதாஸன். அருகில் கிடந்த ஆயுதக் கும்பலிலிருந்து ஒரு கூரிய பட்டாக் கத்தியை அவன் எடுத்துக் கொண்டான். தேவராளனோ, நுனியில் இரும்புப் பூண் கட்டியிருந்த சிறிய உலக்கை போன்ற தடியை எடுத்துக் கொண்டான்.

இருவரும் அங்கிருந்து சென்றார்கள். ஆனால் அறையின் கதவைச் சாத்தி வெளியில் தாள் போடவில்லை.

அவர்கள் போன உடனே வந்தியத் தேவன் கையை நீட்டிக் கத்தி ஒன்றை எடுத்துத் தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துக் கொண்டான். குதித்து எழுந்து சென்று, மூலையில் கிடந்த தேங்காய் ஒன்றை எடுத்து உடைத்தான். இளநீரை வாயில் விட்டுக் கொண்டான். மிச்சமிருந்த தேங்காய்களை ஒரு சாக்கைப் போட்டு மூடினான்.

பிறகு, போருக்குத் தகுதியான நல்ல வாள் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். எந்த நிமிஷத்திலும் வெளியில் பாய்ந்து செல்வதற்கு ஆயத்தமாயிருந்தான்.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் 'தட்' 'தட்' என்று இருமுறை சத்தம் கேட்டது. இரு உடல்கள் கடலில் எறியப்பட்டன என்று அறிந்து கொண்டான். உடனே பயங்கரமான பெருங் கூச்சல்; கை கலப்பு. கத்திகள் மோதும் சத்தம்.—எல்லாம் மேல் தட்டிலிருந்து வந்தன.



வந்தியத்தேவன் கையில் பிடித்த கத்தியுடன் பாய்ந்தோடினான். ரவிதாஸனையும் தேவராளனையும் மற்ற நாலு அராபியர்களும் தாக்கி நெருக்கிக் கொண்டிருந்தார்கள். நெருக்கப்பட்டவர்களின் நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தது. வந்தியத்தேவன் பெருங் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடினான். அராபியர்களில் ஒருவன் திரும்பி அவனைத் தாக்க வந்தான். வந்தியத் தேவனுடைய கத்தி அராபியனுடைய கத்தியைத் தாக்கி அது கடலில் போய் விழச் செய்தது; அராபியனுடைய முகத்தில் ஒரு வெட்டுக் காயத்தையும் உண்டாக்கிற்று. இரத்தம் வழிந்த பயங்கர முகத்தையுடைய அராபியன் கை முட்டியை ஓங்கிக் கொண்டு வந்தியத் தேவனுடைய மார்பில் குத்த வந்தான். வந்தியத் தேவன் சிறிது நகர்ந்து கொண்டான். அராபியன் தடா லென்று விழுந்தான். அவன் விழுந்த வேகத்தினால் இடம் பெயர்ந்த பாய் மரக் குறுக்குக் கட்டை ஒன்று அவன் தலையில் படார் என்று விழுந்தது.

இன்னொரு அராபியனோடு வந்தியத் தேவன் சிறிது நேரம் துவந்த யுத்தம் செய்து அவனைக் கடலில் தள்ளினான்.

மந்திரவாதி ரவிதாஸனும் தேவராளனும் போர்த்திறமை வாய்ந்தவர்கள் அல்ல. ஆகையால் அராபியர் இருவருடன் தனித்தனி சண்டை போடுவதே அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. நேரமாக ஆகக் களைப்படைந்து வந்தார்கள். அச்சமயம் கடலில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டு அராபியர் இருவரும் தங்கள் தோழர்களின் கதி என்னவோ என்று திரும்பிப் பார்த்தார்கள். அதுதான் சமயம் என்று ரவிதாஸனும் தேவராளனும் அவர்களைத் தீர்த்துக் கட்டினார்கள்.

எல்லாம் முடிந்ததும் வெற்றி பெற்ற மூவரும் இளைப்பாற உட்கார்ந்தார்கள்.

"அப்பனே! நல்ல சமயத்தில் வந்தாய்! எப்படி வந்தாய்?" என்று கேட்டான் ரவிதாஸன்.

"நீ ஏதோ மந்திரம் போட்டாய்போலிருக்கிறது. என்னைக் கட்டியிருந்த கட்டுக்கள் தாமாகவே அவிழ்ந்து கொண்டன. கையில் இந்தக் கத்தி வந்து ஏறியது!" என்றான் வந்தியத்தேவன்.

"உன் தாகம் என்ன ஆயிற்று?"

"தேங்காய் ஒன்று என் தலைக்கு மேலாக வந்தது. அதுவாக உடைத்துக் கொண்டு என் வாயில் கொஞ்சம் இளநீரை ஊற்றியது!"

"ஓகோ! நீ வெகு பொல்லாதவன்!" என்றான் தேவராளன். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.



"தம்பி! உன்னைப் பரிசோதித்தோம். வேண்டுமென்றே உன் கட்டுக்களைத் தளர்த்தி விட்டிருந்தோம். ஆயுதங்களைப் பக்கத்தில் வைத்திருந்தோம். தேங்காய்களை உனக்குத் தெரியும்படி போட்டிருந்தோம்!" என்றான் ரவிதாஸன்.

இவையெல்லாம் பொய்யா, உண்மையா என்று வந்தியத்தேவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சற்று மௌனமாயிருந்தான்.

"அப்பனே! யோசித்துச் சொல்! நீ உயிர் பிழைக்க வேண்டுமா? பிழைத்துக் கரை சேர்ந்து உன் உற்றார் உறவினர் முகத்தைப் பார்க்க வேண்டுமா? பொருளும் போகமும் பதவியும் பட்டமும் பெற்று வாழ வேண்டுமா? விருப்பமிருந்தால் சொல்; எங்களுடன் சேர்ந்து விடு! இவ்வளவு நலங்களையும் அடையலாம்" என்றான் ரவிதாஸன்.

"தூங்கிக் கொண்டிருந்த மனிதர்களைக் கொன்றீர்கள் அல்லவா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இரண்டு பேரைத்தான் கொல்ல முடிந்தது. மற்றவன் விழித்துக் கொண்டான். நீ முன்னமே எங்களுடன் சேர்ந்திருந்தால், இன்னும் சிறிது சுலபமாய்ப் போயிருக்கும்."

"தூங்கிக் கொண்டிருப்பவர்களைக் கொல்லுகிறது எந்த தர்மத்தில் சேர்ந்தது? அவ்விதம் செய்ய எப்படி உங்களுக்கு மனது வந்தது?"

"இந்தக் கடுகுக்கு நீ பயப்பட்டால் பெரிய பெரிய பூசினிக் காய்களை எப்படி விழுங்குவாய்? எங்களுடன் நீ சேர்வதாயிருந்தால் ......"

"உங்களுடன், உங்களுடன் என்கிறீர்களே? நீங்கள் யார்?"

ரவிதாஸன் தேவராளனைப் பார்த்து "இனி இவனிடம் இரகசியம் தேவை இல்லை. ஒன்று, இவன் நம்முடன் சேர வேண்டும்; அல்லது கடலுக்குப் பலியாக வேண்டும். ஆகையால் இவனிடம் எல்லாம் சொல்லி விடலாமே!" என்றான்.

"எல்லாவற்றையும் நன்றாய்ச் சொல்லு!" என்றான் தேவராளன்.

"கேள், தம்பி! நாங்கள் வீர பாண்டிய மன்னருடைய 'ஆபத்துதவிகள்.' அவரைக் காத்து நிற்பதாக ஆணையிட்டுச் சபதம் செய்தவர்கள்......"

"உங்களால் அது முடியவில்லை! ஆதித்த கரிகாலர் வெற்றி பெற்றார்..."

"எப்படி வெற்றி பெற்றார்? ஒரு பெண் பிள்ளையின் மூடத்தனத்தினால் வெற்றி பெற்றார். அவள் தன் மோக வலையின் சக்தியில் அதிக நம்பிக்கை வைத்திருந்தாள். அந்தச் சோழ குல நாகப் பாம்பைத் தன்னால் படம் எடுத்து ஆடச் செய்ய முடியும் என்று நம்பினாள். பாம்பு படம் எடுத்து ஆடத்தான் ஆடியது. ஆனால் அதன் விஷப் பல்லின் சக்தியை நடுவில் காட்டி விட்டது. எங்கள் மன்னரின் தலை புழுதியில் உருண்டது. தஞ்சாவூர் வரையில் கொண்டு போனார்கள். தலையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் விட்டார்கள்! ஆகா! தஞ்சாவூர்! தஞ்சாவூர்! அந்த நகரம் அடையப் போகிற கதியைப் பார்த்துக் கொண்டிரு, தம்பி!"

இவ்விதம் கூறிய போது ரவிதாஸனுடைய சிவந்த அகன்ற கண்கள் மேலும் அகன்று அனலைக் கக்கின. அவனுடைய உடல் நடுங்கியது. பல் வரிசைகள் ஒன்றோடு ஒன்று உராயும் சத்தம் நறநற வென்று பயங்கரமாய்க் கேட்டது. தேவராளனுடைய தோற்றமும் அவ்விதமே கோரமாக மாறியது.

"போனது போயிற்று. அதற்காக இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்? இறந்துபோன வீர பாண்டியனை உயிர்ப்பிக்க முடியுமா?"

"வீரபாண்டியரை உயிர்ப்பிக்க முடியாது. அவ்வளவு சக்தி என்னுடைய மந்திரத்துக்குக் கூடக் கிடையாது. ஆனால், அவரைக் கொன்றவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பூண்டோடு அழித்துப் பழிக்குப் பழி வாங்குவோம். சோழ குலப் பாம்பு வர்க்கத்தைக் குஞ்சு குழந்தைகள் உள்பட நாசம் செய்வோம். எங்களுடன் நீ சேருகிறாயா? சொல்!"

"சோழ குலத்தை நாசம் செய்தபிறகு? அப்புறம் என்ன செய்வீர்கள்?"

"எங்கள் மகாராணி யாருக்குப் பட்டம் சூட்டச் சொல்கிறாளோ, அவனுக்குச் சூட்டுவோம்......"

"மகாராணி யார்?"

"தெரியாதா, தம்பி! பழுவூர் இளைய ராணியாக இப்போது நடிப்பவள்தான்!"

"அப்படியானால் மதுராந்தகருக்கு..."

"அவனும் ஒரு பாம்புக் குட்டிதானே?"

"பழுவேட்டரையர்?......"

"ஆ! அந்தக் கிழவனை எங்கள் அரசனாக்குவோம் என்றா நினைக்கிறாய்? அவனுடைய செல்வாக்கையும் பணத்தையும் உபயோகப் படுத்துவதற்காக......"

"உங்கள் மகாராணி அவன் வீட்டில் இருக்கிறாளாக்கும்!"

"நன்றாகத் தெரிந்து கொண்டாயே? நல்ல யூகசாலி நீ!"

"வீர பாண்டியனுடைய மரணத்துக்குக் காரணம் ஒரு பெண்பிள்ளை என்று சொன்னீர்களே?"

"அதுவும் பழுவூர் ராணிதான்! போரில் காயம் பட்டுக் கிடந்த வீர பாண்டியரைத் தான் காப்பாற்றுவதாக அவள் வாக்களித்தாள். அதை நிறைவேற்றவில்லை. அவளே துரோகம் செய்து விட்டாள் என்று நினைத்து அவளை உயிருடன் கொளுத்த நினைத்தோம். பழிக்குப் பழி வாங்குவதாக எங்களுடன் சேர்ந்து அவளும் சபதம் செய்தபடியால் அவளை உயிரோடு விட்டோம். இன்றுவரையில் அவள் வாக்கை நிறைவேற்றி வருகிறாள். ஓ! அவளுடைய உதவி மட்டும் இல்லாவிட்டால் நாங்கள் இவ்வளவு செய்திருக்க முடியாது."

"இன்னும் நீங்கள் ஒன்றும் சாதித்து விடவில்லையே?"

"கொஞ்சம் பொறு! அப்பனே! பார்த்துக் கொண்டேயிரு!" என்றான் ரவிதாஸன்.

"நம்மிடமிருந்து இவன் எல்லாம் தெரிந்து கொண்டான். நாம் கேட்டதற்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லையே?" என்றான் தேவராளன்.

"தம்பி! என்ன சொல்கிறாய்? எங்களுடன் சேர்கிறாயா! யார் கண்டது? உனக்கே ஒருவேளை அதிர்ஷ்டம் அடிக்கலாம். நீயே ஒருவேளை தென் தமிழகத்தின் வீர சிம்மாசனத்தில் ஏறினாலும் ஏறலாம். என்ன சொல்கிறாய்?"

சில காலத்துக்கு முன்னேயென்றால் வந்தியத்தேவன் "ஆஹா! உங்களுடன் சேர்கிறேன்!" என்று சொல்லியிருப்பான். ஆனால் இளவரசருடன் மூன்று நாள் பழகியது அவனுடைய மனப்போக்கில் ஒரு பெரிய மாறுதலை உண்டுபண்ணியிருந்தது. பொய் புனை சுருட்டுகள், சமயோசித தந்திரங்கள்—இவற்றில் அவனுக்குப் பற்று விட்டுப் போயிருந்தது. ஆகையால் பேச்சை மாற்ற விரும்பி, "இந்தக் கப்பலை எப்படிப் பிடித்தீர்கள்? சற்று முன் யமனுலகுக்கு அனுப்பிய அரபு நாட்டாருடன் எப்படிச் சிநேகமானீர்கள்!" என்று கேட்டான்.

"எல்லாம் என்னுடைய மந்திர சக்தி, அப்பனே! திரிகோண மலையில் இவர்களிடமிருந்துதான் நாங்கள் குதிரைகளை விலைக்கு வாங்கினோம். அந்தக் குதிரைகளைக் கொண்டுதான் உங்களைத் தொடர்ந்து முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தோம். யானை இறவுத் துறையில் இளவரசர் இறங்கி ஓடியதைப் பார்த்தோம். அவருக்கு முன்னால் இங்கு வந்து விடத் தீர்மானித்துக் குறுக்கு வழியில் வந்து சேர்ந்தோம். இங்கே வந்து பார்த்தால், எங்கள் பழைய சிநேகிதர்கள் இந்தக் கப்பலைக் கைப்பற்றியிருந்தார்கள். அவர்கள் ஏறி வந்த கப்பல் முல்லைத் தீவுக்கு அருகில் கரைதட்டி உடைந்து போய் விட்டதாம். இங்கே ஒளிந்திருந்து இந்தக் கப்பலைக் கைப்பற்றிக் கொண்டார்கள். கடலோரத்தில் வழிகாட்டுவதற்காக எங்களையும் வருகிறீர்களா என்று கேட்டார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று."

"அது எப்படி?"

"அந்தச் சோழ குலத்து இளநாகம் சோழ சேனாதிபதியுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். எப்படியும் சோழ நாட்டுக்கு அவன் திரும்பி வந்து சேர்வான் என்று அறிந்துகொண்டோம். அது மட்டுமல்ல, தம்பி! இலங்கையில் ஊமைப் பெண் பூதம் ஒன்று இருக்கிறது. அந்தப் பூதம் எங்கள் மந்திரத்துக்குப் பதில் மந்திரம் போட்டு அருள்மொழி வர்மனைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. ஆனால் சோழ நாட்டுக்கு அது வராது......"

வந்தியத்தேவன் அன்றிரவு அநுராதபுரத்தில் நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

ரவிதாஸன் திடீரென்று சிரித்தான்.

"இது என்ன சிரிப்பு? எதைக் கண்டு?" என்றான் வந்தியத்தேவன்.

"ஒன்றுமில்லை, தம்பி! இந்த அரபு நாட்டாரின் சுபாவத்தை எண்ணினேன். சிரிப்பு வந்தது. இவர்கள் இவ்வளவு முரட்டு மனிதர்கள் அல்லவா? மனிதர்களைக் கொல்வது இவர்களுக்கு வாழைக்காயை அரிவது போன்றது. ஆனால் குதிரைகளிடம் இவர்களுக்கு அளவில்லாத அபிமானம். குதிரைகளின் கால் குளம்பில் இரும்புப் பூண் அடித்துத்தான் அவர்கள் நாட்டில் குதிரைகளை ஓட்டுவார்களாம். நாம் குதிரைகளை வெறுங் காலுடன் ஓடச் செய்கிறோமாம். அதனால் நாம் கருணையற்ற, அநாகரிக, மிருகங்களுக்கும் கேடான மனிதர்களாம்! நம்மிடம் குதிரைகளை விற்பதே பாவமாம்!......இன்று காலையில் என்ன நடந்தது, தெரியுமா?......"

"சொல்லுங்கள்!"

"கப்பலில் எல்லாரும் ஏறிக் கொண்டோம். பாய்மரங்களை விரித்தோம். கப்பல் கிளம்பி விட்டது. அப்போது கரையில் ஒரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. அவ்வளவுதான். முல்லைத் தீவில் உடைந்த கப்பலிலிருந்து தப்பிக் கரையேறிய அவர்களுடைய குதிரைகளில் ஒன்றாயிருக்கலாம் என்று சந்தேகித்தார்கள். அவர்களில் ஒருவன் கப்பலிலிருந்து இறங்கிப் பார்த்து விட்டுத்தான் வருவேன் என்றான். எங்களையும் அவனுடன் சேர்த்து அனுப்பினார்கள்......"

"பிறகு?"

"குதிரை அகப்படவில்லை, தம்பி! நீ அகப்பட்டாய்! எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று, பார்! இந்தக் குதிரைப் பிரியர்களை வேலை தீர்ப்பதற்கு எவ்வளவு சௌகரியமாய்ப் போயிற்று?"

"எல்லாம் சரிதான்; இந்தப் பிள்ளை நம்முடைய கேள்விக்கு இன்னும் விடை சொல்லவில்லை" என்று ஞாபகப்படுத்தினான் தேவராளன்.

"சொல்லுகிறேன், ஐயா! சொல்லுகிறேன். நான் சோழ குலத்திற்கு ஊழியம் செய்ய ஏற்றுக் கொண்டவன். ஒரு நாளும் உங்களுடன் சேரமாட்டேன்..."

"வேளக்காரப் படையைச் சேர்ந்திருக்கிறாயா? சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாயா!"

"அதெல்லாம் இல்லை."

"பின்னே என்ன தயக்கம்? நீ போர் வீரன். எந்தக் கட்சியில் அதிக அநுகூலம் இருக்கிறதோ, அதில் சேர வேண்டியதுதானே!"

சோழ குலத்தாருடன் உறவு பூணுவதற்கு எல்லாச் சபதங்களைக் காட்டிலும் பலம் அதிகம் கொண்ட காரணம் தனக்கு இருக்கிறது என்பதை வந்தியத்தேவன் அவர்களிடம் சொல்லவில்லை. இளைய பிராட்டியின் கடைக்கண் பார்வையையும் முல்லை நிகர்ப் புன்னகையையும் காட்டிலும் சோழ குலத்தாருக்கு உயிரைக் கொடுக்க வேறு காரணம் தனக்கு வேண்டுமா? அப்புறம் இளவரசரின் இணையில்லா சிநேகம் வேறு இருக்கிறது! அவருடன் ஒரு தடவை சிநேகமானவன் மறுபடி மாற முடியுமா?

"எது எப்படியிருந்தாலும், உங்களுடைய கொலைகாரக் கூட்டத்தில் நான் சேர மாட்டேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியானால் உன் உயிரைச் சமுத்திர ராஜனுக்குப் பலியிட ஆயத்தப்படு!" என்றான் ரவிதாஸன். (தொடரும்)

“காங்கிரஸ் செய்த குற்றங்கள்!”

கனம் பி. எஸ். குமாரசாமி ராஜா

யாராவது புதிதாக ஒரு வீட்டைக் கட்டினால் போதும். அதைக் கண்டு பலரும் சொட்டை சொல்ல வந்து விடுவார்கள். ஏனென்றால், குறை சொல்லுவது மிகவும் சுலபம். சிலருக்கு அது சுபாவமாகவே அமைந்து விடுகிறது.

“அறைகள் இன்னும் கொஞ்சம் பெரிதாக இருக்கலாம். மேலே இன்னும் இரண்டு மாடிகள் கட்டியிருந்தால், கட்டிடத்திற்கே ஒரு தனி சோபை இருந்திருக்கும். செலவோடு செலவாக, அங்கங்கே சலவைக் கற்களைப் பரப்பியிருக்க வேண்டும். மேநாட்டு ஓவியர்களைக் கொண்டு சுவர்களில் நவீன முறையில் சித்திரங்களைத் தீட்டியிருக்க வேண்டும்” என்று தோன்றியதை எல்லாம் கூறுவார்கள்.

இவர்கள் எல்லோரும் ஒன்றை மறந்து விடுகிறார்கள். வீடு கட்டுகிறவனுடைய தேவைகள், பொருளாதார நிலை முதலியவற்றைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. வீடு கட்டுகிறவன், இத்தகைய பரம ரசிகர்களின் எல்லா யோசனைகளையும் உற்சாகத்துடன் நிறைவேற்றத் தொடங்கிவிட்டால், அவன்பாடு அதோகதிதான்.

தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து கொள்ளாமல், மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக, தன் சக்திக்கு மீறிய காரியங்களில் கண்மூடித்தனமாக ஈடுபடுவது, இறுதியில் சந்தி சிரிக்கும் நிலையில் வந்து முடியும்.

தனி மனிதன் வாழ்விலேயே இவ்வளவு கவனமாகக் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கும் போது, முப்பத்தைந்து கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டின் வாழ்வை உருவாக்கும் கடமையில் எவ்வளவு ஜாக்கிரதையும், மன திடமும், ஆழ்ந்த ஆராய்ச்சியும், தீர்க்க தரிசனமும் இருக்க வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

நம்மை நாமே ஆண்டு எத்தனையோ சகாப்தங்கள் ஆகி விட்டன. பல்வேறு ஏகாதிபத்தியங்கள், படையெடுப்புகள், வாணிபச் சுரண்டல் முதலியவற்றுக்குட்பட்டு, நாடு நலிந்து கிடந்தது. அந்த நிலையை அடியோடு மாற்றி, இந்திய மக்கள் சுதந்திரமும் சுகவாழ்வும் பெறுவதற்காக, கடந்த முக்கால் நூற்றாண்டாக காங்கிரஸ் மகாசபை தொண்டாற்றி வந்திருக்கிறது. இமயமுதல் குமரி வரையில் உள்ள மக்கள் சக்தியை ஒன்று திரட்டி, அந்நிய ஆட்சியை வீழ்த்தி, நம் சொந்த ஆட்சியை நிலைநாட்டக் கங்கணம் கட்டிக் கொண்டது. அதற்காக எத்தனையோ தியாகங்களைச் செய்து, சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாகியது. அந்நிய ஏகாதிபத்தியத்தின் மூர்க்கத்தனமான அடக்கு முறைக்குச் சாத்வீகமாகப் பதிலளித்தது. மிருக பலத்துக்கும் ஆத்ம பலத்துக்கும் பல வருஷங்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடந்தது. இறுதியில் மகாத்மா காந்தியடிகளின் சத்தியப் பரிசோதனை வெற்றி பெற்றது. உலகமே கண்டு அதிசயிக்கும் வகையில், பாரத நாடு பரிபூரண சுதந்திரம் அடைந்தது. காங்கிரஸின் முக்கிய லட்சியங்களுள் ஒன்றான அரசியல் சுதந்திரம் கிடைத்துவிட்டது. அடுத்தபடியாக, மக்களின் சுக வாழ்வுக்கு வழி கோலும் துறையில் காங்கிரஸ் மகாசபை கவனம் செலுத்தத் தொடங்கியது.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட பொது ஸ்தாபனம் காங்கிரஸ். பொது ஜனங்களின் மனப் போக்கை அறிந்து, அவர்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக, கூட்டுறவு முறையில் இந்தியா பூராவிலும் அந்த ஸ்தாபனம் வேலை செய்கிறது.


தேர்தல் என்பது, காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொறுத்த வரையில், ஒரு சாதனமே தவிர, அதன் லட்சியமன்று. தேர்தல்களுக்காகவே கட்சி அமைத்துச் சேவை புரிவது போல் பாசாங்கு செய்கின்ற சமயோசித புத்தியும், தேர்தலில் வெற்றி பெற்றால் பின் செய்வதென்ன என்பதைச் சிந்தனை செய்யாத தீர்க்க தரிசனமும், சுயநலத்துக்காகவும் சொந்த விளம்பரத்துக்காகவும் பொதுநலத்தைப் புறக்கணிக்கும் சுதந்திர வேட்கையும், எவரையும் பொருட்படுத்தாமல் தம் இஷ்டம் போல் நடந்து லட்சியத்தை விலை கூறும் துணிச்சலும் காங்கிரஸ் மகாசபையிடம் கிடையாது. “வானத்தை வில்லாக வளைப்போம், மணலைக் கயிறாகத் திரிப்போம்” என்று வாய்ப் பந்தல் போடும் அற்புதக் கலையைக் காங்கிரஸ் மகாசபை கற்றதில்லை.

காங்கிரஸ் ஸ்தாபனம் மந்திரவாதிகளைக் கொண்டதல்ல. மந்திரத்தால் மாங்காய் விழச் செய்யும் வித்தை காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது. உழைப்புத் திறனாலும், இயற்கை வழியினாலும்தான் உண்மையான பலன் காண முடியும் என்பது காங்கிரஸின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதற்கு கட்சிக் கட்டுப்பாடும், ஆக்க வழிக்கொள்கைகளும், நிர்மாணத் திட்டங்களும், கூட்டு முயற்சியும்தான் தக்க சாதனங்கள் என்பதை அது உறுதியாக நம்புகிறது.



பிரதமர் கனம் பி. எஸ். குமாரசாமி ராஜா

சுதந்திரம் என்னும் பட்டா நிலத்தில், சுபிட்சமென்னும் மாளிகையைக் கட்ட, கடந்த ஐந்து ஆண்டுகளாகக் காங்கிரஸ் சர்க்கார் முயன்று வந்திருக்



கின்றனர். பட்டா பெறுவதில் பரிபூரண வெற்றி கிடைத்து விட்டது. அந்நிய அதிகார வர்க்க முறையென்னும் முள்ளும் கல்லும் நிறைந்த நிலத்தைச் சர்ப்படுத்தி, ஜனநாயக வளர்ச்சி என்னும் பலமான அஸ்திவாரத்தை, வயது வந்தோர் வாக்கு மூலம், போட்டாகி விட்டது. இதற்கிடையே நம்மிடமுள்ள இயற்கைப் பொருள்கள், கையிருப்புப் பண்டங்கள், உழைப்புச் சக்தி, மற்ற வசதிகள் முதலிய எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து, நம்முடைய தேவைகளையும் ஆராய்ந்தறிந்து, அவற்றிற் கேற்ப சுபிட்சம் என்னும் மாளிகையை உருவாக்குவதற்காக, ஐந்தாண்டுத் திட்டத்தையும் தயாரித்தாகி விட்டது. அத்துடன் நாட்டுப் பிரிவினை, காலமழை பெய்யாமை, யுத்த பயமுறுத்தல் முதலிய பல்வேறு எதிர்பாராத கஷ்டங்களுக் கிடையே அவ்வப்போது தோன்றிய பிரச்னைகளையெல்லாம் சமாளித்து வந்திருக்கிறது. அராஜகக் கூட்டத்தினரின் தூண்டுதலால் நாட்டில் அங்கங்கே தலைகாட்டிய கொள்ளை, கொலை, குழப்பம் முதலிய தொல்லைகளினின்றும் பொது மக்களைக் காத்து, அமைதியைப் பராமரிக்கவும் தக்க ஏற்பாடுகளைக் காலம் தாழ்த்தாது செய்து வந்திருக்கிறது.

மேலே கூறியபடி எல்லாவித சௌகரியங்களும் நிறைந்த மாளிகையை நிர்மாணிக்க வேண்டும் என்ற அபிலாஷை காங்கிரஸ் மகாசபைக்கு எப்போதும் உண்டு. அந்த நோக்கத்துடனேயே ஐந்தாண்டுக்குத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. எனவே மீண்டும் காங்கிரஸ் மக்களின் முன்னிலையில் தன் கோரிக்கையைச் சமர்ப்பிக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளாகச் செய்த காரியங்களை ஜனங்களின் தீர்ப்புக்கு விடுகிறது.

சென்ற ஐந்தாண்டுகளில் மத்திய ஆட்சியிலும், ராஜ்ய ஆட்சியிலும் பல அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பது கண்கூடு. மக்களின் சுபிட்ச வாழ்வுக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும் பணியை மிகத் துரிதமாக காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ளதை யாரும் மறைக்க முடியாது. 'ஐந்தாண்டு அபிவிருத்தி' என்ற தலைப்பில் ஜில்லாவுக்கு ஒன்றாக வெளியாகியுள்ள பிரசுரங்களில் இவற்றைப் பற்றிய விளக்கங்களைப் புள்ளி விவரங்களோடு காணலாம்.

தேர்தலுக்காகப் புற்றீசல் போல் புறப்பட்டுள்ள பதவி வேட்டைக் கட்சியினர் சிலர், பல புதிய 'உண்மைகளை'க் கண்டு பிடித்துச் சொல்லுவதுபோல் தடபுடல் செய்கின்றனர். 'காங்கிரஸ் செய்த குற்றங்கள்' என்றும் 'துரோகங்கள்' என்றும் ஆர்ப்பரிக்கின்றனர்.

இப்படிப்பட்ட பகட்டான வார்த்தை ஜாலத்தினாலும், பிரசார வித்தையினாலும் உண்மைக்கு விலங்கு போட முடியுமா !

1946-ம் ஆண்டு ஆரம்பத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போதிருந்த அரசியல் கொந்தளிப்பையும், யுத்த பிற்கால பிரச்னைகளையும் உலகச் சூழ்நிலையையும் பொது மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அன்றைய நிலையில் பொது ஜனங்கள் முன்னிலையில் திட்டமான வாக்குறுதியைக் காங்கிரஸ் சமர்ப்பித்தது. பொது மக்கள் முழு ஆதரவும் தந்தனர். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் காங்கிரஸ் செய்ததாகக் கூறப்படும் 'துரோகங்களையும்' 'குற்றங்களையும்' கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

1946-ம் ஆண்டுக்குப் பின், மாகாண ஆட்சியில், ஆங்கில அதிகார வர்க்கத்தின் 'அட்வைசரி' ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது 'துரோகம்.'

மத்திய ஆட்சியில், பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த வைஸ்ராயின் சர்வாதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த நிர்வாக சபையை நீக்கி, பொது ஜனப் பிரதிநிதிகள் தமக்குள் ஒன்றுபட்டு, கூட்டு சபை மூலம் இந்தியாவின் நிர்வாகத்தை ஏற்க முன்வந்தது, 'துரோகம்'.

1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்று ஆங்கில அரசாட்சியிடமிருந்து சாத்வீக முறையில் நம் பாரத தேசம் விடுதலை பெற்றது மன்னிக்க முடியாத 'துரோகம்'.

இந்திய அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி, நமக்கென ஓர் அரசியல் திட்டத்தை உருவாக்கியது மாபெரும் 'துரோகம்.'

இந்தியாவின் அம்மை வடுக்களாக அங்கங்கே சிதறுண்டு கிடந்த அறுநூறுக்கு மேற்பட்ட சமஸ்தானங்களை ஐக்கியப்படுத்தி, அங்கங்கே அரசியல் உரிமை சிறிதுமின்றி வாடிக்கிடந்த மக்களுக்குப் புது அந்தஸ்து கொடுத்து, ஜனநாயக வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தது, 'துரோகம்.'

ஆங்கில கவர்னர்கள், அதிகாரிகள் முதலியோர் படிப்படியே நீக்கப்பட்டு, நம்மவர்களே நம்மை ஆளும் நிலை ஏற்படச் செய்தது, 'துரோகம்.'

வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்தது, ஜனநாயகத்துக்குச் செய்த மாபெரும் 'துரோகம்.'

பொதுத் தேர்தல்களை ஒத்திப் போட்டு ஆட்சி பீடத்தில் தொடர்ந்து அமர்ந்திருக்க முயலாமல், அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த சில மாதங்களுக்குள்ளேயே பொதுத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மிகக் கண்டிப்பான முறையில் செய்தது, 'வஞ்சக சூழ்ச்சியோடு செய்த துரோகம் !'

எல்லாவித அரசியல் கட்சிகளுக்கும் பூரண உரிமை கொடுத்து, தேர்தலில் போட்டியிடச் சகல சௌகரியங்களையும் செய்து தந்தது, 'சர்வாதிகார போதை கொண்ட துரோகம்.'

ஐக்ய நாடுகள் சபையில் பூரண சுதந்திரத்துடன், மற்ற வல்லரசுகளோடு சம அந்தஸ்துடன் உலகப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடும் புகழை பாரத நாட்டுக்கு உண்டாக்கிக் கொடுத்தது, 'மிக மிகப் பெரிய துரோகம்.'

சென்னை ராஜ்யத்தில், காங்கிரஸ் ஆட்சியைப் பொறுத்தவரையில், நாடெல்லாம் வளம் பெருக நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை விரைவில் மேற்கொண்டது 'குற்றம்.'

நீதியையும் நிர்வாகத்தையும் தனிப்படுத்தி, நிர்வாகத்தினர் தலையீட்டுக்கு வழியின்றி நியாயம் வழங்க வழி செய்தது 'குற்றம்.'

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைப் போக்கி, அவர்களுக்குச் சேவை செய்யத் தனி இலாகாவை அமைத்தது 'குற்றம்.'

கிராமங்களில் மக்களின் சுய முயற்சி மூலம் புது வாழ்வளிக்கத் திட்டமிட்டு வேலை செய்து வருவது 'குற்றம்.'

கிராமங்களில் சுதந்திரமாக ஆட்சி நடத்தும் முறையில் புதிய பஞ்சாயத்துக்கள் பல்லாயிரம் அமைக்க அனுமதித்தது 'குற்றம்.'

"ஒரு நாட்டின் உண்மையான நாகரிக வளர்ச்சிக்குக் கிராமங்கள் அனைத்தும் மின்சார மயமாக்குவது மிக அவசியம்" என்றார் லெனின். இதற்கேற்ப, இன்று இருளடைந்த கிராமங்களில் ஒளியூட்டி வருவதும், விவசாயத்துக்கு மின்சாரத்தை உபயோகித்து உற்பத்தியைப் பெருக்க வகை செய்து வருவதும் 'குற்றம்.'

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை உருவாக்கி, ஜமீன்களிலுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ரயத்துவாரிப் பட்டா உரிமைகளைக் கொடுத்து அவர்கள் வாழ்வை வளமாக்கியது 'குற்றம்.'

குடிப்பழக்கத்தினால் குடி கெட்டுப் போகும் மக்களைப் புனித வாழ்க்கையில் புகுத்தவும், அவர்களின் பொருளாதார நிலைமையை மேன்மைப் படுத்தவும், குடி ஒழிப்புச் சட்டம் ஏற்படுத்தியது மன்னிக்க முடியாத 'குற்றம்.'

நாட்டு நலம் சிறக்க ஆதாரக் கல்வி முறையை ஆங்காங்கு புகுத்தியிருப்பது 'குற்றம்'.

கைத்தொழில் பலவற்றைப் பேணி வளர்ப்பது 'பெருங் குற்றம்.'

குடிசைத் தொழில் வளர்ப்பது 'குற்றம்.' கூட்டுறவுக்கு ஆக்கமளிப்பது 'குற்றம்.' தொழிலாளர் நலம் சிறக்க வகை செய்தது 'குற்றம்.' தீண்டாமையை ஒழித்தது 'குற்றம்.' பிற்பட்டோர் நிலையை உயர்த்துவது 'குற்றம்.' சமூக சௌகரியத்துக்கான பல்வேறு பணிகள் செய்ய முன் வந்தது 'குற்றம்......'

காங்கிரஸ் மகாசபையும் காங்கிரஸ் சர்க்காரும் செய்துள்ள இத்தகைய 'குற்றங்களையும்' 'துரோகங்களையும்' சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து வரப்போகும் பொதுத் தேர்தலில் தீர்ப்புக் கூறுமாறு பொது மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

காங்கிரஸ் மகாசபையின் சின்னம் நுகத்தடி பூட்டிய இரட்டை மாட்டுச் சித்திரம் என்பதை மறந்து விடாமல், அந்தப் பெட்டியிலேயே உங்கள் தீர்ப்பைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வோட்டுக் கேட்கும் போட்டி

வோட்டுக்கேட்கும் போட்டியண்ணே!
கேட்டுத்தெரிந்து போட்டிடண்ணே!

1. நாட்டுக்கு நன்மைசெய்யும் நாட்டங்கொண்டு அன்னியனை
ஓட்டிச் சுதந்திரத்தை நாட்டினது காங்கிரஸ் அல்லோ? (வோ)

2. காந்திமகான் காட்டிப்போன சாந்தசீல நெறியதனை
ஏந்தியரசு புரிந்துலகை மாந்தருய்யச் செய்வதன்றோ? (வோ)

3. வேரூன்றிய விருட்சம்போல வெம்மைத்தாபம் தீரநீக்கும்
நேருஜியின் தலைமைதன்னை கோரிநிற்கும் கட்சி அண்ணே! (வோ)

4. வரட்டுஜம்ப வாய்வீச்சால் முரட்டுமூர்க்க வீண்பேச்சால்
புரட்டுச்செய்ய எண்ணாத சிறப்புடைய கட்சி அண்ணே! (வோ)

5. மக்கள்நிலை குலைந்திடாமல் துக்கமதில் சிக்கிடாமல்
பக்குவமாய்த் தக்கவிதம் பாடுபடும் கட்சி அண்ணே! (வோ)

6. எருதிரண்டு பூட்டிநுகம் ஏற்றிவைத்த சின்னமதைக்
கருதியதில் வோட்டுப்போட உறுதிகொள்ள வேண்டுமண்ணே! (வோ)

7. காளைரெண்டு வேண்டாமென்று கருதிடுவார் யாருமுண்டோ
நாளைவரும் தேர்தலிலே நமக்கவையே துணையண்ணே! (வோ)

8. எண்ணியெண்ணிப் பாரண்ணே ஏமாந்திட வேண்டாமண்ணே
கண்ணியமாய் உந்தன் வோட்டைக் காங்கிரசுக்கே போடண்ணே! (வோ)

— சுப்பிரி.

பஜ கோவிந்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

6

சுற்றத்தாரைப் பற்றிச் சொன்ன தெல்லாம் உண்மையாக இருக்கலாம். இதோ என் மனைவி இருக்கிறாளே, இவள் என்பால் காட்டும் அன்பும் பொய்யா? இது பொருளற்ற பொருளா? இரு உயிர்கள், ஒரு தேகம், அல்லது இரண்டு தேகங்கள் ஒரு உயிராக இருக்கிறோமல்லவா? உடலின் ஒவ்வொரு அணுவும் தனதாகப் பாவித்து வரும் இந்த மனைவி என் பக்கத்திலிருக்க எப்படி வாழ்க்கை பொருளற்றதாகும் என்று கேட்கிறான் பேதை. இதைப்பற்றி ஆச்சாரியர் பாடுகிறார்:—

மூச்சுள்ள போது மனையாளின் பேச்சு
கட்டியணைந்த தேகம் பட்டுப் போய்சென்றதும்
பயங்கொண் டகல்வாள்
சுயம்வரங்கொண்ட மனைவியும்.

* * *

யாவத் பவனோ நிவஸதி தேஹே
தாவத் ப்ருச்சதி குசலம் கேஹே
கதவதி வாயௌ தேஹாபாயே
பார்யா பிப்யதி தஸ்மின் காயே.

எந்த உடலை வாழ்நாளெல்லாம் தழுவி முத்தமிட்டு என்னுயிரும் அந்த உயிரும் ஒன்றே என்று எண்ணி வந்தானோ, அந்த உடலை மேலுங் கீழும் செல்லும் காற்று நின்று விட்டது என்றதும், 'பிரேதம், பிசாசு' என்று மனைவியும் பயந்து தூர விலகுவாள். "வலி இப்போது எப்படியிருக்கிறது? தூங்கினீரா? காலைப் பிடிக்கட்டுமா?" என்றெல்லாம் கேட்டு வந்த மனைவி மூக்கில் சுவாசம் நின்றதும், தழுவியும் முத்தமிட்டும் வந்த தேகத்தைக் கண்டு பயப்படுகிறாள். பிரேதமான தேகம் திடீரென்று எழுந்து உட்கார்ந்தால் 'ஓ' என்று பயந்து கத்திக் கொண்டு ஓடுவாளல்லவோ? உடலின் பற்றுக்களும் சேர்க்கைகளும் இத் தன்மையனவே.

वाழ்க்கை நடத்த வேண்டியதுதான். ஆனால் மோகங் கொள்ளாதே என்கிறார். பொருளின் தன்மையை அறிந்து செய்வன செய்; பொய்யை மெய்யாக எண்ணி வீண் துயரம் கொள்ளாதே. மனைவி யார், மகன் யார், உன் உயிருக்கும் அவர்கள் உயிருக்கும் என்ன சம்பந்தம்? உடலின் சம்பந்தா சம்பந்தங்கள் உயிருள்ள அளவுதான் என்கிறார்.

இல்லறத்தை நடத்த வேண்டியது கடமை. ஆனால் அளவு அறிந்து எந்த விஷயத்தையும் கிரகித்துக் கொண்டு நடப்பது விவேகம். நிலையற்றதை நிலையுள்ளதாக எண்ணுவதில் ஒரு லாபமுமில்லை. உண்மையைத் தெரிந்துகொண்டு நடந்தால் துக்கம் குறையும்.

यावत्पवनो निवसति देहे
तावत्पृच्छति कुशलं गेहे ।
गतवति वायौ देहापाये
भार्या बिभ्यति तस्मिन्काये ॥

7

குழந்தைப் பருவம் விளையாட்டில் கழிந்து போகிறது. யௌவனம் வந்ததும் காமவிசாரம். அப்போது சிந்தனை முழுதும் பெண்களைப் பின்தொடர்ந்து செல்லும். பிறகு விருத்தாப்பிய தசை அடைந்ததும் மக்கள் மனைவி, இவர்கள் கதியென்ன என்பதே கிழவனின் பெருங் கவலை. சதா காலமும் இந்தச் சிந்தனையில் கழித்து விடுகிறான். கடவுளைப் பற்றிச் சிந்திப்பதென்பது எந்தப் பருவத்திலும் இல்லை. விளையாட்டிலும், பெண் மோகத்திலும், குடும்பக் கவலையிலும், பொருளற்ற சிந்தனைகளிலும், அந்த அந்தப் பருவத்தில், அந்த அந்த விதம் காலம் கழிந்து போகிறதே யொழிய

ஞானத்தைத் தேடுவார் யாருமில்லை. இதற்கு என்ன செய்வது என்று வருத்தப் படுகிறார் சங்கரர்.

விளையாட்டில் தீரும் குழந்தைப் பருவம்; பின்னர்
வளையல் கை மகளிரே சிந்தனையெல்லாம்;
மனைவியும் மக்களுமே கிழவன் விசாரம்; கடவுளை
நினைப்பாரில்லையோ எந்தத் தசையினும்.

* * *

பாலஸ்தாவத் க்ரீடா ஸக்த:
தருணஸ்தாவத் தருணீ ஸக்த:
வ்ருத்தஸ் தாவச்சிந்தா ஸக்த:
பரேப்ரம்மணி கோபி நஸக்த:

வாழ்நாள் முழுதும் பேய்த் தேர் வேட்டையில் இப்படி முடிந்து போகிறது. எல்லாம் மோகம் என்று அறிவோமாயினும் மெய்ப்பொருளை ஓர்ந்து அறிவதற்கு யாருமே எந்தப் பருவத்திலுமே முயல்வதில்லை.

बालस्तावत्क्रीडासक्तः
तरुणस्तावत्तरुणीसक्तः ।
वृद्धस्तावच्चिन्तासक्तः
परे ब्रह्मणि कोऽपि न सक्तः ॥

நகைச்சுவை

"நான் சும்மா தமாஷுக்குச் சொன்னேன். அதை அவன் விபரீதமாக அர்த்தம் செய்துகொண்டு, என்னுடன் பேசுவதே இல்லை" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஆமாம், பல மனஸ்தாபங்களுக்கும் விரோதங்களுக்கும் காரணம் இந்த ஹாஸ்ய உணர்ச்சி ஒரு சிலருக்கு இல்லாததும்; ஒரு சிலருக்கு அதிகமாக இருப்பதும்தான்.

இரட்டை நாடிச் சரீரமுள்ள ஆசாமி ஒருவர் வாழைப்பழத் தோல் சறுக்கிக் கீழே விழுந்தால் நமக்குச் சிரிப்பு வருகிறது. ஆனால் விழுந்தவரால் சிரிக்க முடியுமோ? அல்லது சிரிப்பவர்களைப் பார்த்துப் பாராட்டத்தான் முடியுமா?

*

அன்றைக்கொருவர் ஏதோ மனோராஜ்யத்தில் மூழ்கி நடுத்தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார். பின்னால் வந்து கொண்டிருந்த பஸ் 'பாம் பாம்' என்று ஹாரன் சத்தம் செய்தது. ஆனால் அந்தச் சத்தம் அவர் காதில் ஏறினால்தானே நடுச் சாலையை விட்டு ஒதுங்கிப் பஸ்ஸுக்கு வழி விடுவதற்கு? அவருக்கு வெகு சமீபமாக பஸ் வந்த பிறகுதான் அவர் பயந்து நகர்ந்தார். பஸ் டிரைவரும் சற்று 'ஒடித்து' மேலே ஓட்டிக் கொண்டு போனார். அந்தப் பஸ் கண்டக்டர் மட்டும், "என்ன ஐயா, வீட்டிலே சொல்லிக் கொண்டு வந்துவிட்டாயா?" என்று கேட்டார். இந்த ஹாஸ்யத்தைக் கேட்டுப் பஸ்ஸிலிருந்தவர்கள் எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள். அந்தப் பாதசாரி மட்டும் சிரிக்கவில்லை. அதனால் அவருக்கு நகைச்சுவை இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

*

"அன்றைக்குத்தான் எனக்கு ரொம்பவும் நகைச்சுவை யிருப்பதாகத் தெரிய வந்தது! நான் கூட ஒரு 'நகைச் சுவை சக்கரவர்த்தி' என்று பட்டம் வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது" என்றார் என் நண்பர் ஒருவர்.

"எப்படி ஸார், உங்களுக்குத் தெரிய வந்தது?" என்று கேட்டேன்.

"எங்கள் வீட்டில் ஒரு சம்பாஷணை நிகழ்ந்தது. அதை ஒட்டுக் கேட்டேன். அதிலிருந்து தெரிய வந்தது. அந்தச் சம்பாஷணை இதுதான்:

'மாமி, எங்காத்துக்காரருக்கு இருக்கிற நகைச்சுவை யாருக்கும் வராது!' என்று ஒருத்தி பெருமை யடித்துக் கொண்டாள்.

இதைக் கேட்ட இன்னொரு அம்மாள் 'அதை எப்படிக் கண்டு பிடித்தாயடீ?' என்றாள்.


'தமாஷுக்கு 'அவரை'ப் பார்த்து எனக்கு நீங்கள் இதுவரை ஒரு நகைகூடப் பண்ணிப் போடவில்லையே என்றேன். உடனே, அன்றைக்குச் சாயங்காலமே ஒரு கடியாரச் சங்கிலி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டார்' என்றாள்.

"இப்படிக் கூறியவள் யார் என்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்!" என்று கூறி முடித்தார் நண்பர். எப்படி என் அருமை நண்பரின் நகைச் சுவை?


இப்படி என் நண்பரைப்போல் அல்லாமல் உண்மையான ஹாஸ்ய நடிகர்கள், எழுத்தாளர்கள் சித்திரக்காரர்கள் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களைப் பார்க்கும்போது எப்படித்தான் சாதிக்கிறார்களோ என்று அதிசயம் நமக்கு ஏற்படுகிறது. ஆனால் அவர்களுடைய ரகசியம் பார்க்கப்போனால் ரொம்ப சாமான்யமானது.

பெர்னட்ஷா பிரபல ஹாஸ்ய எழுத்தாளர் என்று பெயர் பெற்றவரல்லவா? அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நான் உண்மையைத்தான் சொல்கிறேன். ஆனால் எல்லோரும் ஹாஸ்யமாக இருக்கிறது என்கிறார்கள்" என்றார்.

—'வேங்கு'



எதிர்பாருங்கள்!
ஜூபிடரின்
கைதி
டைரக்ஷன் : S.பாலசந்தர். ஸ்டூடியோ : சென்ட்ரல்.



அருமைப் புதல்வி

அம்மு

சந்தைத் தெருவிலிருந்து வாத்தியார் சிவசங்கரன் வீடு திரும்பும் பொழுது ஏதோ ஒன்றை இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டு வந்தார். வீட்டிற்கு வந்ததும் சாமான் பையைக் கீழே வைத்து விட்டுத் தானும் உட்கார்ந்தார். "கௌரி உடம்பு சரியில்லையென்று படுத்தாலும் படுத்தாள். என் தாவு தீர்ந்துபோகிறது!" எனப் பெருமூச்சு விட்டார். அது உண்மையான போதிலும் அவர் இளைய மனைவி சாவித்திரிக்கு அந்தப் புகழ் மொழிகள் அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

சிவசங்கரன் சாவித்திரியின் கடின நெஞ்சை எண்ணி வருந்தியவாறு பையிலிருந்து ஒவ்வொரு சாமானாக எடுத்து வெளியே வைத்து விட்டுச் சாமான் 'பில்'லையும் அவள் எதிரில் போட்டார்.

சாவித்திரி அவசரம் அவசரமாகச் சாமான்களையும் 'பில்'லையும் சரிபார்த்துக் கொண்டிருக்கையில் "ரிப்பன் என்று இந்த 'பில்'லில் போட்டிருக்கிறதே! ரிப்பன் எதற்கு வாங்கினீர்கள்! அதையும் காணோமே! உங்கள் சம்பாத்தியத்திற்கு நாங்கள் நூல் வைத்துப் பின்னி வாழ்ந்தால் போதாதா!" என்று காரமாகக் கேட்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த ஒருவனை அடித்து எழுப்புவது போலிருந்தது சாவித்திரியின் வார்த்தைகள். "ஐயோ, அசட்டுத்தனம் செய்து விட்டோமே!" என்று சிவசங்கரனின் உள்ளம் தடுமாறியது. ஒரு நிமிஷம் அவர் திகைப் படைந்த போதிலும் மறு கணம் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

"ரிப்பன் என்று போட்டிருக்கிறதா!" என்று ஆச்சரியப்படுவது போல் கேட்டு விட்டு, "சரி தான்! யாரோ வாங்கினதை என் கணக்கில் எழுதியிருக்கிறான். இருக்கட்டும்! நாளைக்குக் கேட்டுச் சில்லறையை வாங்கிவிடுகிறேன்!" என்றார். இந்தப் பேச்சில் வடிகட்டின முட்டாள்தனம் சொட்டி நின்றாலும் தப்பித்துக் கொள்ள வேறு வழியில்லை அவருக்கு.

சாவித்திரி முகத்தை ஒரு முழம் தூக்கிக் கொண்டு, "வாங்கி வந்துவிடுவீர்கள், யார் இல்லையென்றார்கள்! நான் ஒருத்தி பார்த்துக் கேட்கவில்லையென்றால் உங்களுக்கு என்ன தெரியும்! என்னவோ உங்களையும் கலியாணம் செய்து கொண்டு நாலு பெண்களுக்குத் தாயாகி விட்டேன்! எப்படி மீளப் போகிறேனோ!" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே சாமான்களை எடுத்து உள்ளே வைக்கத் தொடங்கினாள்.

சிவசங்கரன் இடத்தை விட்டு எழுந்தார். மடியில் மறைத்து வைத்திருந்த நீல ரிப்பனைப் பெட்டியில் வைத்துவிட்டு கௌரி படுத்திருந்த இடத்திற்கு வந்தார். தகப்பனாரைக் கண்டதும் அவள் எழுந்து உட்கார்ந்தாள். "மத்தியானம் என்னம்மா, சாப்பிட்டாய்! கஞ்சியா, ரசம் சாதமா!" என்று அன்போடு கேட்டார்.

கௌரிக்கு அழுகை வந்துவிட்டது. என்னதான் கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அது நிற்கவில்லை. கண்களில் நீர் சொரிய "ஒன்றுமே சாப்பிடவில்லை அப்பா!" என்று முனகினாள்.

"ராமா! எப்பொழுதும் வீட்டிலேயே இருந்து இதையெல்லாம் நான் கவனித்துக் கொள்ள முடியுமா!" என்று தமக்குள் சிவசங்கரன் சொல்லிக் கொண்டு தாமே கஞ்சி வைத்துக் கொடுத்தார். பசியால் நெஞ்சும் வயிறும் காய்ந்து கிடந்த கௌரி கஞ்சியை அமிருதம் போல் ருசித்துச் சாப்பிட்டாள்.

இதைப் பார்த்த சாவித்திரி ராமபாணம் போல் சரசர வென்று பொரிந்தாள். "அதென்ன,

வந்ததும் வராததுமாக இந்தப் பிரிவினைக் காரியம் செய்கிறீர்கள்! நான் மத்தியானம் கஞ்சி கொடுத்தேன், வேண்டாமென்றாள். இப்பொழுது அப்பா வைத்துக் கொடுத்தது என்றால் வேண்டுமோ! அந்த நண்டு சொல்லிக் கொடுக்கிறது என்றால் அதைக் கேட்டு நீங்கள் கட்சி கட்டுகிறீர்களே!'' என்று சிடுசிடுத்து விட்டுச் சென்றாள்.

விதியை நினைத்துக் கொண்டு சிவசங்கரன் கௌரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

★

சிவசங்கரன் ஓர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர். சொற்ப சம்பளத்தை வைத்துக் கொண்டு அவர் முதல் மனைவி எவ்வளவோ செட்டும் கட்டுமாகக் குடித்தனம் செய்தாள். ஏழ்மையில் பிறந்து வளர்ந்த அவள் ஏழைக்கே வாழ்க்கைப்பட்டாள். அதற்காக அவள் குறைப்பட்டுக் கொண்டதில்லை. போதும் என்ற மனம் அவளுக்கிருந்தது. அதனால் அவள் வாழ்க்கை பூரித்து நின்றது. அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய சந்தோஷ வாழ்க்கையை விதி சதி செய்து விட்டது. இருபத்தைந்து வயதுகூட நிரம்பாத சிவசங்கரன் தம் மனைவியை இழந்தார். பத்து நாள் சிசுவான கௌரி தாயற்ற குழந்தையானாள்.

அறுபது அறுபத்தைந்து வயது கிழவர்களுக்கே பெண் கொடுக்கத் தயாராயிருக்கும் பொழுது இருபத்தைந்து வயது சிவசங்கரனுக்கா பெண் கிடைக்காமல் போய்விடும்! சாவித்திரியின் தகப்பனார் எப்படியெல்லாம் சமாதானப் படுத்த வேண்டுமோ அப்படியெல்லாம் படுத்திச் சிவசங்கரனை மாப்பிள்ளையாக்கிக் கொண்டார்.

ஆறு பெண்களைப் பெற்ற அவர், ஓர் வக்கீல் குமாஸ்தா. மூத்த நாலு பெண்களையும் பணம் படைத்த கிழவர்களுக்குக் கலியாணம் செய்து கொடுத்து விட்டார். அவருடைய மாப்பிள்ளைகள் அவரைவிடப் பெரியவர்கள். இருந்தபோதிலும் பெண்கள் வறுமையில் கஷ்டப்படாமல், பட்டாலும் தங்கத்தாலும் வைரத்தாலும் சுற்றப்பட்டு இருந்தார்கள். அவர்கள் மூலம் இவர் தரித்திரமும் விடிந்தது. சாவித்திரிக்குக் கலியாண வயது வந்ததும் அவருக்கும், அவர் மனைவிக்கும் ஓர் ஆசை ஏற்பட்டது. நாலு மாப்பிள்ளையும் கிழவர்களாயிருக்கிறார்களே, இவளுக்காவது வாலிபனாகப் பார்த்துக் கலியாணம் செய்ய வேண்டுமென்று தோன்றியது. ஆனால் வாலிப மாப்பிள்ளைகள்தான் வரதக்ஷிணை இல்லாமல் கிடைக்கிறார்களா! பணம் கொடுத்து மாப்பிள்ளை வாங்க அவரிடம் ரொக்கம் இல்லை.

இந்தச் சமயத்தில்தான் சிவசங்கரனைப் பற்றி யாரோ சொன்னார்கள். இரண்டாம் தாரம் என்றாலும் வயதில் இளைஞன் அல்லவா! கிழ மாப்பிள்ளைகளைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருந்த அந்தத் தம்பதிகளுக்கு சிவசங்கரனின் கம்பீரமான தோற்றம் மிக்க ஆறுதலாயிருந்தது. இந்தப் பெண்ணாவது நீண்டநாள் குங்குமமும் மஞ்சளுமாக இருக்கட்டுமே யென்று தோன்றியது. மற்ற பெண்களும் சாவித்திரியும் பெற்றோரின் எண்ணத்தை ஆதரித்தனர்.

சிவசங்கரனுக்கும், சாவித்திரிக்கும் கலியாணம் நடந்தது. சாவித்திரி குடித்தனம் செய்ய வந்தாள். வரும்பொழுது சந்தோஷமாகவும் திருப்தியாகவும் தான் வந்தாள். சின்னஞ்சிறு சிசுவான கௌரியையும் சரிவரப் பார்த்துக் கொண்டாள். நாளாவட்டத்தில் அவள் மனம் ஒருவிதமாக மாறியது. கணவன் சம்பாத்தியம் குடும்பச் செலவுக்குப் போதும் போதாததுமாக இருந்தது.

அடிக்கடி தன் சகோதரிகள் வீட்டிற்கு சென்று வந்த சாவித்திரியின் மனம் சொல்லொணா அதிருப்தி கொண்டது. அதற்குத் தகுந்தவாறு ஒன்று, இரண்டு, மூன்று என அடுக்கடுக்காக நாலு பெண் குழந்தைகள் வேறு பிறந்தன. தரித்திரம் பிடுங்கித்தின்றது. வாலிப கணவன் கிடைத்த பெருமை அவள் மனத்தை விட்டுப் போய்விட்டது. ஏன் இந்த ஏழை வாத்தியாரைக் கலியாணம் செய்துகொண்டோம் என்ற வெறுப்பு அவளைச் சிடுமூஞ்சியாக்கியது. அவள் கோபமெல்லாம் தாயற்ற குழந்தை கௌரியின் பக்கம் திரும்பியது. அகாரணமாக அந்தக் குழந்தையைக் கரித்தாள். கௌரிக்கு நடக்கத் தெரிந்தது முதலே வேலை வாங்கத் தொடங்கினாள்.

சாவித்திரியின் ஆங்காரத்திற்குக் காரணம் சிவசங்கரனுக்குத் தெரியும். ஒரு நாள் சொல்லக் கூடச் சொல்லிவிட்டாள். ''நான் ஏழை வாத்தியார் என்பது கலியாணத்திற்கு முந்தியே தெரியுமே, எதற்குச் சம்மதப்பட்டாய்!'' என்றார்.

''புத்தியில்லாத்தனம்தான்! சின்னப் பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டுச் சந்தோஷமாய் இருந்துவிடப் போகிறோம் என்று நானும் நினைத்தேன். அப்பா அம்மாவும் நினைத்தார்கள்! அநுபவித்தாலல்லவா எல்லா கஷ்டமும் தெரிகிறது'' என்று புலம்பினாள்.

இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளச் சிவசங்கரனுக்கு நேரம் இருக்காது. அப்படியே காதில் விழுந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஒரு கஷ்டம் என்னவென்றால் பத்து வயது சிறுமியான கௌரியைச் செக்கு மாடுபோல் வேலை வாங்குவதை நினைத்தால்தான் பற்றி எரிந்தது. தன் நிலைமையை ஒருவாறு உணர்ந்த அந்தக் குழந்தையும் எவ்வளவோ பயத்துடன் ஒரு நிமிஷம் ஓய்வில்லாமல் உழைத்தது. தாயற்ற அந்தப் பெண்ணுக்குக் கடவுள் நல்ல அறிவைக் கொடுத்திருந்தார். ஆனால் சாவித்திரி மட்டும் அவளை ஒருபொருட்டாக நினைப்பதில்லை.

சிவசங்கரன் இந்தக் கொடுமையைக் கண்டு திகைத்தார். இளையவளின் ஏகாதிபத்யம் எங்கும் தான் உண்டு. குழந்தையை அவள் தாய்வழி பந்துக்களிடம் விட்டு வளர்ப்போமென்றால் அதற்கு அநுசரணையாக மனித உள்ளம் படைத்த உறவினர்கள் யாருமில்லை. இன்னும் ஐந்தாறு வருஷம் இந்தக் கொடுமைகளை கௌரி அநுபவிக்கத்தான் வேண்டும். அதற்குப் பிறகல்லவா கலியாணம் என்று செய்து கணவன் வீட்டிற்கு அனுப்ப முடியும்! ஏ, அப்பா! இந்த வருஷங்களை யுகங்கள் போலல்லவா அந்தக் குழந்தை கழிக்க வேண்டும்!

கௌரி மாடுபோல வீட்டு வேலையைச் செய்து கொண்டு கிடந்தாள். பாவம், டைபாயிட் ஜுரம் எங்கிருந்தோ வந்து அவளைப் பிடித்துக் கொண்டது. இரண்டு மாதம் ஒரு ஆட்டம் ஆட்டித்தான் விட்டது. அவளுக்கு ஆயுஸு கெட்டி, பிழைத்தாள். சாதாரணமாகச் செய்யப்பட்ட நாட்டு வைத்தியம்கூட சாவித்திரிக்குப் பிடிக்கவில்லை. தாயற்ற பெண், ஏழை வாத்தியார் என்று வைத்தியரும் எவ்வளவோ சகாயமாக வைத்தியம் செய்தார். சாவித்திரியின் கல்மனம் மாத்திரம் அந்தப் பெண்ணுக்காக இரங்கவில்லை. ''தரித்திரக் குடி

யில் ஜுரமும் ஜன்னியும் வந்தால் சாத்தியமா! மகராஜி படுத்துக்கொண்டு செலவு வைத்து விட்டாளே!'' என்றே பேசிக் கொண்டிருந்தாள். இந்த மாதிரி பேசுகிறவர்களிடம் பதில் பேசிப் பிழைக்க முடியுமா! வாயை மூடிக்கொண்டு இருந்தார் சிவசங்கரன்.

ஜுரம் ஜாஸ்தியா யிருக்கும்பொழுது கௌரி பிதற்றினாள். அவளுக்கு வெகு நாட்களாக நீலக் கலர் ரிப்பன் வேண்டும் என்ற ஆசை இருந்திருக்கும் போலிருக்கிறது. பிதற்றலில் அது வெளியாயிற்று. ''அந்த நீலநிற ரிப்பன் ரொம்ப நன்றாயிருக்கிறது, அப்பா! வாங்கிக் கொடேன்! ஒருவேளை சித்தி கோபித்துக் கொள்வாளோ...'' என்று கூறினாள். உடம்பு தெளிந்ததும் ரிப்பன் வாங்கிக் கொடுப்பது, அதை அவள் சித்தியிடம் யாரோ ஒருவர் வாங்கிக் கொடுத்ததுபோல் பொய் சொல்லுவது என்று தீர்மானித்தார். அதன்படி கௌரி குணமடைந்ததும் ரிப்பன் வாங்கினார். நன்றாக நடமாட்டம் ஏற்பட்டதும் மாமா ஊருக்கு அழைத்துச் சென்று அவர் வாங்கிக் கொடுத்ததாக சாவித்திரியிடம் கூற வேண்டுமென எண்ணினார். கௌரி சிறிது சிறிதாகத் தெளிந்து நடமாடும் சக்தி பெற்றாள். சாவித்திரி மீண்டும் வேலை வாங்கத் தொடங்கினாள்.

சிவசங்கரன் மனைவியை எச்சரித்து வைத்தார். ''பலஹீனமாயிருக்கும் அவளை ரொம்ப வேலை வாங்காதே! திரும்பவும் படுத்துக்கொண்டு விடுவாள். வைத்தியச் செலவு மீண்டும் வந்துவிடும்!'' என பணச்செலவைச் சொல்லி பயமுறுத்தினார். என்ன சொல்லி என்ன! சாவித்திரியின் கடின மனம் மட்டும் கரையவில்லை.

கௌரி மிகவும் பலஹீனமாகத்தான் இருந்தாள். சித்தி ஏவும் காரியங்களை அவளால் செய்யவே முடியவில்லை. கிறுகிறுவென்று தலையைச் சுற்றும். தன் துரதிர்ஷ்டத்தை எண்ணிப் பல்லைக் கடித்துக்கொண்டு வேலைசெய்வாள். இந்த மாதிரி இடிபட்டு வயிறு வளர்ப்பதற்கு செத்துவிட்டால் தேவலை என்றுகூட அந்த இளம் உள்ளம் கதறியது.

சிறுமி கௌரியின் கஷ்டத்தைத் தெய்வம் கண் திறந்து பார்த்துவிட்டது. ஒரு நாள் மாலை கடைக்குப் போய் மளிகை சாமான் வாங்கி வந்தாள். நாலு சாமானில் ஒன்றைக் கடையிலே வைத்துவிட்டு வந்துவிட்டாள். அவளுக்கிருந்த பலஹீனத்தில் ஞாபக சக்தியும், முன்பு இருந்த சாமர்த்தியமும் மறைந்திருந்தது. அசதியினால் தவறு செய்து கொண்டே யிருந்தாள். குணம் கெட்ட சாவித்திரியும் குழந்தையின் கஷ்டம் அறியாமல் திட்டிக் கொண்டிருந்தாள். சாமானைக் கடையில் வைத்து விட்டு வந்ததை அறிந்ததும் சாவித்திரி அடித் தொண்டையில் கத்தினாள். ''நாசமாய்ப் போகிற பெண்ணே! இந்த வயதில் மறதி என்ன! ஓடிப்போய் எடுத்துக் கொண்டுவா! யாராவது தூக்கிக்கொண்டு போய்விடப் போகிறார்கள்! ஓடு!'' என்று வைது துரத்தினாள்.

கௌரி தலைகால் தெரியாமல் ஓடினாள். சாமான் கெட்டுப் போனால் சித்தி திட்டப் போகிறாளே யென்ற பயம் அவளுக்கு. கடைவீதித் திருப்பத்தில் ஓடியபொழுது பெரிய லாரி 'சர்'ரென்று அவள் மேல் ஏறிக் காரியத்தை முடித்துவிட்டது. தாயில்லாப் பெண்; பதினோரு வயது சிறுமி; ஏழை உபாத்தியாயரின் மகள்; பச்சிளங் கௌரி இரத்த வெள்ளத்திலே உருத் தெரியாமல் கிடந்தாள்.

இந்தச் சம்பவத்தைக் கேட்ட சிவசங்கரன் 'ஹா, ஹா' என்று அலறித் துடித்தார். கடகடவென்று தரையில் கிடந்து உருண்டார். பித்துப் பிடித்தவர் போலப் பிதற்றினார். அவருடைய பரிதாபமான நிலையைக் கண்டு மற்றவர்கள் ஆக வேண்டிய காரியத்தைப் பார்த்தார்கள். லாரி டிரைவர் கைது செய்யப்பட்டார்.

சாவித்திரியின் கண்களிலிருந்து ஊராருக்காக இரண்டு சொட்டுத் தண்ணீர் வந்ததே தவிர, மனத்தில் இது ஓர் நல்லதற்கு என்றுதான் நினைத்தாள். இன்னும் இரண்டு மூன்று வருஷங்கள் சென்றால் அந்தப் பெண்ணுக்குக் கலியாணம் செய்தாக வேண்டும். அந்தச் செலவு இல்லாமல் தொலைந்ததே என்று நினைத்தாள்.

வாத்தியார் சிவசங்கரனோ பள்ளிக் கூடத்துக்கு லீவு போட்டுவிட்டு வீட்டில் உட்கார்ந்து கௌரியை எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தார். மாப்பிள்ளையிடம் துக்கம் விசாரிக்க வந்த சாவித்திரியின் தகப்பனார், துக்கம் கேட்டுவிட்டு ஒரு யோசனை கூறினார். மோட்டார் லாரியின் சொந்தக்காரன் மீது 'கேஸ்' போட்டால் பணம் கிடைக்கும். ஏழைக் குடி வறுமையிலிருந்து நீங்கும் என்று புத்தி சொன்னார். இதைக் கேட்ட சிவசங்கரனுக்கு இதயம் வெடித்து விடும் போலிருந்தது. ஆனால், பதில் சொல்லவில்லை.

சிவசங்கரன் ஒன்றும் சொல்லாமல் பிரமை பிடித்தவர் போல் விழிப்பதைக் கண்டதும், ''உங்களுக்கு ரொம்ப கஷ்டமாய்த்தானிருக்கும்! நானும் ஆறு பெண்கள் பெற்றவன். குழந்தைகளின் அருமை எனக்கும் தெரியும்! நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம்! எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். கோர்ட்டிலே கூப்பிட்ட பொழுது நீங்கள் வந்தால் போதும்...!'' என்று சொல்லிச் சென்றார் மாமனாரான வக்கீல் குமாஸ்தா.


சாவித்திரியின் தகப்பனாரான வக்கீல் குமாஸ்தா சிரத்தையுடன் 'கேஸ்' நடத்தும் விஷயத்தில் கவனம் செலுத்தினார். கடைசியில் வெற்றியும் பெற்றார். லாரியின் சொந்தக்காரனிடமிருந்து ஏராளமான பணம் பெற்றார். பண முடிப்பைக் கொணர்ந்து மாப்பிள்ளையிடம் கொடுத்தார்.

அதைப் பார்த்த சிவசங்கரன் சோகத்துடன் சிரித்தார். ''கௌரிக்கு பதிலாக இந்தப் பணமா!'' என்று தன்னையே கேட்டுக் கொண்டார். பிறகு கையில் அந்தப் பணமுடிப்புடன் சாவித்திரி இருந்த இடத்திற்குச் சென்று, ''இந்தா! இதை வாங்கிக் கொள்! 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பார்கள்! என் குழந்தை இருந்த போதும் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள். இறந்தும் உனக்கு உதவி செய்திருக்கிறாள்'' என்று வெறி பிடித்தவர் போலக் கத்திக் கொண்டே பணத்தை வீசி எறிந்தார்.

சாவித்திரி பணப் பையையும் சிவசங்கரனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவள் மனம் இப்பொழுதுதான் கௌரியை நினைத்துக் கலங்கியது.

சிவசங்கரன் ஒரு கணம் மௌனமாக சாவித்திரியையும் பணப் பையையும் பார்த்தார். அடுத்த கணம் தலையைப் பிடித்துக் கொண்டு, ''கௌரி! கௌரி!'' என்று கதறினார். ''அதோ என் கௌரி என்னை அழைக்கிறாள். என் அருமைப் புதல்வி கூப்பிடுகிறாள். நான் போகிறேன். நான் போகிறேன்'' என்று கத்திக்கொண்டே வேரற்ற மரம் போலத் தரையில் சாய்ந்தார். ஏழை வாத்தியாரின் ஆத்மா கௌரியைத் தேடிச் சென்று விட்டது.

போனோமின்ட்
பேதியாகும் சூயிங் கம்



போனோமின்ட் அதன் சுத்திகரண வேலையைச் செம்மையாக, ஆனால் மெதுவாகச் செய்கிறது. எரிச்சல் கொடுக்காது, குடலை நோவச் செய்யாது. குழந்தைகள், பெரியவர்கள் யாவருக்குமே சிபார்சு செய்யப்படுகின்றது.

2, 6, 16 வில்லைகள் கொண்ட பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

ஏஜெண்டுகள் :

ஓரியண்டல் மெர்கண்டைல் ஏஜென்ஸி, 99-ஏ, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

SISTAS: WL 7

அரித்து, எரிந்து கோப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது

நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து இனி யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதிபுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சல் ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத்ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக்



BEFORE AFTER

கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "பன்னிரண்டு வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித்தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட என் நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழுவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.



முரளியின் அதிருஷ்டம்

வி. எஸ். இந்திராணி

ரகு சொல்லியதைக் கேட்டதும் முரளிக்கு 'பகீ'ரென்றது. அவன் சொல்கிறதும் வாஸ்தவம்தான். பள்ளியிலேயே படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, முரளிதான் கெட்டிக்காரன். அதைப் பிள்ளைகள் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் இந்த மாணிக்கத்திற்கு மட்டும் முரளியின் மேல் தீராத வயிற்றெரிச்சல். தான் பதினேழு வயதில் எட்டாம் வகுப்பு படிக்க, இந்தப் பயல் பதினொரு வயதிற்குள் இத்தனை கெட்டிக்காரனாக இருக்கிறானே என்ற எண்ணமாக இருக்கலாம். படிப்பில் முரளியோடு போட்டியிட மூளையில்லாவிட்டாலும் விளையாட்டிலாவது போட்டியிடலாம் என்று நினைத்தவன் போல் ஹெட்மாஸ்டர் "விளையாட்டிற்குத் தலைவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று சொன்னதுமே முரளிக்குப் போட்டியாக வந்து விட்டான். ஹிந்தி பண்டிட், "மாணிக்கம் தான் பலசாலி. அவனைத்தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று ஹெட்மாஸ்டரிடம் சிபார்சு செய்ததாகத் தெரிந்ததும் முரளிக்கு அழுகை அழுகையாக வந்தது. ரகு சொல்வதேபோல் எல்லோரையும்விடக் கெட்டிக்காரனை அவன் மக்குப் பிளாஸ்திரியான மாணிக்கத்துக்கா கீழ்ப்படிந்து விளையாடுவது?

முரளி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். லேசாக இருட்டிக் கொண்டிருந்தது. நேரம் போவதே தெரியாமல் பள்ளிக்கூடத்து வாசலில் தான் மட்டும் தனியாக உட்கார்ந்திருப்பதை நினைத்து அச்சத்துடன் எழுந்து வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தான். இதுகாறும் லேசாகத் தூறிக் கொண்டிருந்த தூற்றல் பலத்த மழையாகப் பொழிய ஆரம்பித்தது. முரளி சொட்டச் சொட்ட நனைந்து விட்டான். இருளிலும், குளிரிலும் அவனால் மேலே ஒரு அடிகூட நடக்க முடியாமற் போகவே . அவன் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டின் வராந்தாவில் ஏறினான்.

அப்பொழுது சொட்டச் சொட்ட நனைந்த மற்றொருவனும் அதே வீட்டில் வந்து நின்றான். பளிச்சென்று ஒரு மின்னல் வீசியது. அவ்வெளிச்சத்தில் தன் சூழ்நிலையை உணர்ந்த முரளி ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். தான் நின்றிருக்கும் வீடு ஹெட்மாஸ்டருடையதென்றும் சற்றுமுன் நனைந்து வந்து, தற்பொழுது வாசற் கம்பத்தைக் கட்டிக் கொண்டு தூங்குகிறவன் மாணிக்கம் என்றும் அறிந்ததும் அவனுக்கு என்னவோ போலிருந்தது.

சரி, இப்பொழுது தெய்வாதீனமாக ஹெட்மாஸ்டர் வீட்டுக்கு வந்திருக்கிறோம். உள்ளே சென்று அவரிடம் ஏதாவது சொல்லிப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான்.

முரளி அடிமேல் அடிவைத்து நடந்து கதவில் கை வைத்தான். கதவு தானாகத் திறந்து கொண்டது. முரளி மெதுவாகக் கட்டிலை நெருங்கினான். கட்டிலில் ஹெட்மாஸ்டர் தூங்கிக் கொண்டிருந்தார். கட்டிலின் அடியில் ஹெட்மாஸ்டருடைய அருமை நாயும் தூங்கிக் கொண்டிருந்தது.

முரளியின் மனம் 'பக்'கென்றது.

முரளி ஹெட்மாஸ்டரை உற்றுப்பார்த்தான். தூக்கத்தில் குறட்டை வேகத்தில் அவர் முகத்தில் எத்தனையோ கோணல்கள் தோன்றி மறைந்தன.

அவர் மாணிக்கத்தையே தலைவனாகத் தேர்ந்தெடுத்து விட்டதாகவும், தான் அவனுக்குக் கீழ்ப்படிவதாகவும் ஒரு காட்சி அவன் மனதில் தோன்றியது. அவனுக்கு ஹெட்மாஸ்டர் மீது அளவற்ற வெறுப்பு உண்டாயிற்று. வெறிபிடித்தவன் போல் பாக்கெட்டில் கையை விட்டு ஒரு பொருளை எடுத்தான். அது அவன் தங்கையின் விளையாட்டு ரப்பர் எலி. முரளி இன்னது செய்கிறோம் என்று யோசிக்காமலே அந்த எலியின் வாலை ஹெட்மாஸ்டரின் வாணக்குழாய் போன்ற நாசித் துவாரத்தில் நுழைக்கப் போனான். வால் மூக்கருகில் சென்றதும், முரளியின்



அடி வயிற்றில் நெருப்பை வைத்தது போல் திகிரென்றது. சட்டென்று கையை பின்னுக்கு இழுத்துக் கொண்டான். அச்சமயம் ரப்பர் எலி கீச்சென்று கத்தியது.

ஹெட்மாஸ்டர் படுத்திருந்த கட்டிலின் பக்கத்தில் அரைக்கண் மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்த பூனை ஒன்று தன் ஜன்ம விரோதியின் குரலைக் கேட்டு, ஹுங்காரத்தோடு கண்களை விழித்தது. முரளியின் கையில் எலியைக் கண்டதும் அவன்மீது பாய்ந்து வந்தது. கடும் கோபத்தின் காரணமாக அப்பூனை நிலை தடுமாறிக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த ஹெட்மாஸ்டரின் நடு வயிற்றில் பொத்தென்று விழுந்தது.

ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்த ஹெட்மாஸ்டர் திடீரென்று இவ்வுலகிற்குக் கொண்டு வரப்பட்டார்; கண்ணைத் திறவாமலே 'கூ கூ' வென்று கூச்சலிட்டார்.

கட்டிலின் அடியில் அமைதியுடன் நித்திரை செய்து கொண்டிருந்த ஜிம்மியும் தலையை உதறிக்கொண்டு வெளியே வந்தது. கட்டிலை நோக்கியதும் அதன் கண்கள் தெறித்து விடும்போல் இருந்தது. வள் வள் வள்ளென்று குரைத்துக்கொண்டே, கட்டிலை நோக்கிப் பாய்ந்தது ஜிம்மி. பூனையும் எதிர்த்து நின்றது.

இரண்டு நிமிஷம் ஹெட்மாஸ்டரின் வயிறு யுத்த பூமியாக விளங்கியது. அடுத்த நிமிஷம் ஜிம்மி முன்னேறிவிட்டது. பூனையைப் பிடித்து கீழே தள்ளித் தானும் கீழே குதித்தது. ஒரு கல்தா கொடுத்ததும் பூனை பிழைத்தது புனர்ஜென்மம் என்று வாசலைப் பார்க்க ஓடியது.

ஹெட்மாஸ்டர் எழுந்து உட்கார்ந்தார். எழுந்ததும் அவர் பார்வை முரளியின் மேல் தான் விழுந்தது. 'திருடன், திருடன், திருடன்' என்று குளறிக் கூச்சலிட்டார்.

அப்பொழுது வெளியே பளீரென்று ஒரு மின்னல் வீசியது. தடாலென்று இடி இடித்தது. மறு நிமிஷம் ஹாலில் மின்சார விளக்கு சட்டென்று அணைந்தது.

"ஐயோ! இந்தச் சமயத்தில் பாழாய்ப் போன விளக்கு சதி பண்ணி விட்டதே! திருடன் எதையாவது கொண்டு போனால் கூடத் தெரியாதே!" என்று கூக்குரலிட்டாள் ஹெட்மாஸ்டர் மனைவி.

"உஷ்! சத்தம் போடாதே. சீக்கிரம் ஹரிக்கேன் லைட்டையாவது ஏற்று!" என்றார் ஹெட்மாஸ்டர். இருவர் கூச்சலையும் கேட்ட ஜிம்மி ஏதோ விசேஷமென்று குரைக்க ஆரம்பித்தது.

முரளியின் குழப்பம் ஒருமாதிரி இப்பொழுது நீங்கியது. இப்பொழுது இந்த இடத்தை விட்டு எப்படி ஓடுவது? ஒரே கும்மிருட்டு. ஓடும் போது ஹெட்மாஸ்டர், அவர் மனைவி, நாய், யார் மேலாவது தடுக்கி விழுந்து விட்டால்! முரளிக்கு பயமாக இருந்தது.

இதற்குள் ஹெட்மாஸ்டர் ஒரு கையில் ஹரிக்கேனும் மற்றொரு கையில் பிரம்மாண்டமான தடியுமாக எதிரே வந்து விட்டார். முரளிக்கு அந்தத் தடியைக் கண்டதும் உலகமே சுழல்வது போலிருந்தது.

ஹெட்மாஸ்டர், "திருட்டுப் பயலே, யாரடா நீ?" என்று தடியை ஓங்கி ஒரு போடு போட்டார்.

"ஐயோ! ஹரிக்கனை அடிச்சு அணைத்து விட்டீர்களே!" என்று கதறினாள் அம்மாள்.

முரளி தைரியத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வாசலை நோக்கி ஓடினான். வேகமாக ஓடினவன் மாணிக்கத்தின் மீது முட்டிக் கொண்டான்.

அடுத்த நிமிஷம் ஹாலிலுள்ள மின்சார விளக்கு பளிச்சென்று எரிந்தது. ஹெட்மாஸ்டர், மனைவியும், நாயும் பின் தொடர வாசலுக்கு ஓடிவந்து வராந்தா விளக்கின் 'ஸ்விச்'சைப் போட்டார். வேகமாக வந்த ஜிம்மி வாசலில் விழுந்த மாணிக்கத்தின்மீது பாய்ந்து பிடுங்கியது. மாணிக்கம் தூக்கக் கலக்கத்தில் ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் ஓடினான்.

அப்பொழுது தான் ஹெட்மாஸ்டருக்கு முரளியைப் புரிந்தது. "அடே முரளி, நீயா?" என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆமாம், நல்ல சமயத்தில் வந்து முரளி திருடனை, வாசலில் பிடித்துத் தள்ளினான்!" என்றாள் ஹெட்மாஸ்டர் மனைவி.

"முரளி, நீ கெட்டிக்காரன்டா" என்று முதுகில் தட்டிக்கொடுத்தார் ஹெட்மாஸ்டர்.

மறுநாள் மாலை முரளி ஜம்மென்று நண்பர்களை விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்வதை மாணிக்கம் வயிற்றெரிச்சல் பொங்கப் பார்த்தான்.

அவன் தீர்மானம்



மூலக் கதை: **மராத்தி**

ஆசிரியர்: **கே. ஜே. புரோகித்** மொழிபெயர்ப்பு: **பி. எஸ். மணி**

நடுப் பகல் வேளை. பம்பாய் கோட்டையில் ஐரோப்பிய முறையில் அமைந்திருந்த கோவா ஹோட்டலில் கூட்டம் சமாளிக்கக் கூடியதாயில்லை. பளபளக்கும் கத்திகளும் வெள்ளிக் கரண்டிகளும் மோதும் சத்தமும் வெள்ளி நாணயங்களின் கலகல ஓசையும் காதைத் துளைத்தன. அதோடு மேல் நாட்டு இசையும் காற்றில் மிதந்து வந்தது. ஹோட்டல் சிப்பந்திகள் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு ஓடி உணவு பரிமாறுவதில் முனைந்திருந்தனர்.

விருந்தினருக்கு வேண்டிய சிற்றுண்டியைச் சமையலறையிலிருந்து எடுத்துப் போக வந்தான் பிரான்ஸிஸ். அச் சமயம் ஜான் அவனருகில் வந்து, "பிரான்ஸிஸ்! உனக்கு டெலிபோன் வந்திருக்கிறதே!" என்று அறிவித்தான். அதைக் கூறியதும் ஜான் அவனைக் கூர்ந்து நோக்கி ஒரு தடவை கண்ணைச் சிமிட்டினான். உடனே பிரான்ஸிஸுக்குத் தன்னை யார் கூப்பிடுகிறார்க ளென்பது தெரிந்து விட்டது. அந்தச் சமயம் டெலிபோனில் பேசுவதற்கு அவன் சிறிதும் விரும்பவில்லை.

அவன் உணவுத் தட்டுகளை எடுத்துக் கொண்டு சமையலறையிலிருந்து புறப்பட்டான். போகும் வழியில் உட்கார்ந்து கொண்டிருந்த மானேஜர் அவனைப் பார்த்து, "உனக்காக எத்தனை நேரம் டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்திருப்பது! உனக்குப் பேச விருப்பமா, இல்லையா!" என்று கோபத்துடன் கேட்டார்.

அவன் சில நிமிஷங்களுக்குள் தனது தீர்மானத்தை மாற்றிக் கொண்டு டெலிபோன் அருகில் சென்றான். பம்பாயின் மற்றொரு பகுதியிலிருந்து அவன் காதலி பிலோமினா "ஹலோ! நான் வேலை செய்யும் எஜமானியம்மாள் வெளியே போயிருக்கிறாள். இன்று மாலைவரை வீடு திரும்ப மாட்டார்கள். உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன், வருகிறீர்களா!" என்று கொஞ்சும் குரலில் வினவினாள்.

"சரி, நான் இப்பொழுதே புறப்பட்டு வருகிறேன்" என்று பதிலளித்துவிட்டு டெலிபோன் ரிஸீவரை 'டக்'கென்று கீழே வைத்தான். பிறகு மானேஜரின் அருகில் சென்று, "ஸார்! என் சகோதரி பேராபத்தில் சிக்கிக்கொண்டு விட்டாள். இன்று மட்டும் லீவு கொடுக்க மாட்டீர்களா!" என்று வினயத்துடன் கேட்டான் பிரான்ஸிஸ்.

அவனது வேண்டுகோளுக்குச் சம்மதமளித்து விட்டார் மானேஜர். அவன் உள்ளம் எண்ணச் சுழலில் சுழன்றது. 'அவள் என் சகோதரியா! இல்லை, இல்லை! என்னருமைக் காதலி பிலோமினாவைச் சந்திப்பதற்காக ஒரு கற்பனைச் சகோதரியை யல்லவா சிருஷ்டித்திருக்கிறேன்! அது மட்டுமல்ல, அவளைப் பேராபத்திலுமல்லவா சிக்க வைத்திருக்கிறேன்! ஒரு பெண்ணின் விழிச் சுழலில் மதி மயங்கிப்போய்க் காதலினால் ஒரு முழுப் பொய்யை யல்லவா சொல்லி விட்டேன்! காதலுக்கே பொய் வாழ்வுதான் வெற்றியளிக்கும் சிறந்த சாதனம் போலும்!'

ஹோட்டலில் உணவு பரிமாறிக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் துரிதப்படுத்திப் பரிமாறிவிட்டு அங்கிருந்து விக்டோரியா டெர்மினஸை நோக்கி நடையைக் கட்டினான் பிரான்ஸிஸ். விக்டோரியா டெர்மினஸை அடைந்ததும் அவன் உள்ளக் கட்டளைக்கு மாறாக அவன் கை பூக்கடைக்காரனிடம் மணம் வீசும் ரோஜா மலர்களை வாங்கியது. பிறகு ரயில் ஏறினான்.

தாதர் ஸ்டேஷன் வந்ததும் அவன் கீழே இறங்கினான். இறங்கிய இடத்திலேயே மரம் போல் ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தான். 'அவளைப் போய்ப் பார்க்கலாமா, வேண்டாமா!' என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். அப்படி அவன் விரும்பியிருந்தால் பிலோமினாவிடமிருந்து டெலிபோன் செய்தி வந்ததிலிருந்து அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏன் எழவில்லை! அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு அவ்வளவு தூரம் வந்துவிட்டான். 'எங்கே போகிறோம்' என்பதைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமலே, தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொள்ளாமலே அவன் ஆறு மாத காலமாக அப்படிப் போய்க்கொண்டிருக்கிறான். ஆனால் பிலோமினாவின் கரம் பற்றியதும் அவனுடைய தெளிவற்ற மனம் நிம்மதியடைந்து விடும். இந்த உலகச் சிந்தனையிலிருந்தே விடுதலை பெற்று இன்ப லோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவான். இப்படிப் பல நாட்கள், பல இரவுகள் கழிந்தன. அவனும் அவனது உள்ளங் கவர்ந்த பிலோமினாவும் சேர்ந்து ஒருயிரும் ஈருடலும்போல இருந்து வந்தார்கள்.

இல்லற வாழ்வை இன்பமாக நடத்த அவனுக்கு வீடோ வாசலோ இல்லை. பகலில் அவன் ஹோட்டலில் வேலை செய்து விட்டு இரவிலும் அந்த ஹோட்டலிலேயே படுத்துக் கொள்ள வேண்டும். வீடு வாசலற்ற அவன் இனிமேல் பிலோமினாவிடம் செல்வதில் பயனில்லை. இந்த எண்ணம் ஏன் ஆறு மாதங்களுக்கு முன்பே அவனுக்குத் தோன்றவில்லை!

ஆறு மாதங்களுக்கு முன் அவன் தன்னுடைய தோழர்களுடன் ஒரு விசேஷத்துக்குப் போயிருந்தான். அங்கே நடந்த பாட்டிலும், கூத்திலும் பெரிதும் மகிழ்ந்த அவனுடைய தோழர்களில் ஒருவனான ஜார்ஜ், "என்ன அப்பா சாந்தாகுரூஸில் என்னுடைய மனிதர்கள் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே வந்தாயானால் கோவா நாட்டின் இன்னிசையைக் கேட்கவும் அவர்களுடைய நாட்டியத்தைக் கண்டு களிக்கவும் செய்யலாம். நீ அதைப் பெரிதும் ரசித்து மகிழ்வாய்" என்று கூறினான்.

அன்று அவன் கோவா நாட்டின் இசையிலும், நாட்டியத்திலும் தன் மனத்தைப் பெரிதும் பறி கொடுத்து விட்டான். அந்த நாட்டியத்தைப் பார்த்த பொழுது அவன் மனக்கண் முன் கோவா நாட்டின் மரங்களும், மாதா கோவிலிலுள்ள மணிகளின் ஓசையும் தோன்றி அவனை நிலை தடுமாறச் செய்தன. அத்தகைய நிம்மதியற்ற சூழ் நிலையில் அவன் தவித்துக் கொண்டிருக்கும் போதுதான் பிலோமினாவைச் சந்தித்துக் காதலிக்கும்படி நேர்ந்து விட்டது.

முதல் தடவை பிரான்ஸிஸ் பிலோமினாவைத் தன் நண்பனுடன் சென்று சந்தித்தான். அதற்குப் பிறகு நண்பனுடைய தயவு அவனுக்கு வேண்டியிருக்க வில்லை. அவர்களிருவருமே தனியாகச் சந்திக்கத் தொடங்கினார்கள். உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை யெல்லாம் ஆசை வார்த்தைகளில் கொட்டி மகிழ்ந்தார்கள்.

விடுமுறை நாட்களில் இருவரும் ஒன்று சேர்ந்து பம்பாய் நகர் முழுதும் சுற்றிப் பார்த்து ஆனந்தித்தார்கள். அதற்குப் பிறகு அது அலுத்து விடவே பம்பாய் நகரில் அமைதியும், சாந்தமும், பசுமையும், கோவாவின் அழகிய காட்சிகளையும் காணத் துடித்தார்கள். ஆனால் அதிலும் அவர்கள் மனச்சாந்தி அடையவில்லை. இன்னும் தாங்கள் மன அமைதி பெறுவதற்கு எது வழி என்று சிந்தித்துப் பார்த்தார்கள். அந்த அமைதியை உலகைச் சுற்றிச் சுற்றி வருவதில் மாத்திரம் அடைந்து விட முடியாது என்று தெரிந்து கொண்டார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களிருவரும் மன அமைதிக்காக மாதா கோவிலுக்குச் சென்றார்கள். கோவிலில் பாதிரியின் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்குப் பதிலாக அவர்களிருவருடைய மனமும் காதல் வெள்ளத்தில் அல்லவா நீந்தத் தொடங்கியது! அதைக் கண்டு அவர்கள் வெட்கப் பட்டாலும் அவர்களுடைய உள்ளம் அந்த இன்ப வேதனையைக் கண்டு உள்ளூறத் திருப்தியும் பெருமகிழ்ச்சியுமடைந்தது. அவர்களிருவரையும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து அல்லல் படுத்தியது. பிரான்ஸிஸ் எப்பொழுதும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டான்.

பிலோமினாவை அவளுடைய எஜமானியின் வீட்டில் சந்திக்கச் சென்றபொழுது அவன் எத்தனை நேரம் மாடிப் படியிலேயே கால் கடுக்க நின்று அவளுடன் பேசிக் கொண்டிருப்பது! எத்தனை நேரம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டே நிற்பது! அந்த மாடிப்படி வழியாகப் பலர் ஏறி இறங்குவார்கள். சிலசமயம் அவர்கள் நின்று அந்த அதிசயக் காதலர்களை வெறித்து நோக்குவார்கள். சில சமயம் அவர்களைப் பார்த்ததும் பார்க்காதது போல் போய் விடுவார்கள். அத்தகைய இடைஞ்சல்களின் நடுவே மாடிப் படிகளிலேயே நின்று அளவளாவுவதற்கு அவர்கள் மிகவும் வெட்கப் பட்டார்கள். தனிமையை நாடி அந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் சந்திக்கலா மென்றால் அதற்குத்தான் அவர்களுக்குச் சிறிதும் தைரிய மில்லையே!

அத்தகைய ஏமாற்ற வாழ்வு பிரான்ஸிஸுக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. அவனை அது



பெரும் சித்திரவதைக் குள்ளாக்கிற்று. காதலுக்காக இத்தகைய சித்திரவதையை அநுபவிப்பதைவிட, அந்த உணர்ச்சியை அடக்கி அந்தச் சித்திரவதையிலிருந்து மீளலாம் அல்லவா! இது வரை உண்பதும், உறங்குவதும், ஊர் சுற்றித் திரிவதும், ஒரு பெண்ணுடன் கேலி வார்த்தைகள் பேசுவதிலுமே அவனுடைய வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. இவ்வாறு அநாதரவான துன்ப வாழ்வில் வாழ்வதை விட அந்தக் காதல் வாழ்க்கைக்கே ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டால் என்ன! ஆனால் இவ்வளவு பெரிய நகரமாக இருக்கும் பம்பாயில் — மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் நிறைந்த அந்த நகரத்தில்—அவனுக்கென்று சொந்தமாக ஒரு குடிசை இல்லை. அவனைப் போன்றவர்கள், சொந்த வீட்டில் இன்பமாக இல்வாழ்க்கை நடத்தும் குடும்பத்தினரைப் போல் வாழ்நாள் முழுதும் வாழ வேண்டும் என்று மனக்கோட்டை கட்டுவது தகுமா! அத்தகைய மனக்கோட்டை பலிக்காது என்று தெரிந்திருந்தும் அவன் அதையே விரும்பினான்.



பிலோமினா வேலை செய்யும் வீட்டின் எதிரே அவன் வந்து நின்றதும் அவனுடைய உள்ளத்தில் மறுபடியும் பழைய கவலைகள் வந்து குடிபுகுந்து கொண்டன. அவன் மனத்தில் முடிவுகட்டிய தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியுமா! ஏன் முடியாது! அவன் நண்பன் ஜான் தன்னுடைய குடிப் பழக்கத்தைக் கை விட்ட பொழுது முதலில் தீராத வேதனைகளை யெல்லாம் அநுபவித்தான். கடைசியில் மதுவை ஒழித்ததும் அவனுடைய உடம்பு நாளுக்கு நாள் தேறி அந்தச் சிந்தனையே யில்லாமல் இப்பொழுது அவன் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லையா! பிலோமினாவின் காதலைத் துறந்தால் முதலில் அவன் நரக வேதனையை அநுபவிக்க வேண்டி வரும். பிறகு நாளடைவில் அந்த வேதனையை மறந்து விடலாம். அந்தக் காதல் தளையிலிருந்து அவன் விடுதலை பெற்று முன்போல் சுதந்திரத்துடன் இஷ்டம் போல் வாழலாம். அந்தச் சுதந்திர வாழ்வில் அவனுக்கு எந்தவித மனப் போராட்டமுமில்லை; அவன் உள்ளத்தை அரிக்கும் வேதனையுமில்லை; அவன் உறக்கமின்றி வாட வேண்டியதுமில்லை. இந்த முடிவைப் பிலோமினாவிடம் தெரிவித்து விட்டு வந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான் பிரான்ஸிஸ். அவளிடம் தைரியமாகத் தனது தீர்மானத்தை எடுத்துக் கூறி அவளிடமிருந்து கடைசித் தடவையாக விடைபெற்றுக் கொள்ளப் புறப்பட்டான்.

*

தலையில் மணம் வீசும் மலர்களைச் சூடி, கேசத்தில் அழகழகாக கொண்டை ஊசிகளைச் செருகி, மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்க ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தாள் பிலோமினா. அவளுடைய தளிர்க் கரங்களை அழகிய ரோஜா மலர்கள் அலங்கரித்தன. அந்த மணம் வீசும் ரோஜா மலர்களைத் தன் வதனத்தோடு ஒட்டி வைத்துக் கொண்டிருந்தாள். செக்கச் சிவந்த ரோஜாமலரின் அழகைவிட அவளுடைய முழு மதியை யொத்த வதனத்தின் அழகு சிறந்தது என்பது அப்பொழுது தெரிந்தது. அடர்ந்த பசுங் கொடியில் அள்ளிச் சொரிந்திருக்கும் மலர்ந்த பூக்களைப் போல் அப்பொழுது காட்சியளித்தாள்.

தனது உள்ளங் கவர்ந்தவனைக் கண்டதும் அவள் கண்கள் ஆனந்தத்தால் விரிந்தன; அவள் செவ்விதழ்கள் ஆவலினால் துடிதுடித்தன; அவள் இதயம் ஆனந்தத்தினால் படபட வென்று அடித்துக் கொண்டது—இதை யெல்லாம் பிரான்ஸிஸ் பார்த்தான். அவ்வளவுதான்; அவனுடைய தைரியம், தீர்மானமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. நீந்துபவன் ஆழமான நீர் நிறைந்த குளத்தைக் கண்டால் எப்படி வசீகரிக்கப்படுவானோ அதைப் போலவே அவன் பிலோமினாவின் பேரழகைக் கண்டதும் அதில் தன்னுடைய தீர்மானங்களை யெல்லாம் அறவே மறந்து விட்டான். தன்னுடைய உணர்ச்சி வெள்ளங்களை யெல்லாம் அணை கட்டிக் கட்டுப்படுத்த நினைத்தான். ஆனால் அது கட்டு மீறிக்கொண்டு பெருகி ஓட ஆரம்பித்து விட்டதே! பிலோமினா அன்புடன் அவன் தலை மயிரைக் கோதி விட ஆரம்பித்த பொழுது அவளைக் கோபத்துடன் ஒரு தள்ளுத் தள்ளி, "பிலோமினா! சிறிது நேரம் தூரவே ஒதுங்கி நில். நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்றான்.

பிலோமினா அவனருகில் வந்து உட்கார்ந்தாள். அவன் வேண்டுமென்றே அங்கிருந்து எழுந்திருந்து சென்று, தூரத்திலிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். அவளைப் பார்க்காமலேயே ஜன்னலின் பக்கம் தன் கண்களைச் செலுத்திய வண்ணம் பேசத் தொடங்கினான்:

"நான் இதைப் பல நாட்களாக உன்னிடம் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் எப்படிக் கூறுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று அத்தீர்மானத்தை வெளியிடத் துணிந்து விட்டேன்."

அவள் ஆவலுடன் அதைக் கேட்கத் திரும்பினாள். 'என் உள்ளத்தரசே! நான் அதைக் கேட்க விரும்பவில்லை. உங்கள் காதல் மொழிகளைக் கேட்க என் மனம் துடிதுடிக்கிறது' என்று வாய் விட்டுச் சொல்ல நினைத்தாள். ஆனால் அவள் பவளச் செவ்வாயிலிருந்து ஏதாவது வார்த்தைகள் உதிர்ந்தால்தானே! அவள் உள்ளத்திலிருந்து எழுந்த உணர்ச்சிகளை வார்த்தைகளினால் வெளியிட முடியவில்லையே! அவளுடைய எஜமானி யில்லாததால் எழுந்த நல்ல சந்தர்ப்பமும், தனது நெடுநாளைய ஆசை நிறைவேறப் போவதையும் நினைத்து அவள் உள்ளத்தில்

இன்பம் துள்ளிக் குதித் தோடியது. ஆனால் பிரான்ஸிஸ் அவளைப் பார்க்கவே பிடிக்காதவன் போல் தன் முகத்தைத் திரும்பிக் கொண்டு, "பிலோமினு! நாம் அந்நிய இடத்தில் சந்திப்பது தவறான காரியமென்று கருதுகிறேன்" என்றான் கண்டிப்பான குரலில்.

இன்ப வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்த அவள் காதுகளில் அவன் வார்த்தைகள் ஒன்றுமே விழவில்லை. கனவிலிருந்து விழித்துக் கொண்டவளைப்போல, "என்ன! என்ன சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டாள் பிலோமினு.

தெருவில் போகும் மக்களிடம் பேசுவதைப் போல அவன் அவளிடம் கோபமாக, "என்னவா! நாம் இப்படி அன்னியருடைய வீட்டில் சந்திப்பது அவ்வளவு உசிதமானதல்ல என்று நினைக்கிறேன்" என்றான் உரத்த குரலில்.

அதைக் கேட்டதும் அவள் இதயத்தின் மீது ஒரு செங்குத்தான மலையிலிருந்து ஒரு பாறை பெயர்ந்து விழுந்தது போலிருந்தது. அவள் தன் இதயத்தை ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டாள். அது படபட வென்று வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கன்னங்களின் வழியாக வழிந்தோடி அவள் மார்பகத்தை நனைத்தது.

"இப்படி நாம் சந்திப்பது உன்னுடைய எஜமானியம்மாளுக்குத் தெரிந்தால் அவள் நம்மைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பாள் என்பதைப் பற்றியல்லவா நீ சிந்திக்க வேண்டும்!"

"நீங்கள் அனாவசியமாக வீண் பிரமைகளில் மூழ்கியிருக்கிறீர்கள். என்னுடைய எஜமானிக்கு நம்முடைய காதல் வாழ்க்கை தெரியும். அதில் அவள் எந்தவிதமான தவறு மிருப்பதாகக் கருதவில்லை" என்றாள் பிலோமினு.

வெடி குண்டைத் தூக்கிப் போடுவது போல அவன், "பிலோமினு! நாம் இப்படித் திருட்டுத் தனமாகச் சந்திப்பதை அறவே வெறுக்கிறேன். அதோடு அன்னியருடைய வீட்டில் காதலர்கள் திருட்டுத்தனமாகச் சந்திப்பது அவ்வளவு விரும்பத் தக்கதல்ல......" என்றான்.

இன்னும் அவன் தொடருவதற்கு முன் அவள் குறுக்கிட்டு, "அப்படியானால் நாம் தங்குவதற்குத் தனி வீடு பார்த்து விட்டீர்களா!" என்று கேட்டாள்.

"இல்லை, பிலோமினு! வீடு தேட என்னால் முடிந்த அளவு முயற்சி செய்யப் போகிறேன். அது வரை நம் சந்திப்பை நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான். நமக்கென்று சொந்தமாக இருக்க இடம் கிடைக்கும் வரை இந்தச் சந்திப்பை நான் சிறிதும் விரும்பவில்லை. இதைப் பாபகரமான காரியமென்று கருதுகிறேன். சில நாட்களுக்கு, ஏன் வாழ்நாள் முழுதுமே இத்தகைய சந்திப்பை நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான்......"

"பிரான்ஸிஸ்! அப்படியானால் நாம் இந்தப் பம்பாய் நகரத்தை விட்டே போய்த் திரும்பிக் கோவாவில் குடியேறி விட்டால் என்ன!"

"ஒருவனுக்கு வீடும், வாசலும், வேண்டிய அளவு சொத்துமிருந்தால் அவன் பிறந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு வர மனம் வருமா! வறுமையால் வாடித் தவிக்கும் நாம் பிழைப்பை விட்டுக் கோவாவுக்குச் சென்றால் வறுமைப் பிணியால் வாடித் தவிக்க வேண்டியதுதான். நான் வாழ விரும்புகிறேன். ஏன், நீயும் வாழ வேண்டியது தான். இங்கேதான் நாம் பட்டினி யின்றிப் பரிதவிக்காமல் வாழ முடியும்" என்று கூறி முடித்தான் பிரான்ஸிஸ். அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

அதற்குமேல் அந்த அறையில் நின்று கொண்டிருந்தால் அவளுடைய துக்கமெல்லாம் கட்டுமீறிக் கொண்டு அழுகையாகப் பரிணமித்திருக்கும். ஆனால் அவன் முன் அழுது கொண்டு நிற்கப் பிலோமினுவுக்குப் பிடிக்கவில்லை. அவனே அவ்வளவு திடசித்தனாக இருக்கும்பொழுது தானும் அவனைப் போல் திடசித்தமும், மன வலிவும் கொண்டவள்தான் என்பதைக் காட்ட நினைத்தாள். அவளுடைய அதிர்ஷ்டமோ என்னமோ அவளுடைய எஜமானியின் குழந்தை எழுந்திருந்து அழத் தொடங்கி விட்டான். அவள் அந்தக் குழந்தையின் அறைக்குச் சென்று அதனைத் தட்டிக் கொடுத்துச் சாந்தப்படுத்தினாள். ஆனால் அதன் அழுகை ஓயவில்லை. அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு மாடிப்படி இறங்கித் தோட்டத்தின் பக்கம் சென்றாள். அக்குழந்தையைப் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடச் செய்தாள். எத்தகைய மாறுதலும் ஏற்படாதது போல் அவள் பிரான்ஸிஸிடம் விடைபெற்றுக் கொள்ள மாடிக்குச்சென்றாள். விதியின் விளையாட்டைக் கண்டு அவள் உள்ளம் உடைந்து விடவில்லை. காதல் அழிவுற்றதைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. அதனால் விம்மிவிம்மி அழுவதற்கும் விரும்பவில்லை.

பிரான்ஸிஸ் மிகுந்த மனக் கஷ்டத்துடன் அங்கிருந்து போவதற்கு எழுந்திருந்தான். அவளைக் கண்டதும் மிகுந்த தடுமாற்றத்துடன், "பிலோமினு! நான் மிகவும் சாதாரண மனிதன். குழந்தைப் பிராயத்திலிருந்து என் உள்ளத்தில் எழுந்துள்ள நியதிகளுக்குப் புறம்பாக வாழ நான் விரும்பவில்லை. என்னுடைய காதல் வெறும் பொய்யும், புனைசுருட்டும், பாபமும் நிறைந்த காதலைப் போன்றதல்ல. அத்தகைய காதல், உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உண்மைக் காதலல்ல. இதயத்தில் எந்தவித ஆசையுமில்லாது உடலை விரும்பும் இச்சைதான் அது. நான் உண்மையாகச் சொல்லுகிறேன், உன்னை நான் உள்ளன்



"நீங்கள் கோடி வீட்டைப் பற்றிச் சொன்ன சமாசாரம் பரம ரகசியமாமே! ரகசியம் என்று நீங்கள் சொல்லாமல் இருந்து விட்டீர்களே! நான் அடுத்த வீட்டு அலமுவிடம் கூடச் சொல்லாமல் இருந்து விட்டேனே!"

மீசையின் உபயோகம்!



புடன் நேசிக்கிறேன். ஆனால் ஆசைக் காதலுக்காக அத்தகைய திருட்டு வழியை விரும்பவில்லை. அதில் என் மனம் சுக்கு நூறாக உடைந்துவிடும். ஆனால் உன்னை விட்டுப் பிரிந்திருந்தாலும் உன் நினைவு என் மனத்தை விட்டு அகலவே அகலாது. அன்னிய வீட்டில் திருட்டுத்தனமாகச் சந்திக்கும் நியவழியை விடப் பிரிந்திருந்து நாம் கஷ்டப்படுவதே நல்லது என்று கருதுகிறேன். அதற்கு நான் பொறுப்பாளியல்ல......"

பிரான்ஸிஸ் மிகுந்த மனக்கவலையுடன் ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கினான். படியிறங்கும்பொழுது எழுந்த ஓசை அவன் இதயத்தில் பல கூரிய முட்களைப் பதித்தது.

பிரான்ஸிஸ் கீழே இறங்கிச் சென்றதும் பிலோமினா சோபாவில் போய்ப் பொத்தென்று விழுந்தாள். இவ்வளவு நேரமும் அவள் அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் கட்டு மீறிவிட்டது. அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

மாடியை விட்டுக் கீழே இறங்கி முன் வாசல் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தான் பிரான்ஸிஸ். அதற்கு மேல் நடந்து சென்று தெருக் கதவைத் திறந்து கொண்டு வீதியில் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை. 'என்னுடைய முடிவு சரியானதா! ஒருவன் பூவை வேண்டுமென்றே மிதித்துத் துவம்சம் செய்வது போல அவள் ஆசைக் கோட்டையை யெல்லாம் சிதைப்பது சரிதானா! என்னுடைய ஆசைக் காதலையு மல்லவா ஆழக்குழி தோண்டிப் புதைத்து விட்டேன்!'

அவன் தோட்டத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அவன் ஏன் அவ்வளவு தூரம் வந்தான்! இத்தகைய கொடுமையைச் செய்வதற்காகவா! அவள் பிலோமினாவை இவ்வளவு தூரம் காதலித்து விட்டுத் திடீரென்று அவளைக் கைவிடுவது நியாயந்தானா!

தோட்டத்திலேயே அவன் தயங்கியபடி நின்றான். பச்சிளங் குழந்தைகள் பூத்துக் குலுங்கிய பூச்செடிகளினருகே சின்னஞ் சிறு பறவைகளைப் போல் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவன் மனம் படாத வேதனையெல்லாம் பட்டது. கூரிய வேல் ஒன்று அவன் இதயத்தைப் பிளப்பது போலிருந்தது. அந்தக் குழந்தைகளை ஏக்கத்துடன் நோக்கினான் பிரான்ஸிஸ். சுதந்திரமாகத் துள்ளித்திரியும் அவர்களைக் கண்டதும் அவனுடைய சிந்தனை சிறகடித்துப் பறந்தது.

ஏன், அவனுக்கும் இத்தகைய அழகிய சின்னஞ் சிறு குழந்தைகளிருக்கலாம் அல்லவா!

இந்த எண்ணம் அவன் மனத்தில் தோன்றியதும் அவன் திடுக்கிட்டு விட்டான். அவன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டான். அவன் கண்கள் அந்த வீட்டுக்கு எதிரேயுள்ள விஸ்தாரமான பங்களாவை வெறித்து நோக்கியது. பக்கத்திலிருந்த மாளிகை ஒன்றையும் நோக்கியது. உடனே பல மாபெரும் மாளிகைகளும், அதிலுள்ள கவர்ச்சிப் பொருள்களும் அவன் மனத்திரையில் நிழலாடின. இரண்டடுக்கு மாளிகையும், அதிலுள்ள அழகிய சீராழி மண்டபமும், விலையுயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்ட விஸ்தாரமான கூடத்தில் வர்ண விளக்குகள் ஜொலிப்பதும், தொட்டிலில் குழந்தைகள் ஆடிக் கொண்டிருப்பதும், ரத்தின கம்பளத்தில் அருமை நாய்க்குட்டி படுத்திருப்பதும்—இவைகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் நிழல் காட்சிப் படங்களாகக் காட்சியளித்தன. அத்தகைய பிரும்மாண்டமான மாளிகைகளின் சொந்தக்காரர்கள் அவனுடைய ஹோட்டலுக்கு வந்தால் அவனை, "பாய்! டேய், பாய்!" என்று அழைப்பார்கள். வாழ்க்கை முழுதும் அவன் 'பையனா'கவே வாழ வேண்டியது தானா! மற்றவர்களைப் போல் அவனும் வாழ்வதற்கு உரிமையில்லையா! அவனும் அவர்களைப் போல் வாழ வேண்டியது தான். அவனுக்கும் அத்தகைய வாழ்வை அநுபவிக்கச் சந்தர்ப்பந் தான் கிடைக்க வேண்டும்...!

இத்தகைய வேகமான எண்ண அலைகள் அவன் உள்ளத்திலேயே எழுந்தன. அந்த உணர்ச்சியின் வேகம் உடனே அவனை அந்த மாடிக்கு விரைவாக ஓடும்படி தூண்டியது. அவன் படாரென்று பிலோமினா இருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

பிலோமினா சோபாவில் உட்கார்ந்தபடியே விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். அவளுடைய தோள்களைப் பிடித்து உலுக்கி, "பிலோமினா! இதோ பார்! நான் திரும்பி வந்துவிட்டேன்" என்று படபடவென்று பொரிந்து தள்ளினான் பிரான்ஸிஸ்.

பிலோமினா அவனை ஒரு தடவை கடைக்கண்ணால் நோக்கினாள். பளபளவென்று ஜொலிக்கும் அவன் கண்கள், அவனுடைய தீர்மானமான முடிவு, படபடவென்று அடித்துக் கொள்ளும் அவன் இருதயம்—இத்தகைய நிலையில் அவனைப் பார்ப்பது அவள் இதுதான் முதல் தடவை.

பிரான்ஸிஸ் பேசத் தொடங்கினான்: "பிலோமினா! இனி உன்னை நான் விட்டுப் பிரியமாட்டேன். உண்மையாகச் சொல்லுகிறேன். உன்னை ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டேன். நீ கூறியது தான் சரியான வழி. வீடு வாசலற்றிருக்கும் நம்மைப் போன்ற திக்கற்றவர்கள் என்னைப் போல் மனக்கோட்டை கட்டுவது மிகவும் தவறு."

பிலோமினா மௌனமாயிருந்தாள். பிரான்ஸிஸும் அதற்குமேல் பேசவில்லை. அவன் எத்தனையோ விஷயங்களை அவளிடம் தெரிவிக்க விரும்பினான். ஆனால் அவனுடைய உணர்ச்சிகளையெல்லாம் வார்த்தைகளில் கொட்ட முடிந்தால் தானே! அவன் தன்னால் முடிந்த அளவு தன் எண்ணங்களை எடுத்துக் கூறிவிட்டான். அவன் அந்த அறையின் கதவைச் சாத்தினான். தன் சொந்த வீட்டின் கதவை மூடுவதைப்போல, அவன் மிகுந்த நம்பிக்கையுடன், நிதானமாக, மெதுவாகக் கதவை இறுகச் சாத்தினான்.



அவளுக்கு தெரியும்

வெகு சூடிகை அவள். மாலை சோர்வுடன் வீடு திரும்பும் கணவனை புது மனிதனாக்கும் மந்திரம் அவளுக்கு தெரியாததா! அவர் சட்டையை கழற்றுவதற்குள் அவள் ஒரு டம்ளர் 'டீ' போட்டுக் கொண்டு வந்து விடுகிறாள்.

'இந்தாருங்கள்! முதலில் 'டீ'யைக் குடியுங்கள். ஆறி விடப் போகிறது' என்று அன்புடன் அதிகாரமல்லவா செய்கிறாள் அவள்!

அவருக்கு பிடித்தமாக இருக்க 'டீ'யில் இன்ன அளவு சர்க்கரை பால் சேர்க்க வேண்டும், இன்ன சூட்டில் 'டீ' இருக்க வேண்டும் என்பதை அவளைப் போல் ஒவ்வொரு நல்ல மனைவியும் அறிவாள்.

[ஒரே நொடியில், அதிக சிரமமில்லாது தயாரிக்கக்கூடிய சிக்கனமான பானம் 'டீ' தான் என்பதை சொல்லவும் வேண்டுமா!]


'சிறந்த 'டீ' தயாரிப்பது எப்படி' என்ற சித்திரங்களோடு கூடிய இலவச புஸ்தகத்திற்கு, ஸெண்ட்ரல் டீ போர்ட், 27 & 29 ப்ரபோன் ரோட், கல்கத்தா என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

மந்திர சக்தியுள்ள 'டீ'யைக் குடியுங்கள்.



ஸெண்ட்ரல் டீ போர்டால் வெளியிடப்பட்டது.

C.T.B. 67



சிதைந்து போன விஜயநகரத்துச் சிற்பங்களுக்கிடையே சிந்தனையில் ஆழ்ந்தவனாய் நின்று கொண்டிருந்தேன். அதிலும் ஒரு சிற்பம்தான் என்னை மிகவும் கவர்ந்தது. சுற்றுப்புறம், சூழ்நிலை ஆகியவைகளை மறந்து அந்தச் சிலையையே பார்த்துக்கொண்டிருந்தேன். அது அழகின் சின்னமான ஒரு மடந்தையின் எழிலுருவம். ஆங்காங்கே சிதைந்திருந்தாலும் அந்தச் சிற்பத்தின் அழகு மட்டும் குன்றவில்லை. அதனுடைய ஜீவ ஒளி மறையவில்லை. அதனுடைய கண்கள் ஆயிரம் கவிதைகளைப் பாடின. என் கண்கள் அதைவிட்டு அகல மறுத்தன.

எவ்வளவு நேரம் அப்படி யிருந்தேனோ, தெரியாது. மறுபடியும் என் உணர்வு வந்தவுடன் என் நண்பர்களை அங்கு காணவில்லை. அவர்கள் வரும் வரையில் சிறிது கண் அயரலாம் என்ற நோக்கத்துடன் சிற்பத்தின் அருகிலேயே உறங்க ஆரம்பித்தேன்.

“நண்பரே!” என்று யாரோ என்னை அழைத்தார்கள். ஆனால் குரலுக்கு உடையவரை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.

“நான்தான் சிலை பேசுகிறேன்” என்றது அந்தச் சிற்பம்.

என் உள்ளம் நடுங்கியதை என் உடல் பிரதிபலித்தது.

“பயப்படாதீர்கள்! நான் பேயல்ல, வெறும் சிற்பம்தான். உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இன்று சோமநாதபுர ஆலயத்தில் மீண்டும் ஜோதிர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யப் போகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! அதே சோமநாதர் ஆலயத்தைக் கஜினி முகம்மது சூறையிட்டதின் காரணத்தை நீங்கள் அறிவீர்களா!” என்று கேட்டது அந்தச் சிற்பம்.

“எனக்குச் சரித்திர அறிவு அவ்வளவு போதாதே!” என்றேன் சிற்பத்தைப் பார்த்து.

“இந்திய சரித்திரத்தையே கரைகண்டவர்களுக்குக்கூட அதன் காரணம் தெரியாது. ஏனென்றால் அந்த நிகழ்ச்சி சரித்திர புத்தகங்களில் இடம் பெறவில்லை.

கஜினி முகம்மது விக்கிரஹ நிக்கிரஹனானதற்குக் காரணம் நான்தான். அவன் உள்ளத்தில் ஒரு புயலை நான்தான் கிளப்பி விட்டேன். அந்தப் புயல் இந்தியக் கலைகளையே அழிக்க ஆரம்பித்தது. அந்தச் சூறாவளியை நான் அவன் உள்ளத்தில் எழுப்புவதற்கு முன்னால் அவன் விக்கிரஹ நிக்கிரஹனாக இருக்கவில்லை. இந்திய கலாசாரத்தை அவன் விரும்பினான். இந்தியக் கலைகள் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. தெவிட்டாத காவியங்கள் அவன் நெஞ்சத்தில் நிரந்தர இடம் பெற்றன. கஜினிக்குச் செல்ல வேண்டியதையே மறந்துவிட்டுக் கலாசாரத்தை இருப்பிடமாகக் கொண்ட இந்நாட்டின் தலைநகரான டில்லியிலேயே ஒரு ராஜ சபை ஏற்படுத்திக் கொண்டு தங்க ஏற்பாடுகளும் செய்துவிட்டான்.

கலையெனும் மதுவைப் பருகிக் கொண்டிருந்த அவன் வாழ்வில் ஒரு சம்பவம்—அல்ல, ஒரு சந்திப்பு—நிகழ்ந்தது. கலைகளின் மீது அவன் கொண்டிருந்த பற்றுதலை அது அதிகப்படுத்தியது.

அவன் ரஜினி தேவியை சந்தித்த சம்பவம்தான் அது. ரஜினி தேவி நாட்டியக் கலைக்கென்றே பிறந்தவள். அழகு என்பது எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு அவளை ஒரு எடுத்துக் காட்டாக இறைவன் படைத்தானோ என்று தோன்றும். அவள் எழிலுக்கு ஒரு உவமை. பருவம் அவள் அழகை மெருகிட்டது. கருமை நிறமென்றால் அதை அவளுடைய கூந்தலில்தான் காண முடியும். அவளுடைய கண்கள் அறிவின் அழியா இருசுடர்கள். ஆழ்ந்த அறிவின் ஆழத்தை அவை பிரதிபலித்தன. உணர்ச்சிகளை ஒரு கணத்தில் மாற்றிக் கொள்ளக் கூடிய சக்தி படைத்திருந்தன அவள் விழிகள். நடனமாடும் பொழுது அவள் ஆடுகிறாள் என்று சொல்ல முடியாது. அவள் காற்றினில், இசைக்கேற்ப மிதக்கிறாள் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு லாகவமாக ஆடுவாள்.

கஜினி முகம்மது அவளை நடனமாடும் சபையிலே தான் கண்டான். மின்னல்போல ஆடிய அவள், அவன் மனதில் ஒரு புயலையே எழுப்பி விட்டாள். அவன் மனதில் ஆசை அலையலையாகப் பாய்ந்தது. அந்த அலைகளில் அவளுடைய பிரதிபிம்பம் தோன்றித் தோன்றி மறைந்தது. அவளைத் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்

டான். ஆகவே, அவள் வீடு தேடிச் சென்று அவளைச் சந்தித்து, "ரஜினி! உன்னிடம் ஒரு வேண்டுகோள். உன்னைக் கண்டது முதல் என் மனத்தை உனக்குப் பறிகொடுத்து விட்டேன். நீ என்னை மணந்து கொள், ரஜினி!" என்று கெஞ்சினான்.

"ஷா-இன்-ஷா, மன்னிக்க வேண்டும். நான் என் உள்ளத்தை ஏற்கெனவே ஒருவரிடம் பறிகொடுத்து விட்டேன். ஆகவே, தயவுசெய்து என்னை மறந்து விடுங்கள்" என்றாள் ரஜினி பரிவுடன்.

ஏமாற்றத்துடன் திரும்பிய கஜினி அவள் வீட்டு வாயிலிலேயே கனோஜ் நாட்டுத் தளபதியான பிரதாபைச் சந்தித்தான். ரஜினிக்கு அவனுக்கும் உள்ள காதலை அவன் கேள்விப்பட்டிருந்தான். அந்தக் காதலை வெற்றி பெறாமல் செய்து பலாத்கார முறையால் அவளைத் தன்வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டான்.

ஆகவே, கனோஜ் நாட்டின்மீது திடீரென்று படையெடுத்தான். அதனால் கனோஜ் நாட்டுத் தளபதியான பிரதாப் சண்டையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். இதுதான் தக்க தருணமென்று எண்ணிக் கஜினி முகம்மது ரஜினியைப் பலாத்காரமாகத் தன்னுடன் அழைத்துச் சென்றான். இந்தச் செய்தி பிரதாபுக்கு எட்டாதவாறு பல முன்னேற்பாடுகளும் செய்திருந்தான். அது மட்டும் அல்ல; தனக்கும், ரஜினிக்கும் திருமணம் நடக்க வேண்டிய தினத்தைக்கூட கஜினியே குறிப்பிட்டு ஏற்பாடுகளும் செய்து விட்டான்.

அந்தச் சமயத்தில் தான் அவனுடைய சபைக்கு அந்த இளைஞன் வந்தான். களிப்போடிருந்த கஜினியின் சொற்களில் கனிவு கலந்து காணப்பட்டது.

"தாங்கள் யார்! சபையை நாடி வந்த காரணம் யாதோ!" என்று கேட்டான்.

"என் பெயர் மோஹன். சிற்பங்கள் செதுக்குவேன். சிற்ப சாஸ்திரத்தில் கைதேர்ந்த ராஜேந்திரரிடம் அந்தத் தெய்வீகக் கலையைப் பயின்றேன். தாங்கள் உத்தரவு கொடுத்தால் சிற்பங்கள் செதுக்கலாம்" என்றான் அந்த இளைஞன் மிகவும் பணிவோடு.

கஜினி ஒரு கண நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் உள்ளத்தில் மின்னல் போன்ற ஒரு எண்ணம் தோன்றியது. தன் இருதயக் கோயிலில் குடிகொண்டிருந்த ரஜினி தேவியின் சிற்பத்தைச் செதுக்கச் சொன்னால் என்ன என்று யோசித்தான். ஒரு கணத்தில் முடிவுக்கும் வந்து விட்டான்.

"மோஹன்! நல்ல சமயத்தில் நீ வந்தாய். அடுத்த வாரம் இதே நாளில் எனக்கும் ரஜினி தேவிக்கும் திருமணம் நடக்கப் போகிறது. இந்த ஒரு வாரத்திற்குள் ரஜினியின் சிலை யொன்று செதுக்க வேண்டும். அதற்கான எல்லாச் சௌகரியங்களையும் உனக்குச் செய்து தருகிறேன்" என்று அறிவித்தான் கஜினி.

அதற்குத் தன் பூரண சம்மதத்தைத் தெரிவித்தான் மோகன்.


ரஜினி தூண்டிற் புழு வெனத் துடித்தாள். பிரதாபுக்குச் செய்தி யனுப்ப அவள் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. அவள் உள்ளத்தில் பொங்கியெழுந்த துக்கம் கண்ணீராக வெளி வந்தது. கரிய மேகத்தினின்றும் மழைத் துளிகள் விழுவதைப் போல், அவளுடைய கரிய கண்களினின்றும், கண்ணீர்த் துளிகள் விழுந்தன. பேரிடி போன்று அவளுக்கு வேறொரு செய்தி வந்தது. 'பிரதாப் போர்க்களத்தில் மாண்டான்!' என்ற செய்திதான் அது. கஜினி முகம்மது கிளப்பிவிட்ட வதந்தி அது. அந்த வதந்தி அவள் உள்ளத்தைக் கலக்கி விட்டது. பிரதாபை நினைத்துச் சதா புலம்பிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது தான் அந்தச் சிற்பி வந்தான். சிற்பத்திற்கு உட்காரும்படியான நிர்ப்பந்தம் வேறு அவளுக்கு ஏற்பட்டது. வேண்டா வெறுப்புடன் அதை ஏற்றுக் கொண்டாள்.

பிறகு ரஜினி தேவியின் சிற்பம் ஆரம்பமாயிற்று. அவன் கைகள் லாகவமாகச் செதுக்கின. சிற்றுளி, அவன் சிந்தனை சென்ற வழியே சென்றது. கற்பனைத் திறன் அவன் கைகளிலே காணப்பட்டது. ரஜினியின் அழகு அப்படியே அந்தச் சிலையில் அமைந்து விட்டது. சூழ்நிலை, பசி, தாகம் ஆகியவைகளை மறந்து அவன் சிற்பம் செதுக்கினான். கஜினி முகம்மது பலமுறை வந்து சிற்பத்தைப் பார்த்து வியந்து சென்றான்.

அன்று கடைசி நாள். பௌர்ணமியும் கூட. இரவில் கூடச் சிற்பத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தான் மோஹன். சிற்பத்தில் அனைத்தும் பூர்த்தியாகிவிட்டன. கண்களைத் திறக்க வேண்டியதுதான் பாக்கி. மோஹன் அதன் கண்களையும் திறந்து விட்டான். ரஜினியின் அந்த ஒரு ஜோடிக் கண்களின் அழகு அப்படியே அந்தச் சிற்பத்தில் அமைந்து விட்டது.





"ஏன் ஸார், நிக்கிறீங்க?...... ரிக்ஷா வரமாட்டே என்றால் வர இல்லேதான்! ...... புதுசா இப்போ தான் ரிக்ஷா வாங்கி யிருக்கிறேன். ......ஆமாம்......வேறு ரிக்ஷாவைப் பாருங்க!"

அப்பொழுதுதான் ரஜினியின் கண்களும் மோஹனனின் கண்களும் சந்தித்தன.

"ரஜினி! என்னைத் தெரியவில்லையா உனக்கு! நான் தான் பிரதாப்!" என்று சொல்லித் தன்னுடைய பொய் உடைகளையும் தலையிலிருந்த துணியையும் அகற்றினான் பிரதாப்.

"ஆ! நீங்களா! பிரதாப்!" என்று சொன்னபடியே அவனைத் தழுவிக் கொண்டாள் ரஜினி.

"பேசிக்கொண்டு நிற்க நமக்கு நேரமில்லை. நான் காவற்காரர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து வெகு நேரம் ஆகிவிட்டது. உடனே புறப்படு. என் குதிரை ஆற்றிற்கு அப்பால் காத்துக் கொண்டிருக்கிறது" என்று சொல்லித் துரிதப்படுத்தினான் பிரதாப்.

அடுத்த கணம் அவர்கள் ஆற்றிற்கு அப்பால் வேகமாக ஓடிக் கொண்டிருந்த ஒரு வெண் புரவியின்மீது இருந்தார்கள். குளம்புகளின் சத்தம் காற்றில் கலந்து மெதுவாக மறைந்தது.

*   *   *

அதற்கு மறுதினம் திருமணம் நடக்க வேண்டிய தினம். கஜினி முகம்மதின் உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்தோடியது.

மணம் நடக்க வேண்டிய தினத்தன்று காலையில் ரஜினியை அழைத்து வருவதற்காக அவனும் மற்றவர்களும் அவள் தங்கியிருந்த அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனையில் அவள் காணப்படவில்லை. ஆனால் ரஜினியைப் போலிருந்த அந்தச் சிலையைப் பார்த்தான். அதனருகே ஒரு ஓலைச் சுவடி காணப்பட்டது. பரபரப்புடன் சென்று அதை எடுத்துப் படித்தான். ஆச்சரியத்தைக் காட்டிய அவன் முகத்தில் விரைவில் கோபக்குறி தென்பட்டது. அவன் படித்த வாக்கியங்கள் இவைகள் தான்.

"ஷா—இன்—ஷா,

தங்களுக்கு இந்த ஓலை ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அமைதியுடன் படியுங்கள். இந்த ஓலையை எழுதியது வேறு யாருமில்லை. நீங்கள் பரம வைரியாகக் கருதும் பிரதாப்தான். அன்று தங்கள் சபைக்கு மோஹனன் என்ற பெயருடன் வந்தேன்.

தங்களுக்கு வேண்டியது ரஜினியின் வெளி அழகு. அதற்காகவே தாங்கள் அவள் மீது ஆசை கொண்டீர்கள். ஆகையால் நான் அளித்திருக்கும் சிற்பத்தைக் கண்டே மகிழுங்கள். என் ரஜினியை நான் அழைத்துச் செல்கிறேன். என்னைத் தேட முயற்சிக்க வேண்டாம். நானும் ரஜினியும் தப்பி வெகு நேரமாகிவிட்டது.

தங்கள் அன்பன்,
பிரதாப்."

கஜினி முகம்மதின் வாய் 'துரோகம், துரோகம்!' என்று முணுமுணுத்தது. அந்த ஏமாற்றத்தை அவனால் தாங்க முடியவில்லை. அவன் முகத்தில் கோபக்கனல் வீசிற்று.

"நான் இன்று, கேவலம் ஒரு சிற்பத்தால் ஏமாற்றப் பட்டேன். ஆகையால் இன்று முதல் சிற்பக்கலையே எனக்கு விரோதி. கலைகளினால் ஏமாற்றப் பட்டேன். ஆகையால் இந்நாட்டின் கலைகளை யெல்லாம் அழித்து விடுகிறேன்" என்று கர்ஜித்தான் கஜினி முகம்மது. பக்கத்திலிருந்த ரஜினியின் சிலையையும், சிவபெருமானின் சிலையையும் ஒரு கடப்பாறையால் சின்னாபின்னமாக்கினான். அப்பொழுதும் ரஜினியின் சிலை அவன் கண்களை உறுத்தியது. "என் கண்முன் நில்லாதே. ஆற்றோடு போ!" என்று சொல்லி அதைப் பக்கத்திலிருந்த ஒரு நதியில் தள்ளிவிட்டான்.

தள்ளி விடப்பட்ட அந்தச் சிற்பத்தினால் ஆற்றில் ஏற்பட்ட கொந்தளிப்பு உடனே அடங்கி விட்டது. ஆனால் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பின் அலைகள் அடங்கவேயில்லை. துவேஷத்தினால் அவன் மனதில் உண்டான அந்தப் பெரும் சூறாவளி ஓயவேயில்லை.

அதற்குப் பிறகு அவன் இந்தியாவில் தங்கவேயில்லை. கஜினிக்குச் சென்று விட்டான். அடிக்கடி படையெடுத்து வந்து இந்தியாவைச் சூறையிட்டான். சோமநாதபுர ஆலயத்தைத் தன்னுடைய முக்கியமான இலக்குகளில் ஒன்றாக்கிக் கொண்டான்.

ஆற்றில் தள்ளப்பட்ட நான் பல இடங்களுக்கு மாறினேன். கடைசியில் கிருஷ்ண தேவராயரால் இங்கு கொண்டு வரப்பட்டேன்" என்று முடித்தது அந்தச் சிற்பம்.

மெல்லென என்மீது ஒரு ஸ்பரிசம் பட்டது. விழித்தெழுந்து நான் கண்டது என் தோழர்களைத்தான். "பகலில் என்னடா தூக்கம்!" என்று அவர்கள் கேட்டார்கள்.

"சிற்பம், சிற்பம்!" என்று இழுத்தேன்.

"என்ன உளறுகிறாய், சிற்பத்திற்கென்ன!" என்றான் ராமமூர்த்தி.

நான் சிற்பம் சொன்ன கதையைச் சொன்னேன். கதையைக் கூறி முடித்ததும் ராமமூர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தான்.

"சிற்பம் கதை சொல்ல அதை நீ நம்பினாயா! நான் பல சரித்திரப் புத்தகங்களை படித்தவன். என்னிடம் பொய் சொல்கிறாயே! கஜினி முகம்மது என்றுமே இந்தியாவில் தங்கவில்லை. அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். அவ்வளவுதான். 'அவன் பிறவி விக்கிரஹ நிக்கிரஹன்'" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

அவன் சரித்திரத்தில் எம். ஏ. பட்டம் வாங்கியவன். அவன் முடிவையே என் நண்பர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் எனக்கு மட்டும் அந்தக் கதை உண்மையென்றே பட்டது. போகும்பொழுது, கதை சொன்ன அந்தச் சிற்பத்தை நன்றி மிகுந்த கண்களுடன் பார்த்துக்கொண்டே சென்றேன்.

கொசு வலை

கொசுக்கடியின் உபத்திரவத்திலிருந்து எங்களது உயர்ந்த ரக வலையினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள். வெளியிடங்களில் ரூ. 15க்கு கூட கிடைப்பது கஷ்டம். விலை ரூ. 7-8-0. வி. பி. பி. சார்ஜ ரூ. 1-8-0 தனி.

14 பாஷைகள் 48 மணி நேரத்தில்

ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பர்மீஸ், தமிழ் முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் கற்கலாம். விலை ரூ. 5. வி. பி. பி. சார்ஜ் அணு 12.

எலக்ட்ரிக், ரேடியோ கைட்


மின்சார சக்தியின்றி இயக்கக் கூடிய ரேடியோவை ரூ. 15 செலவிலேயே தயாரியுங்கள். ரேடியோ ரிப்பேர், எலக்ட்ரிக் ஒயரிங் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு மாதம் ரூ. 200 சம்பாதியுங்கள். விலை ரூ. 4-4-0. வி. பி. பி. சார்ஜ் அணு 12 தனி.

தொழில் புஸ்தகங்கள்

சோப் தயாரிக்கும் முறை ரூ. 3. வாசனை திரவியங்களுக்கானது ரூ. 3. தையல், கட்டிங் முறை ரூ. 3-8-0. போட்டோகிராபிக் ஆசான் ரூ. 3. டிராயிங், பெயிண்டிங் ரூ. 4. ரப்பர் தொழில் ரூ. 3. வி. பி. பி. சார்ஜ் தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்

SUPREME TRADERS (K. L)
RANGMAHAL, ALIGARH, U. P.



விசேஷ அநுபந்தத்துடன் கூடியது.
60,000 வார்த்தைகட்கு மேலடங்கியது.
பண்டித வே. இராமசந்திர சர்மா
அவர்களால் தொகுக்கப்பட்டு
பேரறிஞர் யோகி சுத்தானந்த பாரதியார்
அவர்கள் முன்னுரையுடன் கூடியது.
மாணவ மாணவிகட்கு இன்றியமையாதது
950 பக்கங்கள் ... விலை. ரூ. 7-12-0
வெளியிட்டோர்:

B. S. & F. MART
113, Armenian Street, Madras - 1

இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா! அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா!

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே.ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதும் நேரடியாக இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிற தென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது

50 ஆண்டுகளுக்கு



அவ்வளவு
புதுமையானது



அவ்வளவு
ருசியுள்ளது

மேலாக இந்தியாவில்

பிரசித்திபெற்ற



எவ்வளவு
உயர்ந்த
ரகம்



எவ்வளவு
விதமான
தினுசுகள்

பிஸ்கோத்துகள்

சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா

FBMI
FEDERATION
OF BISCUIT
MANUFACTURERS
OF INDIA



என் சகோதரி

ராஜேசுவரி

ரயில் பெருமூச்சு விட்டுக் கொண்டே ஸ்டேஷனில் வந்து நின்றது. எதிரில் நின்ற பெட்டியில் நான் ஏறிக் கொண்டேன். அதில் அதிகமாகக் கூட்டமில்லையாதலால் தாராளமாக உட்கார்ந்து கொள்ள முடிந்தது. வண்டியும் கிளம்பியது. சிறிது நேரம் ஏதோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம்தான் பேச்சுத் துணைக்கும் ஆளில்லாமல் பொழுதும் போகாமல் உட்கார்ந்து கொண்டிருப்பது? பெட்டியின் உள் பக்கம் பார்வையைத்திருப்பினேன். ஒரு பெண், ஜன்னலில் கைகளை வைத்துக் கொண்டு, அதன் மேல் தன் முகத்தைப் புதைத்தவாறு விம்மிக் கொண்டிருந்தாள். எனக்குப் பரிதாபமா யிருந்தது. அவளருகில் சென்று உட்கார்ந்து, "ஏன் அம்மா? என்ன சமாசாரம்? ஏன் அழுகிறாய்?" என்றேன். அவள் பதிலே பேசவில்லை. "என்னை உன் உடன் பிறந்த சகோதரியாகப் பாவித்துக் கொள். ஏன் அழுகிறாய்? காரணத்தைச் சொல். நான் என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்" என்று நான் பன்முறை அவளைச் சமாதானப்படுத்திய பிறகுதான் அவள் முகம் கொஞ்சம் மலர்ந்தது. அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுத் தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள்:

"பிறந்த கதையைச் சொல்லவா? வளர்ந்த கதையைச் சொல்லவா என்று ஒரு கதை சொல்லுவார்கள். அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது. இருப்பினும் எனக்குப் புத்தி தெரிந்ததிலிருந்து நடந்ததை மட்டும் சொல்லுகிறேன். எனக்கு நாலு வயது நடந்து கொண்டிருந்தபோதுதான் என்னை அருமையாகப் பெற்று வளர்த்த என் தாயார் காலமானாள். நான் பின்னால் அநுபவிக்கப் போகும் கஷ்டங்களை யெல்லாம் என் தாயார் முன்னதாகவே தெரிந்து கொண்டு, அவற்றை நான் பொறுமையாகத் தாங்க வேண்டும் என்பதற்காகத்தான் எனக்குப் பூமா என்று பெயர் வைத்தாளோ, என்னமோ! என் தாயாருக்குப் பிறகு, நான் என் பாட்டியிடம், அதாவது அப்பாவின் அம்மாவிடந்தான் வளர்ந்து வந்தேன். என் தாயார் காலமான சில மாதங்களுக்கெல்லாம் எனக்குச் சித்தி வந்து விடவே, என்னை அவளிடம் ஒப்படைத்து விட்டு என் பாட்டி தன் பெரிய பிள்ளையிடம் சென்று விட்டாள்.

ஒரு நாள் என் தகப்பனார் என்றுமில்லாத அன்போடு என்னைக் கூப்பிட்டார். நானும் ஓடிச் சென்று அப்பாவின் எதிரில் நின்றேன். அவர் என்னைத் தன் மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சநேரம் கொஞ்சினார். பிறகு, "பூமா, உன் சங்கிலியைக் காட்டு, பார்ப்போம்!" என்றார். நானும் என் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றி அவரிடம் கொடுத்தேன். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு என்னைப் பார்த்து, "பூமா, நீயோ இப்போது சின்னப் பெண். கழுத்திலே சங்கிலியைப் போட்டுக் கொண்டிருக்


தால் எங்கேயாவது தொலைந்து விடும். நீ பெரியவளான பிறகு சங்கிலியை வாங்கிக் கொள்ளலாம். அதுவரைக்கும் இது சித்தியின் கழுத்தில் இருக்கட்டும்'' என்றார். நானும் யதார்த்தமாகச் சங்கிலியைச் சித்தியின் கழுத்தில் போட்டு விட்டேன். இனிமேல் அந்த நகை திரும்பியே வராது என்றும், இன்னும் இருக்கும் நகைகளும் சித்தியிடமே போய்ச் சேரப் போகிறதென்றும் நான் அப்போது கண்டேனா என்ன?''

இதைச் சொல்லிப் பூமா நிறுத்தினாள். நான் அவளைக் கவனித்தேன். அழகிய முகம், திட்டமாக இட்டிருந்த பொட்டு அவள் அழகை இன்னும் அதிகப்படுத்திக் காட்டியது. காதில் சின்னஞ் சிறிய தோடு; மூக்கில் ஒரே ஒரு மூக்குத்தி. கழுத்தில் திருமங்கலியக் கயிற்றைத் தவிர வேறொன்றையும் காணோம். அவளது கண்களில் - பேச்சில் எல்லாவற்றிலுமே ஒரு ஆழ்ந்த சோகம் தென்படுவதாக எனக்குத் தோன்றியது.

பூமா மேலும் கதையைத் தொடர்ந்தாள் :

''என் வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தில், சித்தியிடம் பட்டுக் கொண்ட உதைகளும், திட்டுகளுந்தான் நிரம்பியிருக்கும். அவற்றைப் பற்றி உங்களிடம் விரிவாகக் கூறி, உங்களுக்கு வெறுப்பை உண்டாக்க நான் விரும்பவில்லை. இதற்கிடையில் என் பாட்டியிடமிருந்து, என் அப்பாவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், பூமாவுக்கு வயது பதினைந்து ஆகிவிட்டது. கல்யாணத்திற்கு ஏற்பாடு செய் என்று குறிப்பிட்டிருந்தாள். அதற்கு என் சித்தி சொன்ன சொற்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கல்யாணம் என்று ஆகிப் புக்ககத்துக்குச் சென்று விட்டால், சித்தியிடம் கேட்டுக் கொள்ளும் பேச்சுகள் மிச்சந்தானே என்று நான் சந்தோஷப்பட்டேன். ஆனால் என்னுடைய அந்த எண்ணத்திலும் மண்தான் விழப் போகிறது என்று எனக்கு அப்போது தெரிந்திருந்தால்தானே? கல்யாணத்தின்போது பாட்டி, என் அம்மாவினுடைய நகை என்று சொல்லி எனக்கு இரட்டை வடச் சங்கிலி ஒன்று போட்டாள்.

ஒரு நாள் நான் என்னைத் தேய்த்துக்கொள்ளுவதற்காக நகைகளையெல்லாம் கழற்றி வைத்து விட்டுக் குளிக்கச் சென்றேன். வந்து பார்த்தால் சங்கிலியை வைத்திருந்த இடத்தில் காணோம். சித்தியைக் கேட்கலாமென்று போனேன். அது சித்தியின் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்தது. இருந்தாலும் நான் வேண்டுமென்றே, ''சித்தி, என் சங்கிலியைப் பார்த்தாயோ?'' என்று கேட்டு வைத்தேன். அவ்வளவு தான், சித்தி சண்டமாருதமாகப் பொழிய ஆரம்பித்து விட்டாள். ''ஏண்டி, இந்தச் சங்கிலியைப் போட்டுக் கொள்ள எனக்கு உரிமை யில்லையா, என்ன? மூத்தாள் சங்கிலியை இளையாள் போட்டுக் கொள்ளக் கூடாதென்று யாரடி சொன்னது? நான் எடுத்துப் போட்டுக் கொண்டு விட்டேன் என்று என்னோடு சண்டைக்கு வருகிறாயே? கொஞ்ச நேரம் போட்டுக் கொள்ளலாமென்று போட்டுக் கொள்ளும்பொழுதே இந்தக் கதி என்றால் ......! இந்தச் சங்கிலியை இனிமேல் கொடுத்தால், என் பெயர்......'' என்று அடுக்கினாள். நான் மௌனமாக நின்றேன். எனக்கு வாய் திறக்க வழி தோன்றினால் தானே!




அதற்குப் பிறகு சில நாட்களுக்கெல்லாம் என்னைக் கொண்டு வந்து விடும்படி என் மாமியாரிடமிருந்து கடிதம் வந்தது. என் அப்பாதான் என்னைக் கொண்டு போய் விட்டார். சித்தியாகச் சங்கிலியை என்னிடம் கொடுக்கவில்லை. நானும் கேட்கப் பயந்து கொண்டு கேட்கவில்லை. சங்கிலியில்லாமலேயே கிளம்பி விட்டேன். முதல் நாள் என்னை யாரும் கவனிக்கவில்லை. இரண்டாம் நாள்தான் என் கழுத்தில் சங்கிலியில்லாததை என் மாமியார் கவனித்தாள். உடனே ஆரம்பித்து விட்டாள், தன் குறுக்கு விசாரணைகளை. நான் மௌனம் சாதித்தேன். என் மௌனம் அவளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

ஆகவே, என் அப்பாவிடம் சென்று, ''கல்யாணத்தின்போது இரண்டு வடம் சங்கிலி போடுவதாகச் சொன்னீர்கள். அப்போது ஏதோ போட்டீர்கள். இப்பொழுது அதையும் காணோம். யாரிடமாவது இரவல் வாங்கிப் போட்டீர்களோ, என்னமோ? யார் கண்டது? இந்த மாதிரி தில்லுமல்லுச் செய்கிறவர்களின் பெண் எங்களுக்கு வேண்டவே வேண்டாம். இனிமேல் என் பிள்ளைக்கு யாரும் பெண் கொடுக்காமல் போக மாட்டார்கள். உங்கள் பெண் எங்களுக்கு வேண்டாம். வந்த வழியைப் பார்த்துக்கொண்டு கிளம்புங்கள்!'' என்றாள். என் அப்பாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கடைசியில் நானும் அப்பாவும் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பினோம். என் கணவரைப்பற்றிக் கேட்பீர்கள். என்னைப் பொறுத்த வரையில் அவர் நல்லவர்தான். இச்சம்பவம் நடந்த சமயம் — அதாவது நான் என் மாமியார்

வீட்டிற்குச் சென்ற சமயம் என் கணவர் வேலை விஷயமாக வெளியூருக்குச் சென்றிருந்தார். இருந்திருந்தாலும் அவரால் என்ன செய்திருக்க முடியும்? சிறு வயது முதல் தகப்பனாற்ற அவரைப் படிக்க வைத்து உயர்ந்த பதவிக்கும் வரும்படி செய்த அவளை அவரால் எதிர்க்க முடியுமா? என் விதி அவ்வளவுதான். இதன் பிறகு சித்தியிடம் நான் பட்ட அநுபவங்களைச் சொல்லப் போனால், அது வளர்ந்து கொண்டே போகும்.

நேற்றுக் காலை ஏதோ ஒரு சிறு தவறு செய்து விட்டேன். அதற்கு அவள் சொன்ன சொல் இன்னும் என் உள்ளத்தை ஈட்டிபோல் குத்துகிறது. "கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன். நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களையும் சமாளிக்கலாம், வாழாமல் தன் கணவனைத் தொலைத்துவிட்டு வந்திருக்கிறவர்களையும் சமாளிக்கலாம். இந்த மாதிரி இரண்டுங் கெட்டான்களை வைத்துச் சமாளிப்பது மிக மிகச் சிரமமான காரியம். என்னமோ போனால் போகிறது என்று பார்த்தால் என்னையே பல்லைப் பிடித்துப் பார்க்கிறாயே? இந்த மாதிரி இருந்தால் நீ எங்கே உருப்படுவாய்? அதுதான் வாழாவெட்டியாய் நிற்கிறாய்! அவன் அடிக்கிறானோ, உதைக்கிறானோ, அவனிடமேயே இருக்க மாட்டாயோ?" என்றாள்.



என்னால் அந்த வார்த்தைகளின் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. ஆகவே, இன்று காலை என் தகப்பனாரிடம் சென்று, என்னைச் சென்னைக்கு ரயில் ஏற்றிவிடும்படி கேட்டுக் கொண்டேன். முதலில் அவர் சம்மதிக்கவில்லை. சென்னையிலிருக்கும் என் மாமாவின் வீட்டுக்குச் சென்று சில நாட்களாவது இருந்துவிட்டுத்தான் வருவேன் என்று நான் பிடிவாதமாகச் சொல்லவே அவர் சம்மதித்தார். சென்னையில் என் கணவர் ஏதோ பெரிய உத்தியோகத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் வீடு தேடிச் சென்று அவர் வீட்டு வேலைக்காரியாகவாவது இருப்பது என்ற முடிவுடன் தான் புறப்பட்டிருக்கிறேன். என் மாமா வீட்டுக்குப் போகும் உத்தேசத்துடன் நான் புறப்படவில்லை. கடவுள் விட்ட வழி விடட்டும்" என்று சொல்லிப் பூமா பெருமூச்சுடன் தன்னுடைய கதையை நிறுத்தினாள்.

"பூமா, உன் கணவர் சென்னையில் எங்கே இருக்கிறார், தெரியுமா?" என்றேன்.

"தெரியாது!" என்றாள் பூமா.

"இவ்வளவு பெரிய ஊரில் அவரை எங்கென்று தேடுவாய்? அவர் உத்தியோகமாவது தெரியுமா?" என்றேன்.

"ஏதோ பெரிய உத்தியோகமென்று தான் தெரியுமே யொழிய, இன்ன உத்தியோகமென்று எனக்குத் தெரியாது."

"பூமா, நான் சொல்வதைக் கேள். நான் உன்னை என் சொந்தத் தங்கையைப் போலவே பார்த்துக் கொள்ளுகிறேன். உன்னைப் பார்த்ததுமே எனக்கு உன்னிடத்தில் ஒருவகைப் பாசம் உண்டாகி விட்டது. ஆகையால் நீ என்னுடனேயே வந்து விடு. என்னிடமிருந்தபடியே உன் கணவரை அடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யலாம். நானும் என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்" என்றேன்.

முதலில் பூமா என் யோசனைக்குச் சம்மதிக்கவில்லை. கடைசியில் என் வற்புறுத்தலின் பேரில் சம்மதித்தாள்.

"ஏன் பூமா, உன் கணவரின் ஊர் என்ன? பெயர் என்ன? அதைச் சொன்னால்தானே தேடக் கொஞ்சமாவது சுலபமாக இருக்கும்?" என்றேன்.

"அவர் ஊர் ஆலப்புழை" என்று தயங்காமல் பதிலளித்த பூமா பெயரைச் சொல்லத் தயங்கினாள். அவளைத் தூண்டினேன். தயங்கிக் கொண்டே, "ர...கு...நா...த...ன்" என்றாள்.

என்ன? எனக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. பூமா என்னைக் கவனிக்கு முன் சமாளித்துக் கொண்டு விட்டேன். ரயில் ஸ்டேஷனில் நின்றது. நான் பூமாவுடன் என் வீட்டை யடைந்தேன். வீடு பூட்டிக் கிடந்தது. "ஐயா ஊரிலே இல்லேங்க. எங்கேயோ 'காம்ப்' போயிருக்காங்க. நீங்கள் வந்தால் சாவியைக் கொடுக்கச் சொன்னாங்க!" என்று கூறிச் சாவியை என்னிடம் கொடுத்தான் தோட்டக்காரன். வீட்டையும், அதிலுள்ள ஒவ்வொரு பொருள்களையும் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள் பூமா. நான் மனதிற்குள் சிரித்துக் கொண்டேன்.

இரண்டு நாட்கள் சென்றன. பூமா வானம் பாடி போலக் காணப்பட்டாள்.

அன்று மாலை வாசலில் கார் சப்தம் கேட்டது. நான் நினைத்தது பொய்யாகவில்லை. நான் ஊரிலிருந்து வந்துவிட்டதை அறிந்து கொண்ட என் கணவர் "சரஸா!" என்று கத்தியபடியே உள்ளே நுழைந்தார். அங்கு, என் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பூமாவைக் கண்டதும் ஒரு கணம் திடுக்கிட்டார். பூமாவின் முகத்தை நோக்கினேன். அவளும் ஏதோ அதிர்ச்சியுற்றவளைப் போல் காணப்பட்டாள். ஆனால், அடுத்த கணம் இருவரும் தத்தம் அறைக்குள் நுழைந்து விட்டனர்.

மறுநாள் காலை. சுள்ளென்ற வெய்யில் முகத்தில் படவே கண்களைத் திறந்து பார்த்தேன். பக்கத்தில் பூமாவின் படுக்கை காலியாகக் கிடந்தது. எனக்குத் திக்கென்றது. காலையில் எனக்கு முன் எழுந்திருக்க மாட்டாளே, இப்போது எங்கு சென்றிருப்பாள்? என்று நினைத்துக் கொண்டே எழுந்து ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். அப்போது மேஜை மேலிருந்து ஒரு காகிதம் பறந்து வந்து என் காலடியில் விழுந்தது. அலட்சியமாக அதை எடுத்துப் பிரித்தேன்.

அன்புள்ள அக்கா,

உண்மையில் நான்தான் உங்களுக்கு அக்கா. ஆனால், அறிவிலும், குணத்திலும் நீங்கள்தான் என்னைவிடப் பெரியவர்.

சுமார் ஆறு வருஷங்களுக்கு முன், என்னைத் தொட்டுத் தாலி கட்டிய அதே ரகுநாதன்தான் தங்கள் கணவர் என்பதை நான் அறிந்தபோது என் உள்ளத்தில் எவ்விதக் கொந்தளிப்பும் ஏற்படவில்லை. அவருக்கேற்ற பொருத்தமான மனைவி நீங்கள்தான். உங்களுக்குச் சரியாக என்னால் நடக்க முடியுமா என்பது சந்தேகந்தான். உங்கள் இன்ப வாழ்க்கையில் குறுக்கிட நான் விரும்பவில்லை. நான் போகிறேன். எங்கே, எதற்கு என்பது எனக்கே தெரியாது.

இப்படிக்கு, உங்கள் சகோதரி,

பூமா.



மானேஜர்:—என்ன மேடம்! உங்கள் பேச்சைப் பார்த்தால் நீங்கள் ஒரு சோஷியலிஸ்ட், அல்லது கம்யூனிஸ்ட் என்று தெரிகிறது. அப்படித்தானே?

லேடி டைப்பிஸ்ட்:— இரண்டுமில்லை, ஸார்! நான் சாதாரண டைப்பிஸ்டுதான்.

"ஐயோ, பூமா!" என்று அலறினேன் நான். என் அலறலைக் கேட்டு என் கணவர் ஓடோடியும் வந்தார். விஷய மறிந்ததும் மௌனமாகத் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினார். அவரது போக்கே எனக்குப் பிடிபடவில்லை. பூமா வந்ததில் தனக்கு விருப்போ, வெறுப்போ ஒன்றுமில்லாதது மாதிரி நடந்து கொண்டார். இப்போது, அவள் வீட்டை விட்டுப் போன பிறகும் அப்படியேதான் நடந்து கொள்ளுகிறார். அதற்கு என்ன அர்த்தமோ, தெரியவில்லை!

பூமா சென்று விளையாட்டுப் போல் நான்கு நாட்களாகி விட்டன. வீட்டில் எங்கு நோக்கினாலும் பூமாவின் உருவந்தான் தெரிந்தது. வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருள்களும் வீடும் என்னைத் துரோகி என்று கூறுவது போல் தோன்றியது. நியாயமாகப் பூமா இருந்து ஆட்சி செலுத்த வேண்டிய இந்த இடத்தில், அவளுக்குத் துரோகம் செய்து விட்டு, நீ ஆட்சி செலுத்துகிறாயா என்று என் அந்தராத்மா என்னைக் குத்திக் காட்டியது. என் மனம் படும் வேதனையைச் சொல்லி முடியாது. பேதைப் பெண்! முழு விஷயத்தையும் தெரிந்து கொள்ளாமல் போய்விட்டாள்! கல்யாணமானதும் சில நாட்கள் கழித்து நான் புக்ககத்திற்கு வந்த போது, ஒரு நாள் என் கணவர் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, "ஸரஸா, எனக்கு ஏற்கெனவே கல்யாணமாகி விட்டது என்னும் விஷயம் உனக்குத் தெரிந்திருக்கும். என்றைக்காவது அவள் என்னிடம் வந்து சேர்ந்தால், அவளை உன்னுடைய சகோதரியைப் போலப் பார்த்துக் கொள்வது உன் கடமை. இதைச் செய்வாயா?" என்றார். நானும் அப்படியே செய்வதாக வாக்குக் கொடுத்தேன். இந்த விவரத்தை அவளிடம் சொல்லுவதற்குள் அவள் எங்கேயோ சென்று விட்டாளே என்று ஏங்கினேன். ஒவ்வொரு சமயம் என் உள்ளத்தில் சக்களத்திப் போராட்டம் என்று சொல்லுவார்களே, அது நடக்கும். ஆனால் பூமாவின் மேல் நான் கொண்டிருந்த ஒரு வகைப் பாசமானது அந்த போராட்டத்திலிருந்து என்னை மீட்டுவிடும். ஆரம்பத்திலிருந்து துன்பத்தையே அநுபவித்த அந்தப் பேதை இனியும் அப்படியே இருப்பாளோ, சந்தோஷத்தையே தன் வாழ்வில் காணமாட்டாளோ என்றும் நினைத்தேன். நாட்கள் செல்லச் செல்ல பூமாவின் நினைவானது உன் உள்ளத்தை அணு அணுவாகச் சிதைத்து வந்தது.

பூமா சென்று ஒரு வாரமாகி விட்டது. அன்று மாலை வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும், ஒரு யந்திரம் போல வாசலுக்குச் சென்றேன், அவரை வரவேற்பதற்கு. முதலில் என் கணவர் இறங்கினார். பின்னால் இறங்குவது யார்? கண்களை நன்றாகத் துடைத்து விட்டுக் கொண்டு பார்த்தேன். சந்தேகமே யில்லை, பூமாவேதான்! அதற்குள் பூமாவே, 'அக்கா!"

என்று கத்திக்கொண்டு ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டாள். நான் சமாளித்துக் கொண்டு விட்டேன்.

"பூமா, பிரமாதமாகக் கடிதம் எழுதி வைத்து விட்டுப் போனாயே! இருந்தாலும் நீ எப்படியும் இங்கேயே வந்து சேர்ந்து விடுவாய் என்று எனக்குத் தெரியுமே!" என்றேன்.

"எப்படி அக்கா தெரியும்?" என்று பூமா ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"எனக்கு ஜோஸ்யம் தெரியும்!" என்றேன் நான் குறும்பாக.

"ஐயையோ! அந்த ஜோஸ்யம் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!" என்று வருத்தப்படுகிறவளைப் போல் நடித்தாள் பூமா.

"ஏன், என்ன சமாசாரம்?" என்றேன்.

"தெரிந்திருந்தால் அந்த அனாதை ஆசிரமத்திற்குச் செல்லாமல் வேறு எங்கேயாவது சென்றிருப்பேனல்லவா?"

"என்ன விஷயம், சொல்லேன்!"

"அந்த அனாதை ஆசிரமத்தின் தலைவர் தான் உங்கள் கணவர்."

நான் இடைமறித்தேன். "இனிமேல் உங்கள், இங்கள் எல்லாம் வேண்டாம்."

"சரி. அந்த அனாதை ஆசிரமத்தின் தலைவர்தான் நம் கணவர் என்று எனக்குத் தெரியுமா, என்ன?" என்று கூறிய பூமா கன்னங் குழியச் சிரித்தாள். நானும் சிரித்தேன். இருவரும் கை கோத்துக் கொண்டே படியேறினோம். இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த எங்கள் கணவரின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்குவதை நானும், பூமாவும் ஏக காலத்தில் கவனித்தோம்.

எஜமானியின் உத்தரவு!

மணி பத்து அடித்ததும் சம்பந்தம் வாய் சிவக்க வெற்றிலை போட்டுக் கொண்டு ஆபீஸுக்குப் புறப்படத் தயார் ஆனான். வாசலில் அவனுக்காகக் கார் காத்துக்கொண்டு நின்றது.

"ஏன்னா! இன்றைக்கு என் தோழி சியாமளா வீட்டுக்குப் போய் வரலாம் என்றிருக்கிறேன். ஆபீசுக்குப் போனதும் சற்றுக் காரை அனுப்பி வைக்கிறீர்களா?" என்று கேட்டாள் மங்களம்.

சம்பந்தம்தான் செட்டாகக் குடித்தனம் நடத்துபவன் ஆயிற்றே! ஆகவே, "அனுப்பி வைக்கிறேன். ஆனால் சாயந்திரம் காரை ஆபீசுக்கு அனுப்ப வேண்டாம். அநாவசியமாகப் பெட்ரோலை வீணாக்குவானேன்?" என்றான்.

"சரி!" என்று சொல்லி மங்களம் 'டிரஸ்' செய்து கொள்ளத் தன் அறைக்குப் போய் விட்டாள். சம்பந்தமும் ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போனான்.

ஆபீஸ் வாசலை அடைந்ததும், "டிரைவர்! அம்மா எங்கேயோ போகவேண்டுமாம். நீ காரை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போ!" என்றான் சம்பந்தம்.

"பெட்ரோல் குறைச்சலாகத் தான் இருக்குங்க" என்றான் டிரைவர். காரைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்த சம்பந்தம் சட்டென்று இரண்டு காலன் பெட்ரோலுக்குச் சீட்டு எழுதிச் செக்கைப் :போலக் கிழித்துக் கொடுத்து விட்டுப் படி ஏறிச் சென்று விட்டான்.

மங்களத்துக்குச் சொந்தக் காரில் தோழியைப் பார்க்கப் போகும் பெருமை புல்லரித்துக் கொண்டிருந்தது. அழகாக ஆடை அணிந்து புறப்படுவதற்குத் தயாராகக் காத்திருந்தாள். டிரைவர் வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினதும் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். டிரைவர் 'டக்' என்று அறைந்து காரின் கதவைச் சாத்தினான்.

அதைப் பார்த்த மங்களம் "ஊரான் வீட்டுச் சொத்துத்தானே என்ற எண்ணமோ? மெதுவாகச் சாத்துவதற்கு என்ன?" என்று கடிந்து கொண்டாள்.

டிரைவர் என்ன பதில் சொல்லுவான், பாவம்! மௌனமாகக் காரை ஓட்டிச் சென்றான். பெட்ரோல் பங்குக்கு அருகில் சென்றதும் பெட்ரோல் போடுவதற்காக வண்டியைத் திருப்பினான்.

"எதற்காக இங்கே திருப்புகிறாய்?" என்று கேட்டாள் மங்களம்.

"பெட்ரோல் போடுவதற்காக! பெட்ரோல் கொஞ்சமாகத்தான் இருக்கிறது!" என்றான் டிரைவர்.

"இருக்கிறதோ, இல்லையோ! முழுவதும் தீர்ந்த பிறகு போட்டால் போதும். எனக்குச் சீக்கிரமாகப் போக வேண்டும். விடு. வண்டியை!" என்று கடிந்தாள் மங்களம்.

டிரைவர் எஜமானி அம்மாளுக்குப் பயந்து பெட்ரோல் போடாமலேயே வண்டியை ஓட்டிச் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் வண்டி நின்றுவிட்டது.

டிரைவர் கீழே இறங்கிப் பார்த்துவிட்டு, "இனி வண்டி மேலே போகாதுங்க!" என்று கையை விரித்தான்.

"ஏன் போகாது?"

"பெட்ரோல் தீர்ந்துவிட்டது!"

"அப்படியானால் பின்னாலேயே விடு!" என்று உத்தரவிட்டாள் மங்களம்.

டிரைவர் எஜமானி அம்மாளின் உத்தரவைக் கேட்டு வாய் அடைத்துப் போய் ஸ்தம்பித்து நின்றான். — அக்ஷயம்.

ந்தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

கல்கத்தா

*

அங்கீகாரம் பெற்ற மூலதனம் ... ரூ. 8 கோடி

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. 4 கோடி

செலுத்தப்பட்ட மூலதனம் .... ரூ. 2 கோடி

ரிஸர்வ் நிதி ... ரூ. 60 லட்சம்

★

போர்ட் ஆப் டைரக்டர்கள் :

G. D. பிர்லா (சேர்மன்)

ஈஸ்வரி பிரசாத் கோயங்கா
வைஸ் சேர்மன்

ரமன்லால் G. சரய்யா
வைஸ் சேர்மன்

அனந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோபிந்த்லால் பங்கூர்
P. D. ஹிம்மத் சிங்கா
ராமேஷ்வர்லால் நோபானி
மகாதேவ் L. தனுகார்
மதன்மோஹன் R. ருயா
மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபுரியா
நவீன்சந்திர மபத்லால்

ஜெனரல் மானேஜர் :

B. T. தாகூர்

*

இந்தியா, பர்மா, பாகிஸ்தான், மலேயா முதலிய தேசங்களின் முக்கிய பட்டணங்களிலும் நகரங்களிலும் கிளை ஆபீஸ்களுடன், உலகம் பூராவும் ஏஜன்ஸி ஸ்தாபனங்களுடன் கூடிய நமது பாங்க் சகலவிதமான பாங்க் அலுவல்களையும் முற்றிலும் திறமையாகச் சேவை செய்யுமாறு நிறுவப்பட்டிருக்கிறது.

ஆங்கிலக் கல்வி

தத்தம் இல்லத்திலிருந்தே, பிறர் உதவியின்றியே ஒரே வருடத்திற்குள் நான்காம் படிவத்திற் கொப்பான ஆங்கில அறிவைப்பெறலாம். ஆங்கில எழுத்துக்கள் அறியாதவர்களும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். 4 அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

●

கேம்பிரிட்ஜ் காலேஜ்

(K) கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B :—S. S. L. C. தேறி கல்லூரி படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு, பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். 6 அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

தூரதிருஷ்டிக் கண்ணாடி



இயற்கைக் காட்சிகளையும் தூரத்திலுள்ள காட்சிகளையும் கண்டு களியுங்கள். குதிரைப் பந்தயம், ஸினிமா, வேட்டை, தியேட்டர் முதலியவைகளுக்கு இன்றியமையாதது. கண்ணுக்குப் புலப்படாத வஸ்துக்களையும் பெரியதாகக் காட்டும். விலை ரூ. 4/8/- பாக்கிங், தபால் செலவு ரூ. 1/4/-

எலக்ட்ரிக் மூக்குக் கண்ணாடி : நவீனமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் நல்ல இருட்டில்கூட விளக்கின் உதவியின்றி எழுதவோ, வாசிக்கவோ செய்யலாம். கண்களுக்குக் கெடுதல் செய்யாது. விலை ரூ. 5-8-0. தபால், பாக்கிங் செலவு 1-8-0 தனி.

ரூ. 25-ல் ரேடியோ செட் : இதில் கிடைக்கும் இனிய நாதத்தால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். மின்சார சக்தி, பாட்டரி உதவியின்றி இயக்கலாம். மிகவும் மலிவானது. ஒன்றின் விலை ரூ. 25. ஸ்பெஷல் செ. D-13 ரூ. 30. வி. பி. பி. சார்ஜ் ரூ. 5 தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்

●

SARANG MACHINERY MART (K 500)
ALIGARH CITY (U. P.)



ராஜாளி மடம்

கி.ரா. கோபாலன்

3. 'பாவம், பேதைப் பெண்!'

"இதென்ன துணிச்சல்! இந்த வேளையில் இந்த அறையில் இவளுடன் உமக்கென்ன காரியம்!" என்று ஆவேசம் கொண்டவள் போல் கத்தினாள் மரகதம்.

"ஏதோ சப்தம் கேட்டது! நான் அது எதுவாயிருக்கும் என்று பார்க்கலாம் என்று வந்தேன். இந்த அறையில் பாவம், இவள் அழுது கொண்டிருந்தாள்" என்றார் டாக்டர் தடுமாற்றத்துடன்.

"ஓஹோ! அப்படியா...! அவள் தோள் மீது ஏன் உம்முடைய கை போயிற்று!" என்றாள் கடுமையான குரலிலேயே.

"இல்லை......நான் அவளைத் தொடவே யில்லையே..." என்றார் டாக்டர்.

"பொய். நான் என் கண்களினால் பார்த்தேன். உன் கை அவள் தோள் மீது இருந்தது. உன்னை ஒரு படித்த கௌரவமான டாக்டர் என்பதற்காக இவ்வளவு நேரம் சிறிது மரியாதை வைத்துப் பேசினேன். இனிமேல்..."

"அவள் தோள் மீது என் கை இருந்ததா! இருந்திருக்கலாம். அதை என்னையறியாமலேயே நான் செய்திருப்பேன். அவள் மிகவும் துக்கமடைந்திருந்தாள். அவளுக்குச் சிறிது ஆறுதல் செய்யத்தான் நான் முயற்சித்தேன்" என்றார் டாக்டர் தணிவான குரலில்.

"நீ அவளுக்கு ஆறுதல் கூறிய வழி ரொம்ப அழகாய் இருக்கிறது. உனக்கு இங்கிருந்து மரியாதையுடன் போகப் பிரியமில்லை போலிருக்கிறது" என்றாள் மரகதம் ஒரு அலட்சியமான சிரிப்புடன்.

வேதா தீயினிடையே விழுந்து கிடக்கும் சிறகொடிந்த பறவையைப் போல் துடித்தாள். வேலைக்காரி அவளை நெருங்கி நின்று தன்னுடைய குரூரமான கண்களால் சந்தேகாஸ்பதமாகப் பார்த்தாள்.

"நீ உன்னுடைய அறையில் இல்லையென்று செங்கம்மா சொன்னாள். நீ இங்கே இந்த நிசி வேளையில் என்ன செய்கிறாய் என்று சோதனை செய்யத் தான் நாங்கள் வந்தோம். இப்பொழுது உன்னுடைய கேவலமான நடத்தை புரிந்து விட்டது" என்றாள் மரகதம் டாக்டரை ஆத்திரத்தோடு பார்த்துக் கொண்டே.

"அதற்குத் தான் கையில் ஒரு பெரிய தடியுடன் வந்தீர்கள் போலிருக்கிறது" என்றார் டாக்டர் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே.

"ஆமாம்! உன்னைப் போன்ற திருடர்களையும், கெட்ட எண்ணம் உள்ள அயோக்யர்களையும் வஞ்சம் தீர்க்கத்தான் ஒவ்வொரு வீட்டிலும் இந்த மாதிரித் தடிகளெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஜாக்கிரதை! மரியாதையாக உன் அறைக்கு நீ திரும்பிப் போ. இல்லாவிட்டால் நான் இந்த மூங்கில் தடியை உபயோகிக்கும்படி இருக்கும்" என்று மரகதம் கடுமையாக எச்சரித்தாள்.

இதைக் கேட்டதும் டாக்டர் பாஸ்கரனின் ரத்தம் கொதித்தது. உடல் பதறியது. அவர் கண்களில் கோபப் பொறி பறந்தது. அவர் கைகளைச் சேர்த்துப் பிசைந்து கொண்டே, "யாரிடம் என்ன பேசுகிறாய் என்று ஞாபகத்தில் வைத்துக் கொள். நீ ஒரு பெண் என்ற ஒரே காரணத்துக்காக நான் உன்னை மன்னிக்கிறேன். நான் என்னுடைய அறைக்குப் போக முடியாது. நான் ஒரு டாக்டர் என்ற முறையில் இந்த வீட்டிற்கு வந்திருக்கலாம். ஆனால் உண்மையில் மனித இருதயம் படைத்தவன். எங்காவது அநியாயமும் அர்த்தமற்ற கொடுமையும் நடந்தால் அதைக் கண்டிப்பதோ, அதைப் போக்குவதோ சரியான மனித இருதயம் படைத்த ஒவ்வொரு மனிதனுடைய கடமை ஆகும். நான் இங்கு எந்தவிதமான தவறும் செய்து விடவில்லை. அன்பு, அரவணைப்பு, வாழ்க்கை இன்பம் இவைகளெல்லாம் எப்படிப் பட்டதென்றே தெரியாமல் வளர்க்கப்பட்டுத் துக்கத்திலும் சோகத்திலும் விழுந்து வாடிக் கிடக்கும் ஒரு பேதைப் பெண்ணிடம் இரக்கம் கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறினேன். இது கெடுதலா! நான் முட்டாளல்ல. இந்த இருண்ட பாழும் வீட்டில் அன்பு இல்லை; கருணை இல்லை; சந்தோஷமும் சாந்தியும் இல்லை. இந்த இடம் வேதாவைப் போன்ற பேதமை நிறைந்த ஒரு அழகான பெண் வசிப்பதற்குத் தகுதியான இடமில்லை. பேய் பிசாசுகூட இந்த இடத்தில், அந்தகாரம் சூழ்ந்த பாழும் கோட்டை போன்ற இந்த வீட்டில் வாசம் செய்யாது" என்றார்.

"நீ ஒரு டாக்டரா அல்லது பைத்தியக்காரனா!" என்றாள் மரகதம் துடிப்போடு.

"நான் ஒரு டாக்டர்தான். பைத்தியக்காரனாகவும் இருக்கலாம். ஆனால் என்னுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை. கடவுளுக்குப் பொதுவாக இதுதான் உண்மை என்று நினைத்

துக்கொள். இந்தப் பயங்கரமான கொடுமை நிறைந்த வீட்டிலிருந்து வேதாவை வெளியே அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்பதுதான் என் ஆசை."

"இதென்ன, கதை! நடக்கக் கூடியதா! இது உன்னால் முடியாது. இங்கு இன்பமில்லை; சந்தோஷமும் சாந்தியும் இல்லை; சூரிய வெளிச்சமும் காற்றும் இல்லை. அந்தகாரம் சூழ்ந்த இந்தப் பாழடைந்த பேய் வாழும் கோட்டையிலே ஒரு அரம்பை போன்ற அழகான பெண் சிறை பிடிக்கப்பட்டுக் கொடுமைப் படுத்தப்படுகிறாள் என்று கதை கட்டி நீ ஊரெல்லாம் பிரசாரம் செய்யப் போகிறாயா!" என்று கேட்டான் மரகதம் ஆத்திரமும் கேலியும் தொனிக்க.

"நான் எதையும் கற்பனை செய்து கதை கட்டிச் சொல்லப் போவதில்லை. அது என் வேலையுமில்லை. ஆனால் என் இருதயம் ஒவ்வொன்றையும் நன்றாய் உணர்ந்திருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள். இன்று இரவு இங்கு நடந்ததைக் கொண்டு நீ இந்த பெண்ணைக் கொடுமைப் படுத்தலாம். ஆனால் ஒருநாள் இதையெல்லாம் நீ உணராமல் இருக்க முடியாது. என் பெயர் டாக்டர் பரசுராம். நான் நிச்சயம் சொல்லுகிறேன். உன்னுடைய நடத்தைக்காக நீயும் சாரதாவைப்போல் ஒரு நாள் வருந்த



நேரும்." என்று மரகதத்தைப் பார்த்து எச்சரித்தார். பிறகு வேதாவைப் பார்த்து "வேதா! கவலைப்படாதே. ஒருநாள் மறுபடியும் என்னை நீ சந்திப்பாய். நீ வசிப்பதற்கு, நீ சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற இடம் என்னுடைய வீடுதான். அது உனக்காக எப்பொழுதும் தயாராய் இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்றார்.

பயத்தால் நடுங்கிக்கொண்டு நின்ற வேதா தலை நிமிர்ந்து ஒருமுறை டாக்டரைப் பார்த்தாள். பயத்தால் மிரளும் அவளுடைய இரு கருவிழிகள் அவருடைய இருதயத்தை உருக்கின. அந்தப் பார்வை 'என்னை இந்தப் புலிக் கூட்டத்தின் நடுவே விட்டு விடாதீர்கள்' என்று சொல்லுவதுபோல் இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவரால் என்ன செய்யக்கூடும்! அவளுக்கு வேறு எந்தவிதமான ஆறுதலைச் சொல்லக் கூடும்! அந்த விநாடியில் அந்த இடத்தில் இன்னும் தீவிரமாக நடந்து கொண்டால் இந்த வீட்டிலே அவரும் வஞ்சனையாகச் சிறைப்பிடிக்கப் படலாமல்லவா! அவருக்கு அந்த அறையை விட்டு உடனே வெளியே செல்வதே சரியானதாகப் பட்டது. ஆகவே, அங்கிருந்து வெளியே செல்ல முயற்சித்தார். உடனே மரகதம் அவரைத்தடுத்து "கொஞ்சம் நில்லு! நானும் உனக்குச் சில வார்த்தை சொல்ல வேண்டாமா! நீ மறுபடியும் இந்த வீட்டுப் பக்கம் காலடி எடுத்துவைக்கக் கூடாது. நாங்கள் இந்த வீட்டில் அமைதியாக வாழ்கிறோம். இதெல்லாம் எங்கள் சொந்த விவகாரம். எங்கள் வாழ்க்கையின் போக்கைப் பற்றியும் எங்களைப் பற்றியும் பல விதமாகப் பேசுவது எங்களுக்குத் தெரியும். அவைகளைப் பற்றி யெல்லாம் நான் இதுவரையில் கவலைப்பட்டதே யில்லை. ஆனால் நீ ஒரு பொறுப்பு வாய்ந்த மனிதன்; ஒரு டாக்டர். பலருடைய அபிமானத்தைப் பெற்றவன் நீ. உன்னுடைய தொழிலாலும், கெட்டிக்காரத்தனத்தினாலும், யோக்யதையாலும் உயர்ந்த பதவியையும் கௌரவத்தையும் அடைய வேண்டியவன். நீ இங்கு ஒரு தடவை வந்த அனுபவத்தால் வெளியே சென்றதும் எங்களைப் பற்றிய வதந்திகளைக் கிளப்பக்கூடாது. நீ அப்படிப்பட்ட கேவலமான முயற்சிகள் ஏதாவது செய்வதாக எனக்குத் தெரிந்தால் உன் வாழ்வுக்கே உலை வைத்து விடுவேன். இவ்வளவு நாள் கஷ்டப்பட்டுப் படித்த டாக்டர் பட்டத்திற்கே மதிப்பில்லாமல் செய்து விடுவேன். டாக்டர் என்ற முறையில் என் வீட்டிற்கு வந்த நீ என்னுடைய தங்கையின் பெண்ணின் அறையில் இரவில் நுழைந்து அவளைக் கெடுத்தது மன்னியில் அவளைக் கடத்திக் கொண்டுபோக யத்தனித்தாய் என்பதை ஆதாரங்களுடன் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து உன் வாழ்வையே குலைத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்றான்.

"இது வீண் மிரட்டல்! உன்னால் அப்படி ஒருநாளும் செய்ய முடியாது" என்றார் பரசுராம்.

"இது வீண் மிரட்டல் அல்ல. நிச்சயமாக என்னால் செய்ய முடியும். ஜாக்கிரதை! நீ மாத்திரம் வாயைத் திறந்து இங்கு நடந்தவைகளைப் பற்றி வெளியே பிரஸ்தாபிப்பதாகத் தெரிந்தாலோ அல்லது இங்கிருந்து கன்னிப் பெண்ணான வேதாவை நீ கடத்திக்கொண்டு போக முயற்சித்தாலோ நிச்சயம் இது நடக்கும். உன்னுடைய வாழ்க்கை உன் கையில் தானிருக்கிறது. மறுபடியும் உனக்கு நான் எச்சரிக்கிறேன். இனிமேல் நீ போகலாம்" என்றான் கடுமையான குரலில்.

டாக்டர் பரசுராம் இதற்கொன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் இந்த வார்த்தைகள் அவருக்கு ஒரு அச்சத்தைக் கொடுத்தது என்பது அவருடைய முகச் சாயலிலிருந்து நன்கு விளங்கியது. அவர் தான் தங்கி இருந்த அறையை நோக்கி மெதுவாக நடந்தார்.

*   *   *

இரவு முழுவதும் டாக்டர் பரசுராம் தூங்கவில்லை. அந்த அறையில் நாற்காலியில் உட்கார்ந்தபடியே மனதோடு போராடிக் கொண்டிருந்தார். அவரால் வேதாவின் அழகான வதனத்தை மறக்க முடியவில்லை. அவர் அதை மறக்க வேண்டுமென்றும் விரும்பவில்லை. இப்பொழுது நடந்தவைகளை விட இன்னும் ஏதேனும் தன் மதிப்பைக் கெடுக்கக்கூடிய முறையில் விரசமான விஷயங்கள் நடந்துவிடக் கூடுமோ என்று பயந்தார். எது எப்படி இருந்தாலும் வேதாவின் எதிர்கால வாழ்க்கையையும், தன்னுடைய எதிர்கால வாழ்க்கையையும் சிக்கறுக்க முடியாத பிணைப்பாகத்தான் அவர் நினைத்தார்.

பாவம்! ஏதுமறியாத பேதைப் பெண்! மரகதத்தின் சவிரக்கமற்ற முகமும், வேலைக்காரி செங்கம்மாவின் இரக்கமற்ற பேய் உள்ளமும் அவருக்கு வெறுப்பைத்தான் உண்டாக்கின. சூரிய ஒளி படாத அழகிய தாமரை வாடி வதங்கி விழுவது போல அரக்கி போன்ற கொடிய நெஞ்சம் படைத்த இந்த இரண்டு ஸ்திரீகளாலும் வேதாவின் இளமையும், நிகரற்ற அழகும், அந்தகாரமான இந்தக் கட்டிடத்திலேயே பயனின்றிப் பாழாகிவிடும் என்பதை எண்ணியதும் அவர் உள்ளம் கடுங்கியது.

‘இப்படியும் ஒரு கொடுமை உண்டா! ஏன் இந்த ஸ்திரீகள் இவளை இப்படிச் சிறைப் பிடித்து வைத்திருக்க வேண்டும்! இதற்குக் காரணம் ஏதோ ஒரு ரகசியம் இருக்கத்தான் வேண்டும். நல்ல இருதயம் படைத்த எந்த மனிதனும் இதைக் கண்டு பேசாமல் இருக்க மாட்டான். இதை இப்படியே அனுமதிக்கக் கூடாது. இதை இப்படியே விட்டு விடுவதும் தவறு. ஏதேனும் உபாயம் செய்து வேதாவை இங்கிருந்து விடுவித்து வெளியேற்றிவிட வேண்டும்’ என்று அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

பொழுது விடிந்து விட்டது. அவர் இரவெல்லாம் தூங்காமலேயே அந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். யாரோ கதவைத் திறந்த பொழுது தான் அவருக்குச் சுய உணர்வு வந்தது. அவர் எதிரில் வேலைக்காரி செங்கம்மாள் வந்து நின்றாள். ‘‘உங்களுக்காக வண்டி தயாராய் இருக்கிறது. புறப்படலாம்’’ என்றாள்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர் தன்னுடைய உடைகளைச் சரி செய்து கொண்டு அந்தக் கட்டிடத்திலிருந்து கிளம்பத் தயாரானார். அங்கிருந்து போவதற்கு முன்னால் மறுபடியும் வேதாவைப் பார்க்க முடியும் என்று அவர் நினைக்கவில்லை. முதல் நாள் இரவு மரகதம் அவரைக் கடுமையாக எச்சரித்திருக்கலா மல்லவா! இருந்தாலும் அவருக்கு ஆசை கேட்கவில்லை. அந்த அறையிலிருந்து கிளம்பும்பொழுது அவளுடைய அறையைப் பார்த்துக்கொண்டே நடந்தார். ஆனால் அந்த அறையின் கதவு சாத்தப்பட்டிருந்தது.

அவர் மாடிப் படியிலிருந்து கீழே இறங்கிக் கூடத்துக்கு வந்தபொழுது அங்கே ஒரு நாற்காலியில் மரகதம் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகம் எப்பொழுதும் போல் காணப்பட்டது. ‘‘நீங்கள் போகிறீர்களா!’’ என்றாள் ஏதோ அர்த்தமில்லாமல் அலட்சியமாக.

டாக்டர் ‘ஆமாம்’ என்பதுபோல் தலையை ஆட்டினார். அவளுடைய முகத்தைப் பார்க்கவே அவருக்குக் கசப்பாக இருந்தது.

‘‘நல்லது. இதை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் எந்தக் காரணத்திற்காகவும் இங்கே வர வேண்டுமென்று நினைக்காதீர்கள். இன்னொன்றும் ஞாபகத்தில் இருக்கட்டும். எங்களைப் பற்றி ஏதேனும் நீங்கள் வெளியே சொன்னதாகத் தெரிந்தால் அது உங்கள் வாழ்க்கைக்கே ஆபத்தாக முடியும். சரி! தோப்பில் உங்களுக்காக வண்டி காத்திருக்கும். போங்கள்’’ என்றாள் அதிகாரத் தோரணையில் எச்சரிக்கை செய்வது போல்.

அவளுடைய வார்த்தைகள் எதையும் டாக்டர் பரசுராம் லட்சியம் செய்யவில்லை. அவளுக்கு எதற்காகப் பதில் சொல்ல வேண்டும்! அவளைக் கண்டிப்பதனால் எவ்விதப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. அவளோடு வாக்குவாதம் செய்வதனால் ஏதேனும் கேவலமாக முடியுமே தவிர நன்மை விளையப் போவதில்லை. அவர் வேகமாக நடந்து தோப்பிற்கு வந்தார். அந்த வீட்டிற்குச் சிறிது தூரத்திலுள்ள தோப்பில்தான் ஒரு மாட்டு வண்டி நின்று கொண்டிருந்தது. அவர் தோப்பிற்குச் சமீபமாகச் சென்றதும் திரும்பி அந்த வீட்டைப் பார்த்தார்.

அவருடைய மனப் பிராந்தியோ அல்லது உண்மையாகவேதானோ அந்த வீட்டு மாடி ஜன்னல் வழியாகக் கருண்டுகருத்த கேசம் புரண்டு தோளில் விழ வேதா தன் அழகானமுகத்



தைச் சிறிது வெளியே காட்டிச் சட்டென்று உள்ளே இழுத்துக் கொண்டது போலிருந்தது.

டாக்டர் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே 'பாவம், பேதைப் பெண்! இந்தச் சிறு வயதிலேயே என்ன கஷ்டம் இவளுக்கு! இயற்கை அளிக்கும் சூரிய வெளிச்சத்தைக் கூடப் பார்க்கும் உரிமை இவளுக்குக் கிடைக்கவில்லையே! வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க இவள் கொடுத்து வைக்கவில்லையே! அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையைக் காட்டிலும் கொடுமைகளை அனுபவிக்கிறாள் போலிருக்கிறதே! இந்தப் பேதைப் பெண்ணுக்குக் கதி மோட்சம் கிடையாதா!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே வண்டியில் பெட்டியை வைத்து விட்டுத் தானும் ஏறி அமர்ந்து கொண்டார். வண்டியும் நகர்ந்தது. (தொடரும்)

படித்துப் பாருங்கள்!

பாதுஷாவின் காதல்

காதல் நிலை பெற்றிருக்க உதவி புரிகிறவர்கள் காதலர்கள். அந்தக் காதலர்களின் காதல் பாதையில் குறுக்கே தோன்றிக் கதைக்கும் காதலர்களுக்கும் சுவாரஸ்யம் அளிப்பவர்கள் 'வில்லன்மார்கள்' என்பதை மறுக்க முடியாது.

இந்தக் கதையின் காதலர்கள் நீக்ரோவரின் அடிமைப் பெண் நியூனலாவும், எகிப்து நாட்டு வீரனான ரேம்பஸாவும் தான். இவர்களின் உண்மைக் காதலுக்குக் குறுக்கே நின்ற 'வில்லன்' யார் தெரியுமா? வில்லாதி வில்லனான எகிப்து நாட்டுப் பாதுஷா பருன் அம்னஸ்தான்!

தேச தேசங்களிலிருந்தெல்லாம் எத்தனையோ பெண்கள் அவனை மணந்து கொள்ளத் தவம் இருந்தனர். அப்படிப்பட்ட பெண்களின் எதிரே தன் மனத்தையும், மனத்தில் சுரக்கும் அன்பையும் அடி பணிய விடாமல் ஜாக்கிரதையாக இருந்தான். அத்தகைய பருன் அம்னஸ், நீக்ரோவர்களின் அடிமைப் பெண்ணான நியூனலைக் காதலித்தான் என்பது வியப்பான விஷயம்தான். பருனுக்கே அது வியப்பாயிருந்தது.

தன் காதல் நிறைவேறும் பொருட்டுப் பாதுஷா, நியூனலின் உண்மைக் காதலனான ரேம்பஸைச் சிறையில் அடைத்தான்; பலவிதக் கொடுமைகளுக்குள்ளாக்கினான். பிறகு நியூனலை வற்புறுத்தி மணம் புரிந்து கொண்டான்.

சித்ரவதைக்கும் சொல்லொணாக் கொடுமைக்கும் ஆளான பிறகு ரேம்பஸ்—போர், புயல், உள்ளக் கொந்தளிப்பு இவைகளையெல்லாம் அநுபவித்துக் கடைசியில் எதிர்பாராதவிதமாக எகிப்து நாட்டுப் பாதுஷாவானான். உண்மைக் காதலர்கள் ஒன்று சேர்ந்தனர்.

சோகம், வீரம், காதல்—இவையெல்லாவற்றுக்கும் மேலாகத் தியாகம், இப்படி ஒன்றை ஒன்று முண்டியடித்துக் கொண்டு வரும் உணர்ச்சி அலைகளின் மயமான இந்த இணையற்ற கதையை எழுதியவர், ஸ்ரீசுதர்சன். படிப்பவருக்குச் சுவாரஸ்யம் சிறிதும் குன்றாதமுறையில் உணர்ச்சிததும்பும் தமிழில் மொழி பெயர்த்தவர் ஸ்ரீ ரா. வீழிநாதன்.

பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை—18. விலை. ரூ. 3—0—0

ஆங்கிலக் கவிதை மலர்கள்

ஒரு பாஷையிலுள்ள கவிதையை இன்னொரு பாஷையில் மொழிபெயர்ப்பது கஷ்டம். அந்தச் சிரம சாத்தியமான காரியத்தை ஸ்ரீமான் பொ. திரிகூட சுந்தரம் பிள்ளையவர்கள் சாதித்திருக்கிறார். ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றை உரை நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். பிரசுரம்: காந்தி நிலையம், தியாகராயநகர், சென்னை-17. விலை ரூ. 1—12—0.

உணவும் வாழ்வும்

நோயற்ற வாழ்வு வாழ மருந்து இல்லாத இயற்கை வைத்திய முறைதான் சிறந்தது. அம்முறையில் நீண்டநாள் அநுபவம் பெற்றிருக்கும் ஸ்ரீ பிஷு இந்நூலில் இயற்கை வைத்திய முறையை நன்கு விளக்கியிருக்கிறார். கிடைக்கும் இடம்:— சரஸ்வதி சங்கம், 23, பிடாரியார் கோயில் தெரு, ஜி. டி. சென்னை; விலை ரூ. 1-8-0.

போன்ஸ்லே வம்ச சரித்திரம்

தமிழ் மக்கள் கலை ஆர்வம் மிகுந்தவர்கள்; சிற்பக் கலையில் சிறந்து விளங்கினார்கள்; அறிஞர்களையும் கலைஞர்களையும் ஆதரித்தார்கள்—என்பது போன்ற பல விஷயங்கள் நமது தமிழ் நாட்டு ஆலயக் கற்கள் கூறும். தஞ்சை பிருகதீசுவரர் கோயில் கல்வெட்டுகள் மகாராஷ்டிர மன்னர்களின் போன்ஸ்லே வம்ச சரித்திரத்தையே கூறுகிறது. வீர சிவாஜியின் சரித்திரமும் அவருடைய முன்னோர் பின்னோர்களின் சரித்திரமும் அந்தக் கல்வெட்டுக்கள் மகாராஷ்டிர மொழியில் கூறுகின்றன. இந்தப் பணியைச் செய்தவர் சரபோஜி மன்னர். இப்பொழுது அந்தக் கல் வெட்டுக்களை தஞ்சை சரஸ்வதி மகால் புத்தகசாலைக் கமிட்டியார் புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வம்ச சரித்திரம் மகாராஷ்டிரம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இருக்கிறது.

மகாராஷ்டிர மொழியிலிருந்து சரஸ்வதி மகால் லைப்ரேரியன் ஸ்ரீ வி. சீனிவாசாச்சாரியார், பி. ஏ., தமிழில் பெயர்த்திருக்கிறார். ஆங்கிலத்தில் எழுதியவரும் பிரசுரித்தவரும், சரஸ்வதி மகால் புத்தகசாலைக் கமிட்டியின் கௌரவக் காரியதரிசியான ஸ்ரீ எஸ். கோபாலன், பி. ஏ., பி. எல். அவர்கள். கிடைக்குமிடம்: சரஸ்வதி மகால் புத்தகசாலை, தஞ்சாவூர். விலை ரூ. 3.



உபாத்தியாயர்:—தாவர வர்க்கத்தைச் சேர்ந்ததை ஒன்று சொல்லு.

பையன்:—குரங்கு! சார்!

உபாத்தியாயர்:—குரங்கா?

பையன்:—ஆமாம், சார்! அது தானே மரத்துக்கு மரம் தாவுகிறது?

முக்கிய கேந்திரம்

ஜெயமணி

துருக்கி—3

முதலாவது உலக மகா யுத்தத்தின் விளைவாக, துருக்கி சாம்ராஜ்யத்தின் அறிகுறி கூட அறவே மறைந்தது! துருக்கி சர்க்கார் நிர்வாகமும் சீர்குலைந்தது. ஈராக் முதலிய அரபு நாடுகள் அப்போது நேச தேசங்களின் கட்சியில் இருந்ததால், துருக்கிக்கும் அரபு நாடுகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமற் போயிற்று.

துருக்கியின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிள்கூடப் பகைவர்களின் அதிகாரத்துக்கு உட்பட நேர்ந்தது. போரில் புலிகளாகத் திகழ்ந்த துருக்கியர்களின் தேசத்தில் எங்கு பார்த்தாலும் பிரிட்டிஷ், பிரஞ்சு, இத்தாலியத் துருப்புகள் இறுமாப்புடன் நடமாடிக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் ஒற்றர்கள் துருக்கி தேசம் எங்கும் அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

துருக்கி இராணுவமும் நிராயுதபாணியாக்கப் பட்டது. துருக்கி இளைஞர் கட்சித் தலைவர்களான என்வர் பாஷா முதலியோர் வெளி நாடுகளுக்கு ஓடி அஞ்ஞாத வாசம் செய்யலாயினர். துருக்கி பார்லிமெண்டும் கலைக்கப்பட்டது. அந்த நாட்டின் சிம்மாசனத்தில் பிரிட்டிஷாரின் பொம்மையான ஒரு சுல்தான் வீற்றிருந்தார்.

இவ்வாறாக, 1919-ம் வருஷ ஆரம்பத்தில் துருக்கி பாதாளத்தில் விழுந்து கிடந்தது என்றே சொல்ல வேண்டும். அப்போது 'ஐரோப்பாவின் நோயாளி' மரணமடைந்து விட்டதாகவே எல்லோரும் கருதினர். இனி துருக்கி தலை தூக்குவது மிகக் கடினம் என்றும் உலக மக்கள் முடிவு செய்தனர்.

துருக்கியின் நிலைமை இப்படி இருக்கையில் சமாதான உடன்படிக்கையை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்த வல்லரசுகள், துருக்கிக்குச் சொந்தமான பிரதேசங்களைப் பங்கு போட்டுக் கொள்ள இரகசிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்தன.

துருக்கி படுவீழ்ச்சியுற்றதெனினும், துருக்கி இளைஞர்களில் சிலர் மனத் தளர்ச்சி அடையவில்லை. விதி விட்ட வழி விட்டும் என்று வாளாவிருக்கவில்லை. அவர்கள் தங்கள் நாட்டை மறுபடியும் உத்தாரணம் செய்வதற்காக இரகசியமாய் வேலை செய்தனர். நேச தேசத்தினரின் நிர்வாகத்தில் இருந்த ஆயுத சாலைகளிலிருந்தே இரகசியமாகப் போர்த் தளவாடங்களைச் சேகரித்தனர்!

இவ்வாறு இரகசியமாக வேலை செய்த துருக்கி தேச பக்தர்களுக்கு முஸ்தபா கெமால் தலைவராக விளங்கினார். எனவே அவரை ஆங்கிலேயர்கள் வெறுத்தனர். ஆங்கிலேயர்களின் பொம்மையாக இருந்த சுல்தானும் வெறுத்தார். எனினும் அவர்கள் முஸ்தபா கெமாலையும் அவரது சகாக்களையும் பகிரங்கமாக எதிர்த்து நெருக்கடியை உண்டாக்கவும் விரும்பவில்லை.


கெமால் தலை நகரில் இருந்து கொண்டு 'தொந்தரவு' கொடுக்காமல் இருப்பதற்காக அவரைச் சுல்தான் அனடோலியாவில் இராணுவத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமித்து, அங்கே போக உத்தரவிட்டார்.

அப்போது அனடோலியாவில் பெரிய படை எதுவும் இல்லை. கெமால் பாஷாவைத் தந்திரமாக எங்கேயாவது அனுப்பிவிட வேண்டும் என்ற உத்தேசத்துடனேயே சுல்தான் அவ்விதம் செய்தார்.


கெமால் பாஷாவுக்கு விரோதமாகச் சுல்தான் செய்த அந்த சூழ்ச்சியே கெமாலுக்கு ஒரு வரப்பிரசாதமாக முடிந்தது! அதனால் துருக்கி தேசத்துக்கும் மக்களுக்கும் கதிமோட்சம் ஏற்பட்டது!

அனடோலியாவுக்கு அனுப்பப்பட்ட கெமாலும் அவரைச் சேர்ந்த ஒரு சிலரும் துருக்கியர்களிடையே தேச வெறியை உண்டாக்க முற்பட்டார்கள். மிகவும் ஜாக்கிரதையாகவும் இரகசியமாகவும் துருக்கி இராணுவ அதிகாரிகளைத் தங்கள் வசப்படுத்த இடைவிடாது முயற்சித்தார்கள்.

சுல்தான் பக்தர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் யாதொரு சந்தேகமும் ஏற்படாமல் இருப்பதற்காக கெமாலும் அவரது நண்பர்களும் தங்களைச் சுல்தானின் பிரதிநிதிகள் என்றே சொல்லிக் கொண்டிருந்தனர்.



கால் அடியில் நிறைய புல் இருந்தும், மாட்டை மனித சுபாவம் விடவில்லை.



துருக்கி தலைநகரான அங்காராவில் உள்ள கண்காட்சி சாலை மண்டபம்

ஆனால் அவர்கள் கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்து. அதாவது துருக்கி சுல்தானிடமிருந்து வரும் உத்தரவு எதையும் நிறைவேற்றுவதில்லை!

அப்போது துருக்கியில் ஆங்கிலேயர்கள் புரிந்து வந்த சூழ்ச்சிகளால் மனக் கொதிப்படைந்த துருக்கியர்களிடையே கெமால் பாஷாவின் இரகசியப் பிரசாரம் வெற்றியடைந்து வந்தது.

இச் சந்தர்ப்பத்தில்தான் எதிர்பாராத சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அச் சம்பவங்கள் துருக்கியர்களின் மனக் கொதிப்பு உச்ச நிலையை அடையச் செய்தன.

* * *

1919-ம் வருஷம் பிரிட்டிஷ் கப்பல்களில் ஏராளமான கிரீஸ் துருப்புகள் சென்று துருக்கியைச் சேர்ந்த ஸ்மிர்னாவில் திடீரென்று இறங்கின. அவைகளுக்கு பிரிட்டிஷ், பிரஞ்சு, அமெரிக்க யுத்தக் கப்பல்கள் உதவியாக இருந்தன.

கிரேக்கர்கள் துருக்கியில் இறங்கிய உடனே துருக்கியர்களையெல்லாம் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்ய ஆரம்பித்தார்கள். வெகு காலமாக அவ்விரு நாடுகளுக்கும் இருந்து வந்த பகையே கிரேக்கர்களின் கொடுமைக்குக் காரணம்.

கிரேக்கர்கள் அவ்வாறு துருக்கி மீது படையெடுத்துப் படுகொலை செய்திரா விட்டால்,—அவர்களுக்கு பிரிட்டன் முதலிய வல்லரசுகள் உதவி புரிந்திரா விட்டால், துருக்கி வெகு சீக்கிரத்தில் வீறு கொண்டு எழுந்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

கிரீஸ் துருப்புகள் செய்த கொடுமைகள் தான், துருக்கி மக்களைத் தங்களுடைய நிர்க்கதியான நிலைமையை நன்கு அறிந்து கொள்ளும்படி செய்தன.

ஒரு காலத்தில் தங்களுடைய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டுப் பணிந்து கிடந்த கிரேக்கர்கள் தங்கள் சகோதர சகோதரிகளைப் படுகொலை செய்யத் துணிந்தது துருக்கியர்களுக்குச் சொல்லொணா ஆத்திரத்தை உண்டாக்கியது. அதன் பயனாக, கெமால் பாஷாவின் தேசிய இயக்கம் நூறு மடங்கு அதிக பலம் பெற்றது.

அது வரையில் கெமால் பாஷாவின் கட்சியில் சேருவதா, வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்த துருக்கி இராணுவ அதிகாரிகள், கிரேக்கர்கள் புரிந்த அட்டூழியங்களைக் கண்டு மனம் துடித்து மேற்படி இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டார்கள்.

கெமால் பாஷாவின் கை நாளுக்கு நாள் ஓங்கி வருவதைக் கண்ட சுல்தானுக்கு எங்கு இறுதியில் தம்முடைய அதிகாரத்துக்கும் பதவிக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற பீதி உண்டாகியது. எனவே அவர் துருக்கி மக்களின் தேசிய உணர்ச்சியை நன்கு அறிந்து கொள்ளாமல், கெமால் பாஷாவைக் கைது செய்யும்படி உத்தரவிட்டார்.

அவ்வளவுதான்! சுல்தானுடைய விபரீதமான அந்த உத்தரவின் விளைவாக, துருக்கி முழுதும் மின்னல் வேகத்தில் பல சம்பவங்கள் நிகழலாயின.

1919-ம் வருஷம் செப்டம்பர் மாதம் அனடோலியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட துருக்கி ஜனப்பிரதிநிதிகளின் மகாநாடு நடந்தது. அதில் கெமால் பாஷாவின் தலைமையில் ஒரு நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

அச் சபையினர் சில நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தம் ஒன்றை நேச தேசப் பிரதிநிதிகளிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்தார்கள். துருக்கியின் சுதந்திரத்தைத் தாமதமின்றி அங்கீகரிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனைகளின் சாரமாகும்.


கெமால் பாஷா சபையின் துணிச்சலைக் கண்டு சுல்தான்கூட திகில் கொண்டார். தாம்கூடத் துணியாத ஒரு காரியத்தில் கெமால் பாஷா கோஷ்டியினர் ஈடுபட்டது சுல்தானுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இவ்வளவு துணிச்சல் உள்ள அவர்கள் இன்னும் என்ன செய்வார்களோ என்றும் சுல்தான் கதி கலங்கினார்.

எனவே அவர் உடனே புதிய பார்லிமெண்டைக் கூட்டுவதற்கு இசைந்தார். அதற்காகத் துருக்கி நாடெங்கும் தேர்தல்கள் நடத்தும்படியும் உத்தரவிட்டார்.

உங்கள் காரை ஓட்டுவதற்கு செலவு குறைவாகவே பிடிக்கும்

எப்படியேனும் நீங்கள் டன்லப் போர்ட் மாட்டி ஓட்டவேண்டும். அழகான தோற்றமும் அமைதியான ஓட்டமும் அளிக்கும் இந்த டயர்கள் உங்கள் பணத்திற்கு அதிகப்படியான மைல்கள் பிரயாணத்தைத் தரும். மேலும் இதிலுள்ள நாக்குப் பிடிக்கவல்ல ட்ரெட் மோல்தாரானது அதிக பக்ஷமான ரஸ்தா பிடிப்பையும், வழுக்கி விழாமல் தடுக்கும் குணத்தையும் அளிக்கவல்லது. டன்லப் போர்ட் தான் வேண்டுமென்று கேளுங்கள்.





டன்லப்

போர்ட் டயர்கள்

உழைப்புக்கென்றே தயாரிக்கப்படுகின்றன


DX 371 TM



வாயில் அணிவதால் உயரும் தோற்றம் (ந. 2)
கடாவ்
அழகு, குணம் வாய்ந்த
வாயில்கள்
ஸ்ரீ கடாவ் மகன்ஜீ ஸ்பின்னிங் & வீவிங் கம்பனி லிமிடெட்
மில்: பைகுலா, பம்பாய். ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜீ ஜேதா மார்க்கெட், கோவிந்த் செளக், பம்பாய் 2.
SISTA'S KM-(T)-48

குறிப்புக்கு ஒரு எண்

ஸிங்கர் 103 K 10
தையல் மெஷின்.



★ பூட்டுத்தையல் ★ கழலும் தையல் கோக்கி
★ ஒரே ஊசி ★ மாறி இயங்கித்துணியைத் தருவது.

தைக்கும்போது வேகமாயும், மேன்மையாயும் இருப்பதில் பெற்று விளங்கும் இது எல்லா விதமான உடைகளையும் தயாரிக்க ஏற்றவாறு டெய்லர்களுக்கும், உடை தயாரிப்போருக்கும் உதவுமாறு அமைக்கப்பட்டது. முக்கியமாக ஹோட்டல்கள், லாண்டரிகள், ஆஸ்பத்திரிகள், பள்ளிகள் இவற்றிற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

பிரத்தியேக அம்சங்கள்


கடினமற்ற இயக்கத்திற்கும், உறுதியான தையலுக்கும் கழலும் தையல் கோக்கி — துணியைப் பொருத்தித்தரும் சாதனம் நொடியில் மாற்றி அமைக்கக்கூடியது — கையினாலோ கருவியினாலோ தூக்கி அமைக்கக் கூடிய மிதியடி, பாக்கெட்டுகளைத் தவிர மற்றொட்டுத் தையல் வேலைகளுக்கும் மற்றும் பல வேலைகளுக்கும் மிக உகந்தது.

ஸிங்கர்*

* ஸிங்கர் மானுபாக்சரிங் கம்பெனியின் ஒரு டிரேட் மார்க்

LAS (B) TAMIL


Wisdom
HARD NYLON
உங்கள் புன்னகை பிரகாசிக்க —
சோபனமான புன்னகைக்கு ஆரோக்கியமான வெண்மையான பற்கள் அவசியம். இதற்கு விஸ்டம் உங்களுக்கு உதவட்டும்! பற்களுக்குக் கேடு உண்டாகும் இக்கட்டான பல் இடுக்குகளில் புகுந்து சுத்தம் செய்யுமாறு விஸ்டம் டூத் பிரஷின் குஞ்சங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரஷின் கைப்பிடி, பற்களைச் சுலபமாகச் சுத்தம் செய்ய உதவுகிறது. விஸ்டம் டூத் பிரஷ்கள், சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற சைஸ்களில் தயாரிக்கப்பட்டு தூசி தும்பு புகமுடியாத உறைகளில் விநியோகிக்கப்படுகின்றன.
ஏஜெண்டுகள்: ஜே. எல். மாரிஸன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி 6527, பம்பாய் 26 & கிளைகள்.
— விஸ்டம் உபயோகியுங்கள்
சரியான உருவில் அமைந்துள்ள நைலான் டூத் பிரஷ்
WT. 3Q


7-CLOCK
SLOTTED
BLADE
7-CLOCK
SLOTTED BLADE
7 o'clock
ஸெவன் ஓ'கிளாக் பிளேடுகள்

15 வருஷங்களுக்கு மேலாக

I.T.L.

ஐ·டி·எல்·தயாரிப்புகள்

வைத்தியர்களால் தவறாமல் சிபார்சு செய்யப்பட்டு வருகின்றதுடன், நம்பிக்கையாக உயர்தரமான பயனளிப்பதில் ஸ்திரமான கீர்த்தி பெற்று விளங்குகின்றன.

1. காட்லிவர் ஆயிலுடன் கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட்

2. கிளைப் ஸிரப்	5. ரேடிநுரின்	8. க்ளுகோனேட் D
3. ஐடியால்	6. ஜெலட்டின்	9. விடோமால்ட்
4. ஜெகோரால்	7. விடோபெரின்	10. ஹாலிபட்-டி காட்லிவர் ஆயில்

தயாரிப்பவர்கள் :
மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிட்.,
மல்லேஸ்வரம், பெங்களூர்.

விற்பனை ஏஜெண்டுகள் :
பெஸ்ட் அண்டு கம்பெனி லிட்.,
தபால் பெட்டி நெ 63. மதராஸ்.

Zam-Buk தசை, நோவுகள்

வலிகள், சுளுக்குகள் ஆகியவற்றை



ஜாம்பக் எவ்வளவு விரைவாகக் குணப்படுத்துகிறது பாருங்கள் !



ஜாம் - பக் வலிகளை மாயமாய் மறையச் செய்கிறது.


ஜாம்-பக் மூலிகை ஆயிண்ட்மெண்டை உங்கள் தசைக்குள் நன்றாகத் தேய்த்து விடுங்கள். அங்கே உள்ள நோவு, வலி, பிடிப்பு இவைகளை ஜாம் - பக்கிலுள்ள சிறந்த ஔஷதத் தைலங்கள் வெளியேற்றி விடுகின்றன. சுளுக்கிலிருந்து ஜாம் - பக் உங்களை விடுவிக்கிறது. ஜாம் - பக் உங்கள் தசைகளைக் கட்டாகவும், வலுவாகவும் இருக்கச் செய்கிறது. நமைச்சல், மற்றும் இதர சரும, மண்டை நோய்கள், மூலம் ஆகியவற்றிற்கு ஜாம் - பக் அதி அற்புதமான நிவாரணியாகும். வெட்டுக் காயங்கள், நெருப்புக் காயங்கள், சேற்றுப் புண், ரணங்கள், மண்டைச் சொறி, ஆறாத ரணங்கள், பூச்சிக்கடி முதலியவற்றை ஜாம் - பக் விரைவாகக் குணப்படுத்துகிறது.



ஜாம் - பக் உலகத்தின் சிறந்த சரும ஆயிண்ட்மெண்ட் மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பது உத்தரவாதம்

FZY 2 ஏஜண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

பயர்ஸ்டோன் டயரின் அமைப்பு





அதிநூதன சாதனங்கள்

அதிநூதனமான சாதனங்களும் நவீன முறைகளுமே பயர்ஸ்டோன் டயர்களை அமைப்பதில் கையாளப் படுகின்றன. இத்தகைய முக்கியமான வசதிகளே மிகக் குறைந்த செலவில் அதிகமான மைல்கள் உழைக்கக்கூடிய டயர்களை இன்று அளிப்பதற்கு மிகவும் உதவுகின்றன. பயர்ஸ்டோன் உங்களுக்கு உறுதி பந்தோபஸ்து, கம்பகம் இவற்றை நிச்சயப் படுத்துகிறது.



அதிக மைல்கள், சுகம், நாகரீகப் பாங்கு, பணத்திற்குறிய மதிப்பு ஆகிய பயன்களை பயர்ஸ்டோன் டயர்கள் வாங்கும்போது நீங்கள் அடைகிறீர்கள்.

Firestone

"கம் டிப்பிடு டயர் இது ஒன்றே"

L.A.S. (B)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392

Registered as a newspaper in Ceylon

